# உதயன்

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 324 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 29 திங்கட்கிழமை (15/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00

www.onlineuthayan.com





### படையினரின் நில அபகரிப்புக்கு எதிராகப் போராடி வரும்


# நல்லூர் பிரதேச சபை தலைவர் மீது தாக்கு

## கொக்குவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர்15

படையினரின் நில அபகரிப்புக்கு எதிரான ஆவணங்களை பொலிஸாரிடம் கையளித்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த நல்லூர் பிரதேச சபைத் தலைவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் சரமாரியான தாக்குதலை நடத்தி உள்ளனர்.

இந்தத் தாக்குதலால் காயமடைந்த நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பரமலிங்கம் வசந்தகுமார்



(வயது - 62) சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து நல்லூர் பிரதேச சபைத் தலைவர் 'உதயனு'க்குத் தெரிவித்ததாவது:-

''நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான காணியை படைத்தரப்பு அபகரித்ததைத் தொடர்ந்து, அதற்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

பார்க்க பக்கம் 4

**2** 2020 ஆம் ஆண்டில் உலகில் இலங்கையிலும் ஜப்பானிலும் மட்டுமே சுத்தமான குடிதண்ணீரை பெறமுடியும்

**6** புதுக்குடியிருப்பில் மீளக்குடியமர்ந்தோரின் விவரங்களை படைத்தரப்பு திரட்டி வருவதால் மக்களிடையே அச்ச நிலை தோன்றியுள்ளது.

**8** இலங்கைத் தமிழர்கள் குறித்துப்பேச கருணாநிதிக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கடுமையாகச் சாடியுள்ளார்.

**9** பூமியை விட இரண்டு மடங்கு பெரிய மற்றும் பெரும்பாலான பகுதிகள் வைரங்களால் நிரம்பிய புதிய கிரகம் ஒன்றை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## தாக்குதலைக் கண்டித்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.15

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து ஜனநாயக சாத்வீகப் போராட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டம் காலை 8.30 மணிக்கு நல்லூர் பிரதேச சபைக்கு முன்னால் நடைபெறும்.

படையினரால் சட்டத்துக்கு முரணான வகையில் அபகரிக்கப்பட்ட காணியை மீட்பதற்காக போராடிய நல்லூர் பிரதேசசபைத் தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கண்டிப்பதோடு, இதனை மேற்கொண்டவர்கள் உடனடியாக சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரியுமே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## தமிழர்கள் சமத்துவ வாழ்வுக்கு இந்தியா நடவடிக்கை எடுக்கும்

### கூட்டமைப்புக்கு உறுதியளிப்பு

கொழும்பு, ஒக்.15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய ப் பயணம் வெற்றியளித்துள்ளது. எதிர்காலத்தில்ஈழத் தமிழர்கள் சமத்துவம், கண்ணியம், நீதி மற்றும் சுய மரியாதையுடன் வாழ்வதற்கு இந்திய அரசு பெருமுயற்சி எடுப்பதாக உறுதியளித்துள்ளது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், விநாயகமூர்த்தி, பொன். செல்வராஜா மற்றும் சுமந்திரன் ஆகியோர் இந்தியாவுக்கான நான்குநாள் உத்தியோகபூர்வ பயணத்தினை மேற்கொண்டனர். கடந்த 10ஆம் திகதி சென்ற இக்குழு நாடு திரும்பியுள்ளது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் - இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்கிருஷ்ணா, எதிர்க்கட்சித் தலைவி சுஸ்மா

பார்க்க பக்கம் 4

## கல்வித்துறைப் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு-கோரி பாதயாத்திரை

### 24 ஆம் திகதி 24 சங்கங்களுடன் களத்தில் குதிக்கிறது

கொழும்பு, ஒக்.15

கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை வலியுறுத்தி 24 தொழிற்சங்கங்களை இணைத்துக்கொண்டு எதிர்வரும் 24 ஆம் திகதி பாதயாத்திரைப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் தீர்மானித்துள்ளது.

கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான தமது போராட்டத்தின் முதற்கட்ட நகர்வே இந்தப் பாதயாத்திரை என்று குறிப்பிட்ட அதன் செயலாளர் ஜோசப்

பார்க்க பக்கம் 4

## எரிபொருள்களின் விலை ஒரு வாரத்தில் அதிகரிப்பு

### கட்டியம் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.15

2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை அரசு நாட்டில் முன்வைக்கின்ற கையுடன் அத்தியாவசியப் பொருள்களின் விலையையும் அதிகரிக்கின்றது.

இதனடிப்படையில் இன்னும் ஒருவார காலத்திற்குள் எரிபொருள்களின் விலையையும் அரசு அதிகரிக்கவுள்ளது - என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கட்டியம்

பார்க்க பக்கம் 4

## 2013 பட்ஜெட்டில் நிவாரணம் 'அவுட்'

கொழும்பு, ஒக்.15

வாழ்க்கைச் செலவு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதால் நிவாரணங்களைக் கோரி மக்கள் தொடர் போராட்டங்களை நடத்திவரும் நிலையில், இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளித்தபடி நிவாரணங்களை வழங்குவது சவாலானதாகும் என்று திறைசேரிச் செயலாளர் பேராசிரியர் பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும், மின் உற்பத்திக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளுமே இவ்வாறானதொரு நிலைமைக்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2013ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இன்னும் சில நாள்களே எஞ்சியுள்ள நிலையில் திறைசேரி செயலரின் இந்த அறிவிப்பு 'பட்ஜெட்டில்' மக்களுக்கு நிவாரணம் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இம்முறை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் வழமைபோல பாதுகாப்பு மற்றும் நகர

பார்க்க பக்கம் 4

## மினிபஸ் மோதி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணம் சுண்டுக்குளிச் சந்தியில் நேற்று தனியார் பஸ் ஒன்று மோதியதில் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் புதுவீதி, கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த கண்ணையா சிறிபவளராஜ் (வயது-44) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

ஏ-9 வீதி அகலிப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் புங்கன்குளம் சந்தியில் இருந்து யாழ்நகர் நோக்கிய பாதை தடை செய்யப்பட்டு மாற்றுப் பாதை ஊடாகவே

பார்க்க பக்கம் 4

### போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி

## அமெரிக்க நாடாளுமன்றில் பிரேரணை முறியடிக்க இலங்கை தீவிர பிரயத்தனம்

கொழும்பு, ஒக்.15

இலங்கைக்கு எதிராக அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள மேலுமொரு பிரேரணையை தடுத்து நிறுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர் தொடர்பில் தனிக் குழு அமைத்து, சுயமாகவும், சுதந்திரமாகவும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திய பிரேரணை ஒன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

ஜனநாயக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிச்சேல் கிரிமினால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இந்தப் பிரேரணை கடந்த 2011 ஆம்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலும் ஜப்பானிலுமே 2020 இல் சுத்தமான தண்ணீர்

யாழ்ப்பாணம், ஒக். 15

'' இன்னும் 8 வருடங்களில் - அதாவது 2020 ஆம் ஆண்டில் -உலகில் சுத்தமான நீரைக் கொண்டுள்ள நாடுகளாக இலங்கையும் ஜப்பானும் மட்டுமே இருக்கப்போகின்றன.'' - இவ்வாறு தேசிய பரிசுத்தமான உற்பத்திகள் மையத்தின் ஆலோசகரான சேன பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீர் தொடர்பான சர்வதேச ஆய்வொன்றில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாக கொண்டே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

'' உலகின் ஏனைய நாடுகளை விடவும் ஜப்பானிலும் இலங்கையிலும் நன்னீர் மாசடைதல் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இது தவிர புதிய நன்னீர் ஊற்றுக்களும், தொடர்ச்சியான மழை வீழ்ச்சியும், நன்னீர் சேமிப்பில் காட்டப்படும் தெளிவான கொள்கையும் இந்த இரண்டு நாடுகளிலும் சுத்தமான நீரை பேணுவதற்கு துணைபுரிகின்றன. இது தவிர தண்ணீரை மாசுபடுத்தும் தொழிற்சாலைக் கழிவுகளை, நீருடன் சேர விடாமல் தடுக்கும் நடவடிக்கையும் இலங்கையில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாகவே அடுத்து வரும் 8 வருடங்களுக்குள் ஏனைய நாடுகளில் 100 சதவீதம் சுத்தமான நீரை பெற்றுக் கொள்ள முடியாமல் போனாலும் இலங்கையிலும் ஜப்பானிலும் தொடர்ந்தும் சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.



இவ்வாறு எதிர்காலத்தில் சுத்தமான நீரைக் கொண்டுள்ள இரண்டு நாடுகளுள் இலங்கையும் ஒன்று என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஆயினும் நீர்வளத்தைத் தொடர்ந்தும் பேணிப்பாதுகாத்துக் கொள்வது நாட்டு மக்கள் அனைவரினதும் பெரும் பொறுப்பாகும்- என்றார். (ங-22)

## விவசாயிகளுக்கு வந்த உரம் வீணானது மழையில் கரைந்து

வீணாக மழையில் கரைந்து போன உர வகைகளால் அரசுக்கு சுமார் 2 கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது

கடந்த வருடம் பெரும் போக விவசாயச் செய்கையில் பாதிப்புற்றோருக்கு வழங்குவதற்கென தருவிக்கப்பட்ட 11 ஆயிரம் மெற்றிக் தொன் உரவகைகள் சிதைந்து அழிவுற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகள் பெரும்போக வேளாண்மையில் பாதிப்புகளை எதிர்கொண்டனர். இவர்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கு 11 ஆயிரம் மெற்றிக்தொன் உர வகைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. ஆயினும் அவை உரிய காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படாமையாலும், களஞ்சியப்படுத்தல் வசதியின்மையாலும் சிதைவுற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

குறித்த உரவகைகள் வத்தளையில் உள்ள இலங்கை உரக்கூட்டுத் தலைமையகத்தில் மெழுகுச் சீலைகள் விரிக்கப்பட்ட திறந்த வெளியில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. எனினும் கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையால் இந்த உர வகைகளில் கணிசமானவை கரைந்து போயுள்ளன, இதனால் சுற்றாடலுக்கும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வீணாக மழையில் கரைந்து போன உரவகைகளால் அரசுக்கு சுமார் 2 கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ங-22)

## தமிழக மீனவர் மீது மீண்டும் தாக்குதல்

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 8மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தை சேர்ந்த 8 மீனவர்கள் 2 படகுகளில் நேற்று முன் தினம் மீன்பிடிக்கச் சென்றனர். குறித்த மீனவர்கள் நேற்று முன் தினம் இந்தியக்கடற்பரப்பில்- 19-வது கடல் மைல் தொலைவில் -மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, திடீரென அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்களை சுற்றி வளைத்து தாக்கினர் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ங)

## பீரிஸ் குவைத் பயணம்



இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை குவைத் நாட்டுக்கு பயணமாகியுள்ளார். குவைத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள 'ஆசிய ஒத்துழைப்பு உரையாடல்' என்னும் தொனிப்பொருளிலான வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாக அவரின் இந்தப்பயணம் அமைந்துள்ளது.

ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் தொடர்பான 32 அங்கத்துவ நாடுகளின் அமைச்சர்கள், ஆசிய ஒத்துழைப்பு உரையாடல் உச்சி மாநாட்டுக்கான தயார்படுத்தலில் ஈடுபடுவர்.

இதன் போது அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ங)

## கூட்டமைப்பு எங்கு சென்று முறையிடினும் அதிகாரப் பகிர்வுக்கு இங்கு இடமில்லை!

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உலகில் எந்த மூலை முடுக்கெல்லாம் போய் முறையிட்டாலும், அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஒரு போதும் நாம் இடமளிக்கமாட்டோம். இதையும் மீறி சர்வதேச சக்திகளைத் திரட்டி அழுத்தம் கொடுக்க கூட்டமைப்பு முனையுமானால் அதற்கெதிராக நாட்டு மக்களைத் திரட்டி போராடுவோம்'' என்று அமைச்சர் விமல் வீரவன்ஸவைத் தலைமையாகக் கொண்ட தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.

கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலுக்கமைய நாட்டை நிர்வாகிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு தயாரில்லை என்றும் அம் முன்னணி தெரிவித்துள்து.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே தேசிய சுதந்திர முன்னணியின் மத்திய அரசியற்குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு-

புலிகளின் நகல் பிரதிநிதிகளாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர். புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும், அதன் செயற்பாடுகளுக்குக் கூட்டமைப்பு உயிர் கொடுத்து வருகிறது. இந்த நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்க முடியாது. இந்த விடயத்தில் நாம் உறுதியாக இருந்து விடுகிறோம். அரசும் இதே நிலைப்பாட்டைக் கொள்ளவேண்டும். எனவே, அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்கு சென்று முறையிட்டாலும், அதைப் பகிர்வதற்கு நாம் இடமளியோம். இதைக் கூட்டமைப்பு உணர வேண்டும். சர்வதேச சக்திகளைத் திரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுத்து புலிகளுக்குத் தேவையானவற்றைக் கூட்டமைப்புப் பெறமுயலுமானால் அதற்கெதிராக நாட்டு மக்களைத் திரட்டிப் போராடுவோம். - இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## புலமைப்பரிசில் மாணவிகளுக்கு ஓய்வூதியம்



ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி விசேட சித்தி எய்திய இரண்டு மாணவிகள் ஆரக்ஷாவ- (பாதுகாப்பு) எனும் விசேட ஓய்வூதியம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச சிறுமியர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன் தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து ஜனாதிபதியின் பாரியாரும் முதற் பெண் மணியுமான ஷிரந்தி ராஜபக்ஷவினால் இரு மாணவிகளும் கௌரவிக்கப்பட்டனர். தெரணியகலை தெல்மதுள்ள வித்தியாலயத்தைச் சேர்ந்த ரஷ்மி திமேஷா மற்றும் வரக்காபொலவைச் சேர்ந்த மாயின்னலுவ மகா வித்தியாலய மாணவியான ரசினி .திலினிக்கா மதுஷானி ஆகிய இருவருமே இந்நிகழ்வின்போது கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாணவிகளுள் ஒருவர் இரு கைகளும் ஒரு காலும் இல்லாத அங்கவீனர்.மற்றையவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மிக வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். (ங)

## தமிழ் சமூகத்தை திட்டமிட்டு அழிப்பதற்கே பரம்பரைக் காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன

### அச்சம் வெளியிடுகிறார் மன்னார் ஆயர்

மன்னார், ஒக்.15

எமது பரம்பரைக் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுவது தனிநபர் பிரச்சினை அல்ல. இது பெரும் சமூகப் பிரச்சினையுமாகும். எமது சமூகமே இதனால் அழிந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது. இவ்வாறு அச்சம் வெளியிட்டுள்ளார் மன்னார் மறை மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை.

உணவு, தன்னாதிக்கத்தை பாதுகாப்பதற்காகவும் மக்கள் உரிமையை உறுதிப்படுத்தும் நோக்குடன் காணி கொள்கைக்கு எதிரான தேசிய எதிர்ப்பு வாரம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு மன்னார் ஞானோதயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் தனித்துவம், சுதந்திரம் அனைத்தும் சூறையாடப்படுகின்றன. காணிகளைத் தாம் நினைத்தவாறு அபகரிப்பது மட்டுமல்லாமல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

பரம்பரை பரம்பரையாக எமது மக்கள் ஆண்டு, அனுபவித்த காணிகளை அரசு அபகரித்து வருகிறது. இது எங்கள் சமூகத்தை கூண்டோடு அழிக்கும் செயல். இதே போலவே கல்வித்துறையிலும் மறைமுகமான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இங்கே நடைபெறுவது தனிநபர் பிரச்சினை என்றோ, ஒரு பகுதி மக்களின் பிரச்சினை என்றோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் பிரச்சினையாக உருமாறி வருகிறது.

வெறும் காணி மட்டும் தானே பறிபோனால் போகட்டும் என்பது வேறு. இதனால் எமது சமூகம், இனம் அழிந்து போகும் பேரபாயம் தோன்றி உள்ளது. இப்பகுதியில் பரம்பரையாக வாழ்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து வாழ முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களது உரிமைகளை வேறு யாரோ அனுபவிக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.




மன்னார் முள்ளிக்குள மக்கள் அந்தப் பிரதேசத்தில் பரம்பரையாக வாழ்ந்தவர்கள் அந்தக் கிராமத்தின் பழைமை வாய்ந்த குடிமக்கள். ஆனால் அவர்கள் தற்போது வசதிகள் அற்ற காட்டுப் பிரதேசத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் - என்று ஆயர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் மானியத்தில் பாரபட்சம் உள்ளூர் மீனவர்கள் பெரும் பாதிப்பு

*கிளிநொச்சி, ஒக்.15*

*கொக்கிளாய் பகுதியில் தொழில் புரியும் மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதால் உள்ளூர் மீனவர் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது. முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதி கடற்றொழிலாளர்களுக்குரிய எரிபொருள் மானியம் இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் சுமார் 250 வரையான கடற்றொழிலாளர்கள் தொழில் செய்து வருகின்றனர். இந்த நிலையில் இவர்களின் எரிபொருள் மானியம் இதுவரை வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது. அதனால் இவர்கள் கூடிய விலையில் எரிபொருள்களைப் பெற்றுத் தொழில் செய்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொக்கிளாய்ப் பகுதியில் சுமார் 100 படகுகளில் தென்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொழில் செய்து வருகின்றனர். இதேவேளை சுமார் 350 படகுகள் கரையோரங்களில் தொழிலின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இவை யாவற்றுக்கும் எரிபொருள் மானியம் வழங்கப்படுவதாகத் தெரிகின்றது. இந்தப் பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாமையால் அவர்களின் தொழில்சார் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் மீன்வளம் அதிகளவில் உள்ளது. இதனால் தென் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் இங்கு அதிகளவில் தொழில் புரிகின்றனர்.

இதேவேளை உள்ளூர் மீனவர்கள் பாரபட்சமான முறையில் நடத்தப்படுவதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-6)



புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வின் போது பாடசாலை அதிபர் செல்வி ஆர்.பேரின்பராணி மங்கல விளக்கேற்றுகிறார். அருகில் அருகே பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பிரதேச இராணுவ அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். (க-555)

## கண்டாவளையில் இரு நிகழ்வுகள்

கண்டாவளை மகாவித்தியாலத்தின் பரிசளிப்பு விழாவும், ஆண்டு மலர் வெளியீடும் இன்று பிற்பகல் 1 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திருமதி கோமதி மதியழகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இப் பாடசாலையின் பழைய மாணவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் வைத்திய நிபுணருமான மு.சிறிதர் கலந்து கொள்வார், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சசி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராகக் கண்டாவளைக் கோட்டக் கல்வி அதிகாரி வீ.ராசகுலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வித்தியாலயத்தின் 11 ஆவது ஆண்டை முன்னிட்டு இவ் ஏற்பாடுகள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-422)

## சட்ட விரோத கடற்றொழிலால் உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு

சட்டவிரோதமாகத் தொழில் புரிவோருக்கும் முல்லைத்தீவு சிறுகடல் பகுதிகளில் அனுமதி வழங்கப்பட்டமையால் சிறுகடற்றொழில்களைச் செய்யும் உள்ளூர் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு, கொக்கிளாய் ஆறு, புளியமுனை ஆறு, கொக்குத் தொடுவாய் ஆறு, நந்திக்கடல், வட்டுவாகல் சிறுகடல் ஆகிய பகுதிகளில் கூட்டுவலை பாவித்தல், வெளியிணைப்பு இயந்திரப் படகுகள் பயன்படுத்துதல், அட்டை பிடித்தல், சங்கு சேகரித்தல் ஆகிய தொழில் நடவடிக்கைகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் தடைசெய்யப்பட்ட தொழில் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது எனவும் பாரம்பரிய முறையில் கடல் வாழ் உயிரினங்களுக்கும், நீர் வாழ் தாவரங்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வண்ணம் தொழில் புரிய வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு கடற்றொழில் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரமே இப் பகுதித் தொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் தென்னிலங்கையில் இருந்து வரும் கடற்றொழிலாளர்களால் சட்ட விரோதமான, தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று உள்ளூர் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(க-6)

## வவுனியா வர்த்தகர்கள் கலந்துரையாடல் நாளை

வவுனியா, ஒக்.15

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்களுக்கு முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வர்த்தகர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் சுமுகமான உறவை மேம்படுத்தும் வகையில் இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர கலந்து கொண்டு பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல வர்த்தகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொழில் திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி எல்.ஆனந்தநடராஜா கேட்டுள்ளார். (ம-400)

### கரைச்சி பிரதேச நடமாடும் சேவையில்
## காணிப் பிரச்சினை தீரும் என நம்பிய மக்களுக்கு ஏமாற்றம்

கிளிநொச்சி, ஒக்.15

கரைச்சி பிரதேச செயலகத்தில் காணி தொடர்பான நடமாடும் சேவையில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றியுள்ளனர்.

இதில் காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள், வேறு துறைசார் அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் பிரதேச செயலர் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்வதற்கென கரைச்சி பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் மக்கள் வந்திருந்தனர். தமது காணிகளுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை அவர்களிடத்தில் நிறைந்திருந்ததைக் காண முடிந்தது.

இதேவேளை அங்கு வந்திருந்த மக்களிடத்தில் விண்ணப்பப் படிவமொன்று வழங்கப்பட்டது. இதனை நிரப்பிய பின்னர் பிறிதொரு நாளில் அதனை பூரணப்படுத்திக்கொண்டு வருமாறும் கூறப்பட்டது. இதனால் உடனடியாகத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கையில் அங்கு வந்திருந்த மக்களிடையே ஏமாற்றம் ஏற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த நடமாடும் சேவைக்கு வந்திருந்த வந்த மக்களிடையே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவைக்கு வந்திருந்த கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த இளம் விதவையான சுதர்சன் சர்மிளா என்பவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இவரது கணவர் புதுமாத்தளனில் ஷெல் வீச்சில் காலமானார்.

மேலும் கிளிநொச்சியைச் சேர்ந்த சிறிய குழந்தையொன்றின் பவுண் காப்பும் திருடப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் கலந்து கொள்வதற்கென இராமநாதபுரம், வட்டக்கச்சி, ஆணைவிழுந்தான், அக்கராயன் ஆகிய இடங்களிலிருந்தும் மக்கள் மழையில் நனைந்தவாறு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-426)

## ஒலுமடு பாடசாலை மாணவர்கள் பாராட்டிக் கௌரவிப்பு

நெடுங்கேணி, ஒக்.15

நெடுங்கேணி ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இருவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நெடுங்கேணி கல்விக் கோட்டத்திலுள்ளது. இந்தப் பாடசாலையைச் சேர்ந்த மாணவி சு.தனுசா 159 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 110ஆவது இடத்தையும் க.ரேணுகாந் 152 புள்ளிகளைப் பெற்று 197ஆவது இடத்தினையும் பெற்றுள்ளனர்.

ஒலுமடு பாடசாலை பின் தங்கிய பிரதேசத்தில் இருந்தாலும், இவ்விரு மாணவர்களையும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்த வகையில் ஆசிரியர்களாலும் பழைய மாணவர்களாலும் பெற்றோர்களாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு கடந்த 9ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்கு பாடசாலையில் இடம்பெற்றது.

இவர்கள் இருவருக்கும் நினைவுச் சின்னங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் கு.விமலேந்திரன் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். விருந்தினர்களாக வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி ப.கணேசலிங்கம், பிரதேச செயலர் க.பரந்தாமன், நெடுங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி விநாயகமூர்த்தி மற்றும் நெடுங்கேணிப் பிரதேச இராணுவ அதிகாரி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-435)

## நிதியுதவி

முல்லைத்தீவுப் பகுதியில் தீயில் எரிந்த வீட்டு உரிமையாளருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நந்திக் கடற்கரையில் வசித்து வந்த குடும்பம் ஒன்றின் வீடு ஒன்று கடந்த மாத இறுதியில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. இதனையறிந்து அப்பகுதிக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா 5 ஆயிரம் ரூபா நிதியை அந்தக் குடும்பத்துக்கு வழங்கினார். (க-6)

## பாராட்டு விழா

கிளிநொச்சி செல்லியாதீவு அ.த.க.பாடசாலையின் அதிபர் சேது பாண்டியன் அம்பிகைபாகன் பதவியுயர்வு பெற்றமையை முன்னிட்டு பாராட்டு விழாவொன்று இன்று முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி. த.பிறைசூடி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக [illegible] கோட்டக் கல்விப் பணிப்பாளர் [illegible] கலந்து கொள்வார். (க-14)

### பெரு மழை ஆரம்பிப்பதற்கு முன்னர்
## நிரந்தர வீடுகள் அமைத்துத் தருமாறு மீள்குடியமர்ந்துள்ள மக்கள் கோரிக்கை

வவுனியா,ஒக்.15

''மீளக்குடியமர்த்தப்பட்ட தமக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தரப்படவில்லை. பெருமழை ஏற்பட்டால் எமதுபாடு அதோ கதிதான்''

இவ்வாறு மனம் வெதும்புகின்றனர் மந்துவில் மல்லிகைத்தீவு மற்றும் ஆனந்தபுரம் பகுதி மக்கள்.

**மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த மக்கள் தறப்பாள் மூலம் தற்காலிக கொட்டகைகள் அமைத்தும், மரநிழல்களிலும் வசித்து வருகின்றனர்.**

இறுதிக் கட்ட போர் இடர்களால் இடம் பெயர்ந்து மனிக்பாம் நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த சுமார் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டன.

இறுதிக் கட்டப் போர் இடர்களைத் தொடர்ந்து இந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான வீடுகள் முற்றாகச் சேதமடைந்து கட்டட இடிபாடுகளுடன் குப்பை மேடுகளாகக் காணப்படுகின்றன.

இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தறப்பாள் மூலம் தற்காலிக கொட்டகைகள் அமைத்தும் மர நிழல்களிலும் வசித்து வருகின்றனர்.

தற்போது பருவ மழை ஆரம்பித்துள்ளதால் பெரு மழை காலங்களில் தற்காலிக கொட்டகைகளில் வசிக்க முடியாத நிலை ஏற்படும்.

பெருமழை ஆரம்பமாவதற்கு முன்னர் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கோ அல்லது தற்காலிக கொட்டகைகளுக்கு சிமெந்து நிலம் இடுவதற்கோ சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசருக்கு எதிராக குற்ற விசாரணை பிரேரணை!

## அரசின் சிரேஷ்ட சட்டஆலோசகர்கள் வலியுறுத்து

**எதிர்காலத்தில் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதாலேயே பிரதம நீதியரசருக்கெதிராக குற்ற விசாரணை பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது.**

கொழும்பு, ஒக்.15

பிரதம நீதியரசருக்கெதிராக குற்ற விசாரணை பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவருமாறு அரசின் சிரேஷ்ட சட்ட ஆலோசகர்கள் சிலர் அரச தலைமையிடம் வலியுறுத்தியிருப்பதாக உயர்மட்ட அரச வட்டாரங்கள் மூலம் நேற்றுமுன்தினமிரவு தெரியவந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்குமிடையில் எழுந்துள்ள பனிப்போர் தீவிரமடைந்திருக்கும் ஒரு சூழ்நிலையில் இந்த வலியுறுத்தல் வழங்கப்பட்டிருப்பது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை உருவாக்கியிருக்கிறது.

நீதித்துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்காக, நீதிச்சேவைகள் ஆணைக்குழுவினரை பேச்சுக்கு வருமாறு அரசு விடுத்த அழைப்புக்கு மேற்படி ஆணைக்குழு சாதகமான பிரதிபலிப்பை வெளிப்படுத்தவில்லை.இது தொடர்பில் நீதிச் சேவைகள் ஆணைக்குழு அறிக்கையொன்றை விடுத்ததை அடுத்து இரு தரப்புக்குமிடையில் கருத்து முரண்பாடு உருவானது.

அதேசமயம், திவிநெகும சட்டமூலம் தொடர்பான தனது அபிப்பிராயத்தை உயர்நீதிமன்றம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பியதன் மூலம் அரசமைப்பின் சம்பிரதாயங்களை உயர்நீதிமன்றம் மீறியுள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷவும் கடந்த வாரம் சபையில் விசேட அறிவிப்பொன்றை விடுத்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில், நிறைவேற்று அதிகாரத்துடனும், நாடாளுமன்றத்துடனும் நீதித்துறை மோதக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதால் இந்த நிலைமை எதிர்காலத்தில் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதாலேயே பிரதம நீதியரசருக்கெதிராக குற்ற விசாரணை பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வர வேண்டுமென அரசின் சட்ட ஆலோசகர்கள் ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

மேற்படி குற்ற விசாரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற (simple majority ) சாதாரண பெரும்பான்மை ஆதரவு போதுமென்றும் ,அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதால் அது குறித்து கவலை கொள்ளத் தேவை இல்லையென்றும் அந்த சட்ட ஆலோசகர்கள் அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த குற்ற விசாரணை பிரேரனைக்குத் தேவையான ஆவணங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் சில சிரேஷ்ட சட்ட நிபுணர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## 2013 பட்ஜெட்டில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அபிவிருத்தி அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தையும் விட இம்முறை இத்தொகை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள திறைசேரிச் செயலாளர் கூறியுள்ளவை வருமாறு:-

மக்களுக்கு உறுதியளித்த நிவாரணங்களை இம்முறை வரவு - செலவுத் திட்டத்தினூடாக வழங்குவது சவாலானதாகும். பூகோள பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், மின்சக்தி அதிகமாக நுகரப்படுவதால் ஏற்படும் கிரயங்கள் ஆகியவை காரணமாகவே இந்தச் சவால் ஏற்பட்டுள்ளது.

நீர்மின் மாத்திரம் இலங்கையின் தேவைக்குப் போதுமானதல்ல என்பதை அண்மையில் ஏற்பட்ட வறட்சியின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. மின்சக்தித் தேவை அனல்மின் நிலையத்தினூடாகவே நிவர்த்திசெய்யப்பட்டது. இதற்கு அதிக செலவினங்கள் ஏற்பட்டன.

பிராந்தியத்தின் சக்திமிக்க பொருளாதார நாடுகளான சீனா, இந்தியா ஆகியவற்றிலும் மின் உற்பத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதால் அந்நாடுகளினதும் பொருளாதாரம் வீழ்ச்சியைக் கண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## கல்வித்துறைப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஸ்டாலின், குறித்த போராட்டம் தொடர்பில் கல்வியமைச்சின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் உட்பட இதர ஆசிரியர் சங்கங்கள் குறித்த போராட்டத்தில் குதிக்கவுள்ளன. அதேவேளை, ஏனைய சில தொழிற் சங்கங்களும் தமது ஆதரவை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

24 ஆம் திகதி இராஜகிரியவிலிருந்து ஆரம்பமாகும் நடைபவனி கல்வியமைச்சு வரை வரவுள்ளது. அடையாள தொழிற் சங்கமாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்குத் தீர்வு இல்லையேல் தொடர் போராட்டம் வெடிக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்தார் ஜோஸப் ஸ்டாலின்.

அதிபர்களின் இடைக்கால சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், கல்வித்துறைக்கு 6 சதவீத ஒதுக்கீடு, ஆசிரியர், அதிபர்களின் பதவியுயர்வு, கல்வியில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது ஆகியன உட்பட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தே பாதயாத்திரை இடம்பெறுகின்றது.

## அமெரிக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட போதும், அதன் மீதான வாக்கெடுப்பு இடம்பெறவில்லை.

இந்த நிலையில் எதிர்வரும் ஜனவரிக்குள் இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, நிறைவேற்றிக் கொள்ள அதன் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த நிலையில் இலங்கையின் பிரதிநிதிகள் இந்த பிரேரணையை சமர்ப்பிக்காதிருக்கும் பொருட்டு, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுகளை முன்னெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் ஜாலிய விக்ரமசூரிய தலைமையில் உயர் மட்ட குழு ஒன்று இது தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த பிரேரணையைத் தயாரித்த நாடாளுமன்ற உறுப்பினர் மிச்சேல் கிரிம் மீது போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கவும், இலங்கை அரசு தயாராகி வருகிறது என வெளியுறவுகள் துறை அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எரிபொருள்களின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கூறியுள்ளது.

அரசின் முறையற்ற பொருளாதாரக் கொள்கையினாலும் இயலாமையினாலும் நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது. நாட்டில் சமாதானம் நிலவுகின்றது என்று அரசு கூறுகின்றது. அப்படியானால் சமாதானத்தின் பிரதிபலன் எங்கே? அது உயர்வர்க்கத்தினருக்கு மட்டும்தானா எனக் கேள்வி எழுப்பிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அரசு தமது இயலாமையை முழுமையாக ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2013 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தை அரசு நாட்டில் முன்வைக்கின்ற கையுடன் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்கின்றது. இதனடிப்படையில் நேற்று (நேற்றுமுன்தினம்) 50 கிலோ சீமெந்து பக்கெட்டின் விலையை 68 தொடக்கம் 85 ரூபாவாலும், கோழி இறைச்சி ஒரு கிலோவின் விலையை 30 ரூபாவாலும் அதிகரித்தது. இன்னும் நான்கு, ஐந்து நாட்களுக்குள் டீசல், பெற்றோல் ஆகியவற்றின் விலைகளை 10 ரூபாவால் அரசு அதிகரிக்கும். டீசல், பெற்றோலின் விலைகள் அதிகரிக்கப்படாதெனில் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அவற்றின் விலைகள் அதிகரிக்கப்படாது எனக் கூறவேண்டும்.

அரசின் முறையற்ற பொருளாதாரக் கொள்கையினாலும், இயலாமையினாலும் நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. நாட்டின் கடன்தொகை 6 ஆயிரத்து 950 பில்லியனாக அதிகரித்துள்ளது. எஜின் சூது கொடுக்கல் வாங்கல் திட்டம் நன்றாக இருக்கின்றது. அதைத் தொடர்ந்தும் மேற்கொள்ளலாம் என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறித்த நிறுவனத்திற்குத் தான் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். இதுபோன்ற செயற்பாடுகள்தான் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கின்றன. கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் எரிபொருள் விலை தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. அரசின் அந்தச் செயல்தான் இன்று நாட்டின் நீதித்துறைமீது அச்சுறுத்தல்கள் உக்கிரமடைவதற்குக் காரணமாகியுள்ளன.

நாட்டின் விமானசேவை, மின்சாரசபை ஆகியன நாளாந்தம் நட்டத்தில் இயங்குகின்றன எனக் குறித்த நிறுவனங்கள் செய்தி வெளியிடுகின்றன. இந்த நிறுவனங்களின் நட்டத்தை ஈடுசெய்வதற்காகத்தான் அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரித்து நாட்டு மக்கள் மீது சுமையை ஏற்றுகின்றது.

நாட்டில் சமாதானம் நிலவுகின்றது என அரசு கூறுகின்றது. அப்படியெனில் அந்த சமாதானத்தின் பிரதிபலன் எங்கே? நாட்டின் உயர்வர்க்கத்தினர் மட்டுமே சமாதானத்தின் பிரதிபலனை அனுபவிக்கின்றனர்.

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் எங்கே? அவரிடமிருந்த ஆயிரத்து 800 கோடி ரூபா பணம் எங்கே? யுத்த காலத்தில் இவர் புலிகள் இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர். ஆனால் இன்று அப்பாவித் தமிழ் மக்கள் துன்பத்திலிருக்கின்றனர். இவர் எங்கு இருக்கின்றாரென்றே தெரியவில்லை - என்றார்.

## மினிபஸ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாகனங்கள் பயணித்தன.

இந்த மாற்றுப்பாதை ஊடாக யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று சுண்டுக்குளி பகுதியில் எதிரே வந்த சைக்கிளுடன் மோதியது. இதில் சைக்கிளில் பயணித்தவர் படுகாயம் அடைந்தார். உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் அவர் உயிரிழந்துவிட்டார் என்பது தெரியவந்தது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய யாழ்.பொலிஸார் தனியார் பஸ்ஸின் சாரதியைக் கைது செய்ததோடு, பஸ்ஸையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் உரிய விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ங-4)

## தமிழர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஸ்வராஜ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய், இணைச் செயலாளர் ஸ்ரீங்கலா மற்றும் பலர் முக்கியஸ்தர்களை சந்திந்து கலந்துரையாடினர்.பிரதமர் மன்மோகன் சிங்கை இக்குழுவினர் சந்தித்தபோது, தமிழ் மக்களின் மீள் வாழ்வுக்கும், வாழ்வைப் புதுப்பிப்பதற்கும் இந்திய அரசு வழங்கிவருகின்ற உதவிகளுக்கு இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் நன்றிகளை தெரிவிப்பதாகக் கூறினர்.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முறைப்படி நடைமுறைப்படுத்துவதனூடாக இலங்கை மக்களுக்கிடையில் சமரசத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும், தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்றும், இலங்கை ஜனாதிபதியையும் அரசையும் இந்திய அரசு வலியுறுத்தி வருகின்றமைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றி தெரிவித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆக்கபூர்வப்படுத்துவதில் இலங்கை அரசு காட்டிவருகின்ற அசமந்தப் போக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசில் தீர்வொன்றை வழங்குவதில் இலங்கை அரசு காட்டிவருகின்ற பின்னடிப்புக்கும் தாங்கள் பெரிதும் மனம் வருந்துவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவினர் இந்திய அரசிடம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயங்களில் எந்தவித அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்காமல் சமத்துவம், கண்ணியம், நீதி மற்றும் சுயமரியாதையுடன் எதிர்காலத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்வதென்பது கேள்விக்குறியானது என உணர்வதாகவும், எனவே இந்த விடயம் தொடர்பில் இந்திய அரசு கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேலும் வலியுறுத்தியுள்ளது -என்றுள்ளது. (ங)

## நல்லூர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்ய கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்திருந்தது. இதனடிப்படையில் இன்று திங்கட்கிழமை குறித்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், இது குறித்து ஏற்கனவே கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பான விவரங்களையும் வழக்கு ஆவணங்களோடு சேர்க்க வேண்டியிருந்ததால் அவற்றைப்பெறுவதற்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுச் சென்றிருந்தேன். அங்கு முறைப்பாடு தொடர்பான பிரதியைப் பெறுவதற்கு சட்டத்தரணி ஒருவரது உறுதிப்படுத்தல் தேவையென்று பொலிஸார் தெரிவித்ததோடு வழக்குத் தொடர்பான ஆவணங்களையும் தருமாறு கேட்டனர்.

எனவே அது குறித்த ஆவணங்களின் பிரதிகளை பொலிஸாருக்கு வழங்கிவிட்டு எனது அலுவலகத்துக்கு சென்றேன். அதன் பின்னர் சிறிதுநேரம் கழித்து நான் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது பிற்பகல் 2.30 மணியளவில் ஆடியபாதம் வீதி, நந்தாவில் அம்மன் கோயிலுக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளில் என்னை இனந்தெரியாத இருவர் பின்தொடர்ந்தனர். ஆள் நடமாட்டம் குறைந்திருந்தபோது வேகமாக வந்த அவர்கள் என்னை உதைத்து தள்ளினர். அத்தோடு நில்லாமல் தம்முடைய மோட்டார் சைக்கிளிலிருந்து குதித்த தாக்குதலாளிகள், எனது முகத்தைக் குறி வைத்து கைகளால் சரமாரியாகத் தாக்கினர். இதனால் நிலைகுலைந்துபோய் கீழே சரிந்தேன். அப்போதும் ஆத்திரம் தீராதவர்களாக சப்பாத்துக் கால்களால் என்னுடைய நெஞ்சில் பல முறை மிதித்த பின்னர், நான் கொண்டுவந்த நில அபகரிப்பு வழக்குத் தொடர்பான ஆவணங்களையும் ஒரு தொகைப் பணத்தையும் எடுத்துக்கொண்டு தாக்குதலாளிகள் மறைந்துவிட்டனர்.

படையினரால் அபகரிக்கப்பட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான காணியின் உறுதி, மற்றும் குறித்த வழக்குத் தொடர்பான முக்கிய ஆவணங்கள் என்பனவே இவ்வாறு இனந்தெரியாதோரால் பறித்தெடுக்கப்பட்டன. என்மீது தாக்குதல் நடத்தியவர்களின் முகம் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவர்களை எங்கு கண்டாலும் நான் அடையாளம் காட்டுவேன். நேற்றுமுன்தினமும் (சனிக்கிழமை), சந்தேகத்துக்கு இடமான முறையில் இருவர் மோட்டார் சைக்கிளில் என்னைப் பின்தொடர்ந்திருந்தனர். ஆனால் நான் அதைப் பற்றி பெரிதாக எடுத்திருக்கவில்லை. எனக்கு தனிப்பட்ட முறையில் எதிரிகள் எவரும் இல்லை." என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸார் நேற்று நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவரிடம் வாக்குமூலத்தைப் பெற்றுச் சென்றனர். (ங-4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முன்வைத்த காலை பின்னுக்கு இழுப்பதற்கு மனம் வருமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் பூகோள காலப் பருவ மீளாய்வு அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில்-

இலங்கை அரசாங்கம் தனது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை (National Action Plan), செயலாக்குவதில் எட்டப்பட்ட முன்னேற்றத்தை, அங்கு சமர்ப்பிக்கும் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அனைத்துலக மனித உரிமைகளைக் கைக்கொள்வல், காணிகளை உரியவர்களிடம் திரும்பக் கையளித்தல், மீளக்குடியமர்த்தல், பொறுப்புக் கூறும் விடயங்கள் என்பன முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும். சம்பந்தப்பட்ட அந்தந்த அமைச்சுச் செயலாளர்கள் ஊடாகவும், அவர்களின் உதவியுடனும் வேலைத் திட்டங்கள் மதிப்பிடப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான செயற்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் கீழான வேலைத் திட்டங்களை, அவற்றுடன் சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரச தொண்டு நிறுவனங்கள் கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் மொஹான் தெரிவித்துள்ளார்.

அனைத்து உலகத்துக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் தண்ணீர் காட்டுவதற்காகத்தான் தேசியச் செயற்பாட்டுத் திட்டமா அல்லது நேர்மை நெறி சார்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் நிவாரணமும் வழங்குவதற்கான திட்டமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

போர் முடிவுற்று மூன்றரை வருடங்களும் கடந்து கொண்டிருக்கிறது. ஆனால் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் தானே குறிப்பிட்டுக் காட்டிய பணிகள் எதுவும், அரச சார்பில் இன்னமும் தலையெழுப்பித் தானும் காட்டவில்லை!

மனித உரிமைகள் என்றால் கிலோ என்ன விலை என்று மக்கள் கேட்கும் அளவுக்கு அது ஒளிந்து கிடக்கிறது! காணிகளை உரியவர்களிடம் திரும்பக் கையளித்தல் என்பது தலைகீழாகப் புதைக்கப்பட்டு வருகிறது!

இதனை மன்னாரில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில், ஆயர் வண.இராயப்பு ஜோசப் அடிகளார் காத்திரமான வகையில் தொட்டுக் காட்டியிருக்கிறார்.

எமது பரம்பரைக் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுவது தனிநபர் பிரச்சினை அல்ல. இது பெரும் சமூகப் பிரச்சினையுமாகும். எமது சமூகமே இதனால் அழிந்து போகும் அபாயம் தோன்றியுள்ளது.--

மக்களின் தனித்துவம், சுதந்திரம் அனைத்தும் சூறையாடப்படுகின்றன. காணிகளைத் தாம் நினைத்தவாறு அபகரிப்பது மட்டுமல்ல; மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.--

பரம்பரை பரம்பரையாக எமது மக்கள் ஆண்டு, அனுபவித்த காணிகளை, கரையோரப் பகுதிகளை எல்லாம் அரசு அபகரித்து வருகிறது. இது எங்கள் சமூகத்தை அழிக்கும் செயல். கல்வித்துறையிலும் மறைமுகமான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன-

இங்கே நடைபெறுவது தனிநபர் பிரச்சினை என்றோ, ஒரு பகுதி மக்களின் பிரச்சினை என்றோ பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இது பென்னம்பெரிய சமூகப் பிரச்சினையாக உருமாறி வருகிறது--

காணி தானே போனால் போகட்டும் என்பது வேறு. இதனால் எமது சமூகம், இனம் அழிந்து போகும் பேரபாயம் தோன்றி உள்ளது. இப்பகுதியில் பரம்பரையாக வாழ்ந்த மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வேறுயாரோ வந்து அனுபவிக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது--

மன்னார் முள்ளிக்குள மக்கள் அந்தப் பிரதேசத்தில் பரம்பரையாக வாழ்ந்தவர்கள். அந்தக் கிராமத்தின் பழைமை வாய்ந்த குடிமக்கள். ஆனால் இப்போது காட்டுப் பிரதேசத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்-- என்று தமது ஆதங்கத்தை மனம் திறந்து வெளிப்படுத்தி உள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கே முதலிடம் கொடுக்கப்படும். தேசிய பாதுகாப்புக் கருதி இராணுவத்தினருக்குத் தேவையான காணிகள் அரசினால் சுவீகரிக்கப்படும். அதன் பின்னரே மீளக் குடியமர்வு தொடர்பாக ஆராயப்படும் என்ற நிலைப்பாட்டையே அரசாங்கம் தனதாக்கிக் கொண்டுள்ளது.

அரசின் இந்தக் கொள்கையை முன்னுரிமை வழங்கி நடைமுறைப்படுத்துவதில் தென்னிலங்கைக்கு- சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களுக்கு- இரண்டாவது இடம் வழங்கிக் கொண்டு, தமிழர்களின் பூர்வீக நிலங்களைக் கபளீகரம் செய்வதற்கு முதலிடம் வழங்கப்படுகிறது.

இந்த இலட்சணத்தில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தில் 'காணிகளை உரியவர்களிடம் கையளித்தல்' என்ற அலகும் வர்ணம் பூசி அழகுபடுத்தப்பட்டுள்ளது!

அந்த வர்ணம் பூசப்படுவதற்கு முன்னமே, வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்கள் அமைந்திருந்த நிலம், புலம் ஆகிய இரண்டு வகைகளும், அரசாங்கத்தால், அதன் அதிகாரங்களைக் கொண்டு கபளீகரம் செய்யப்பட்டன; அது தொடர்கிறது.

அந்த ஆரம்பம் என்றுமில்லாதவாறு பெரும் வீச்சோடும், வினைத்திறனோடும் இப்போது சூக்குமமான முறையில் முழுங்கப்படுகின்றன.

பூர்வீக நிலம் புலங்களை தமிழ் மக்கள் சொந்தம் கொண்டாடவும் முடியாத எதேச்சாதிகாரம் வடக்கு, கிழக்கில் தாண்டவமாடுகிறது. இது விடயத்தை ஐ.நா. என்ன அகில உலகமே மனித உரிமை மீறல் என்றோ சர்வாதிகாரம் என்றோ கணிப்பிட்டாலும் அரசு தான் முன்வைத்த காலை பின்னுக்கு இழுக்குமா என்பது அசாத்தியமாகவே தோன்றுகிறது. தமிழினமே, ஐயகோ நீ என் செய்வாய்...?

# பெற்றோர், பாதுகாவலரின் கவனக்குறைவே சிறுவர்களின் பாதிப்புகளுக்குக் காரணம்

## வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக்.15

''சிறுவர்களின் உரிமை மீறல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு விடயங்களில் பெற்றோர் விழிப்புணர்வோடு கண்காணிக்க வேண்டும். பெற்றோர் பாதுகாவலரின் கவனக்குறைவே சிறுவர்களின் பாதிப்புக்களுக்கு காரணமாகி விடுகிறது''

இவ்வாறு கூறினார் வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் க.சந்திரபோஸ்.

பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் எஸ்.மோகனராசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு பிரதேச சபை உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

இன்றைய சிறுவர்களே நாளை சமூகத்தின் தலைவர்கள். அவர்கள் நற்பிரஜைகளாக உருவாக்கப்பட வேண்டும். உள நெருக்கடிக்கு உள்ளாகக்கூடாது. வறுமையில் சிக்கித் தவிக்கக் கூடாது.

பெற்றோர், பாதுகாவலர்கள் தமது பொறுப்பை அர்த்தமுள்ள முறையில் நிறைவு செய்ய வேண்டும். சிறுவர்களின் விடயத்தில் கண்காணிப்போடும் அக்கறையோடும் இருக்க வேண்டும். இவர்களின் அக்கறையின்மையும் பெரும்போக்கும்தான் சிறுவர்கள் துன்புறுத்தலுக்கும் உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிடுகின்றது.

சிறுவர்களின் கல்வி உரிமை கண்டிப்பான முறையில் பேணப்பட வேண்டும். சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதில் வேலை செய்விப்போர் சமூக விரோதிகளாகக் கொள்ளப்பட வேண்டியவர்கள்.

சிறுவர்களின் கல்வி உரிமை, போஷாக்கு, மனமகிழ்வான வாழ்க்கை என்பன உரிய முறையில் பேணப்பட வேண்டும்.

சிறுவர் உரிமையை உரிய முறையில் பேணுவது மேலான சமூகப் பொறுப்பு என்ற வகையில் பேணப்படவேண்டும்.

சிறுவர் வறுமை என்ற கோரப் பிடிக்கு உள்ளாகி கல்வி கற்காமல் இடை விலகுவதை பாடசாலைச் சமூகம் அனுமதிக்கக் கூடாது.

சிறுவர்களுக்கான கல்வி உரிமையை உரிய முறையில் வழங்குவதற்கு பாடசாலைச் சமூகம் முன்வரவேண்டும். வறுமையால் கல்வி வாய்ப்பை இழக்கும் சிறுவர்களுக்கு பொருத்தமான முறையில் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து கல்வியை தொடர்வதற்கு வசதிகள் செய்யப்பட வேண்டும்.- எனக் கூறினார். (ம-11)

# கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவானோருக்கு வடக்கு மாகாண அலுவலகங்களில் நியமனம்

அச்சுவேலி, ஒக்.15

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள பதவி ஆளணி வெற்றிடங்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வன்னிப் பெரு நிலப்பரப்புக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் I இல் இருந்து சேவை மூப்பு திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் தற்போது இருக்கும் பதவி, பொறுப்புக்களில் இருந்து மாற்றப்பட்டு புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் 12 கல்வி வலயங்கள் செயற்படுகின்றன. அவற்றில் பெரும் எண்ணிக்கையில் கல்வி நிர்வாக சேவைக்கான பதவி ஆளணி வெற்றிடமாக உள்ளன.

இந்த வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் இருந்து நியமனம் பெற்றவர்களில் கணிசமான தொகையினர் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர். கல்வி அமைச்சால் இவர்களுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண நிர்வாகம் இவர்களுக்குப் பொருத்தமான இடங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

# வீதிகளில் வெள்ளம் பாதசாரிகள் சிரமத்தில்

வரணி, ஒக்.15

வரணி குடத்தனை வீதியில் இது வரை புனரமைக்கப்படாத பகுதியில் தற்போது பெய்த மழை காரணமாக பல இடங்களில் வெள்ளம் நிரம்பிக் காணப்படுகிறது.

குடத்தனை 6 ஆம் கட்டைப் பகுதியில் இவ்வாறு பல இடங்களில் வெள்ளம் நிரம்பிய நிலையில் குழிகள் பல உள்ளன.

இந்த நிலையில் பயணிப்போர் இந்த வெள்ளத்தில் வீழ்ந்து எழ வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் வடமராட்சி கிழக்கில் உள்ள அலுவலகங்களுக்குச் செல்லும் அரச ஊழியர்கள் சேறு பூசப்பட்ட நிலையில் பயணிக்க வேண்டியுள்ளது.

வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி கிழக்குப் பகுதியை இணைக்கும் மிகக் கிட்டிய வீதியாக இது உள்ளது. இந்த நிலையில் நாளாந்தம் பல வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன.

சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இந்த வீதிப் பகுதி புனரமைக்கப்படவில்லை. கடந்த 2010 ஆம் ஆண்டு வரணிப் பிரதேசத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டது. மீதி 1.5 கிலோ மீற்றர் வரையான பகுதி இதுவரை புனரமைக்கப்படவில்லை. வீதி அபிவிருத்தி திணைக்களம் இது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் இந்த வீதியை புனரமைக்க வேண்டும் என பொதுமக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (ம-122)

# தாதிய மாணவர் பயிற்சி நெறிக்கு தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.15

சுகாதார அமைச்சால் தாதிய மாணவர் பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக, தாதிமார் சேவைப் பிரமாணத்தின் விதிகளுக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரியின் வயது எல்லை 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

கல்வித் தகைமை க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாமல் தமிழ்/ சிங்களம், கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கிய நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் விஞ்ஞான பாட நெறிக்குரிய உயிரியல், கணிதம் மற்றும் விவசாய விஞ்ஞான பாட நெறிக்குரிய அனைத்து பாடங்களும் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 05.10. 2012 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிடலாம்.(ம)

# விற்பனையாகாத வாகனங்களை 'மீள ஏற்றுமதி' செய்ய முடிவு

**இறக்குமதித் தீர்வைகளை மீள அளிப்பது குறித்து சுங்கத் திணைக்களம் சில உறுதி யான தகவல்களைப் பெறும் பட்சத்தில் 90 சதவீதமான சுங்க வரிகள் மீள அளிக்கப்படும்.**

கொழும்பு,ஒக்.15

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதில் இறக்குமதியாளர்கள் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். இதனால் அவர்கள் எதிர்நோக்கும் நட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் விற்பனையாகாத மோட்டார் வாகனங்களை 'மீள ஏற்றுமதி' செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சுங்கத் திணைக்களத்தின் இயக்குநர் நெவில் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் உட்பட ஏனைய இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை மீள ஏற்றுமதி செய்ய மோட்டார் வாகன வர்த்தகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை இறக்குமதித் தீர்வைகளை மீள அளிப்பது குறித்து சுங்கத் திணைக்களம் சில உறுதியான தகவல்களைப் பெறும் பட்சத்தில் 90 சதவீதமான சுங்க வரிகள் மீள அளிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்ந்தோர் விவரம் திரட்டுகிறது படைத்தரப்பு

## புதுக்குடியிருப்பில் மக்கள் அச்சத்தில்

வவுனியா,ஒக்.15

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களிடம் குடும்ப விவரங்களை படையினர் திரட்டி வருகின்றனர். எந்தவித முன்னறிவித்தல்களும் இன்றி படைத்தரப்பு இத்தகைய நடவடிக்கையில் இறங்கியுள்ளதால் பொதுமக்களிடையே அச்ச நிலை தோன்றியுள்ளது.

இறுதிக் கட்டப் போர் காரணமாக இடம்பெயர்ந்து பின் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ள மந்துவில், கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு கிழக்கு சிவநகர் உட்பட பல பகுதிகளிலும் இவ்வாறு குடும்ப விவரங்களைச் சேகரிக்கும் பணியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவ சிவில் அலுவலகத்தில் இருந்து வீடு வீடாகச் சிவில் உடையில் வரும் இராணுவத்தினர் வீடுகளில் தங்கியிருப்போரின் பெயர் விவரங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

அத்துடன் இறுதிக் கட்டப் போரின்போது காணாமற் போனவர்கள், அங்கவீனர்களாக்கப்பட்டோர், தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் ஆகியோரின் விவரங்களையும் திரட்டி வருகின்றனர்.

விவரங்களைப் பதிவு செய்யும் காரணம் தொடர்பாக

> மந்துவில், கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு இரணைப்பாலை,
> புதுக்குடியிருப்பு கிழக்கு சிவநகர் உட்பட பல பகுதிகளிலும் இவ்வாறு குடும்ப விவரங்களைச் சேகரிக்கும் பணியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வீடுகளுக்கு செல்லும் படையினரிடம் பொது மக்கள் கேட்ட போது, ஜனாதிபதி செயலகத்துக்குத் தகவல்கள் உடனடியாக அனுப்ப வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று படையினரால் கூறப்பட்டதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஆயினும் எதற்காக ஜனாதிபதி செயலகத்துக்கு இந்த விவரங்கள் அனுப்பப்பட உள்ளன என்பது குறித்து படையினர் எதுவும் தெரிவிக்கவில்லை. இதனால் இந்தப் பதிவில் ஏதேனும் மர்மங்கள் இருக்குமோ என்ற சந்தேகமும் அச்சமும் புதுக்குடியிருப்பு மக்களிடையே எழுந்துள்ளது. (ம-410)

# முத்துஐயன்கட்டு - யாழ்ப்பாணம் பஸ் சேவை அடிக்கடி நிறுத்தம்

## பெரும் சிரமப்படும் பயணிகள்

ஒட்டுசுட்டான், ஒக்.15

முத்துஐயன்கட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சேவையில் ஈடுபடும் பஸ் அடிக்கடி சேவையை நிறுத்துவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முத்துஐயன்கட்டிலிருந்து காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி இடம்பெறும் இந்தச் சேவை ஒழுங்கான முறையில் இடம்பெறாத நிலையில் யாழ். செல்லும் மக்களும் பிற்பகலில் வன்னி திரும்பும் மக்களும் தமது பயணத்தை நம்பி மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த சேவை ஒட்டுசுட்டான் மக்களுக்கு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-500)

# வவுனியாவில் குற்றச்செயல்கள் கட்டுப்படுத்த பொலிஸ் ரோந்து

## மூலை முடுக்குகளிலும் காவல்

வவுனியா, ஒக்.15

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் முகமாகப் பொலிஸாரின் ரோந்துப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

வவுனியாப் பகுதியில் அண்மைக் காலமாக பகல் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இலக்கத் தகடு அற்ற ஒட்டோக்களில் வரும் திருட்டு ஆசாமிகள் பெண்களின் தங்கச் சங்கிலிகளை அபகரித்த சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

இதனைஅடுத்து வவுனியா நகர் உட்படச் சகல பகுதிகளிலும் சைக்கிள்களில் வீதி ரோந்துப் பணிகளில் தினமும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். பகல், இரவு என்ற அடிப்படையில் ஒதுக்குப்புறமான மூலை முடுக்குகளிலும் இவர்கள் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வீதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான வாகனங்களை மறித்துச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ம-400)

# முத்துஐயன்கட்டு மக்களை விடாது துரத்தும் யானைகள்

ஒட்டுசுட்டான், ஒக்.15

முத்துஐயன்கட்டுப் பகுதியில் தொடர்ந்தும் யானைகள் அட்டகாசம் செய்து வருவதால் மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

இரவு வேளைகளில் வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்குச் செல்லும் நிலையில் இந்தப் பகுதி மக்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

முத்துஐயன்கட்டுப் பகுதியில் ஏற்கனவே இரண்டு கல் வீடுகள் உட்படத் தற்காலிக வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறித்த வீட்டு உரிமையாளர்களின் உடைமைகள் மற்றும் விதை தானியங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தொடர்ந்தும் யானைகள் கிராமங்களுக்குள் வருவதாகவும் மக்களைத் துரத்தி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் இரவு வேளைகளில் வீடுகளைவிட்டு வேறு இடங்களை நாடிச் செல்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த வீடுகளில் எஞ்சியுள்ள பொருள்கள் திருட்டுப் போகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ம-500)

# நடமாடும் சேவையால் இறப்பு, பிறப்பு பத்திரங்கள்



ஒட்டுசுட்டான், ஒக்.15

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று நீராவிப்பிட்டிக் கிராமத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இறப்பு, பிறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குவதற்கான நடமாடும் சேவையொன்று அண்மையில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் காணாமல் போன மற்றும் பதிவுகள் இல்லாதோருக்கும் உரிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

போர் இடர்களின் போது இழந்த அல்லது பதிவுகளை தவறவிட்ட அனைவருக்கும் நடமாடும் சேவை பயன்தந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதில் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ம-500)

**காத்திருந்து.. காத்திருந்து..**



*மல்லாவி நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருக்கை வசதிகள் செய்து தரப்படாமையால் பயணிகள் சிலர் கால் கடுக்க நிற்க, சிலர் நிலத்தில் அமர்ந்திருக்கும் அவலம். (க-415)*

# ஆண்டான்குளம் பாடசாலையின் நுழைவாயில் திறந்து வைப்பு

மன்னார்,ஒக்.14

மன்னார் ஆண்டான்குளம் பாடசாலையில் அமைக்கப்பட்ட பிரதான நுழைவாயில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையின் பழைய மாணவனாகிய தேசமான்ய சீ.எம்.எம்.யாசீன் தமது சொந்த நிதியிலிருந்து இந்தநுழைவாயிலை அமைத்து வழங்கியுள்ளார்.

இதனை வைபவரீதியாகத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வுக்குப் பாடசாலையின் அதிபர் ஜீ.அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார். முதன்மை விருந்தினராக மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் கலந்து கொண்டார்.

பாடசாலையின் முன்னாள் அதிபரான ஏ.அந்தோனிப்பிள்ளையும் நுழைவாயிலை அமைத்து வழங்கிய சீ.எம்.எம்.யாசீனும் நுழைவாயிலைத் திறந்து வைத்தனர்.

யாசீன் ஒரு இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவராகக் காணப்பட்ட போதிலும் இன, மதவேறுபாடுகளுக்கு அப்பால் சென்று ஆண்டான் குளம் பாடசாலைக்கு நுழைவாயிலையும், இந்தப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றைப் புனரமைப்பதற்குத் தமது சொந்த நிதியையும் ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# நெடுங்கேணிப் பிரதேச மாணவருக்கு வழங்கப்பட்ட 500 சைக்கிள்கள்

வவுனியா, ஒக்.15

நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை - இந்திய நட்புறவுச் செயற்றிட்டத்தின் கீழ் நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 29 கிராம சேவகர் பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கே சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன. நெடுங்கேணி உதவிப் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நெடுங்கேணிப் பிரதேச செயலர் எஸ். பரந்தாமன், ஸ்ரீ ரெலோ அமைப்பின் செயலாளர் எஸ். உதயராசா ஆகியோர் மாணவர்களுக்கான சைக்கிள்களை வழங்கினர். சுமார் 500 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க -ம-400)

# மறக்க முடியாத முள்ளிவாய்க்கால் பாடசாலைகளுக்கு இல்லை உதவிகள்

## மாணவர் நிலை குறித்து பெற்றோர் விசனம்

வவுனியா, ஒக்.15

வன்னிப் பிரதேசத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் என்பவற்றின் உதவிகள் எவையும் கிடைப்பதில்லை என்று பெற்றோர்களும் பாடசாலை சமூகத்தினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு வேண்டிய பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக மாணவர்களுக்கான சைக்கிள்கள், காலணிகள், பாடசாலைப் புத்தகப்பைகள் மற்றும் பாடசாலைக் கற்றல் உபகரணங்கள் என்பன முன்பு வழங்கப்பட்டன.

ஆனால், தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க பாடசாலை, வலைஞர்மடம் அ.த.க பாடசாலை, ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை, மாத்தளன் றோ.க.த.க வித்தியாசாலை ஆகியவற்றுக்கு இதுவரை எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொண்டு நிறுவனங்கள் இந்த மாணவர்களின் நலன் கருதிக் குறித்த பொருள்களை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(க -ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தனியாகச் செல்லும்வேளை தங்கநகை அணிவதைத் தவிருங்கள்

## யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா

வலி. வடக்கு, ஒக். 15

பெண்கள் தனிமையாகச் செல்லும் வேளைகளில் பெறுமதி மிக்க நகைகள் அணிந்து செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தனிமையாகச் செல்லும் போது பெறுமதிமிக்க நகைகளை அணிந்து செல்லும் பெண்களின் தங்க நகைகள் மோட்டார் சைக்கிள்களில் வருவோரால் அபகரித்துச் செல்லப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

**இத்தகைய வழிப்பறி போன்ற குற்றங்களை கட்டுப்படுத்த பொது மக்கள் பொலிஸாருக்கு தமக்கு தெரிந்த தகவல்களை வழங்கி உதவ வேண்டும்.**

பொலிஸார் தம்மாலான கடமையை முழுமையாக மேற்கொள்கின்ற போதிலும் ஒரு சில இடங்களில் இத்தகைய திருட்டுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

திருடர்களுக்குச் சந்தர்ப்பங்களை நாம் வழங்கக் கூடாது. இந்தவகையில் நகைகள் அணிந்து தனித்துச் செல்வதைப் பெண்கள் தவிர்ப்பதன் மூலம் திருட்டுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

அத்துடன் சந்தேகத்துக்கு இடமான முறையில் வீதிகளில் அலையும் மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்கள் மற்றும் ஆள் அடையாளங்களையும் பொது மக்கள் குறித்துக் கொள்ள வேண்டும்.

இத்தகையோரது நடமாட்டங்களைப் பொதுமக்கள் அவதானித்த இலக்கங்களைக் குறித்து வைப்பதன் மூலம் குற்றச் செயல்கள் இடம்பெறும் வேளைகளில் உரிய குற்றவாளிகளை இனம் காணல் சுலபமாக இருக்கும்.

இத்தகைய வழிப்பறி போன்ற குற்றங்களை கட்டுப்படுத்த பொது மக்கள் பொலிஸாருக்கு தமக்கு தெரிந்த தகவல்களை வழங்கி உதவ வேண்டும். இது குற்றவாளிகளை இனம் காணவும் கைது செய்யவும் உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-86)



நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக யாழ்.மாநகரசபைக்கு முன்பாக உள்ள நல்லூர் குறுக்கு வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளது. நகரின் பல்வேறு வீதிகளும் திருத்தியமைக்கப்பட்டு வரும் நிலையில் இந்த வீதி புனரமைக்கப்படாதது குறித்து இந்தப்பகுதியில் உள்ள குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-7)

## நாகதம்பிரான் ஆலயத்தில் திருட்டை அடுத்து பிராயச்சித்தம்

வடமராட்சி, ஒக்.15

வடமராட்சி கிழக்கு பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தை அடுத்து விசேட பிராயச்சித்த அபிஷேகம் நேற்று இடம்பெற்று மூலவிக்கிரகம் குறித்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி கிழக்கு பூர்வீக நாகதம்பிரான் ஆலயக் கூரை பிரிக்கப்பட்டு மூலஸ்தான விக்கிரகத்தின் கீழ் இருந்த இயந்திர தகடு, தங்க நகைகள், ரொக்கப் பணம் என்பன திருடப்பட்டிருந்தன.

வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக ஆலய பரம்பரை தர்மகர்த்தா சிதம்பரப்பிள்ளை இரஞ்சன் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அர்த்த மண்டபக் கூரை பிரித்து உட்சென்ற திருடர்கள் மூலஸ்தான விக்கிரகங்களைப் புரட்டி அதன் கீழ் வைக்கப்பட்டிருந்த தங்க இயந்திர தகடு, எழுந்தருளி தங்க நகைகள் மற்றும் அன்றாட செலவுகளுக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை ரொக்கப் பணம் உள்ளிட்ட மற்றும் பலபொருள்களைத் திருடியுள்ளனர்.

இருப்பின் திருட்டு போயுள்ள பொருள்கள் குறித்த முழு விவரம் என்னும் கிடைக்கவில்லை என்று தர்மகர்த்தா உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த இடத்துக்குச் சென்று கைவிரல் அடையாளம் போன்றவற்றைப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கடந்த காலப் போரால் பாதிக்கப்பட்ட இந்த ஆலயத்தில் கடந்த ஜூன் மாதம் கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

12 வருடங்களின் பின் அலங்காரத் திருவிழா நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-8)

## கொக்குவில் மயான தொட்டியில் தண்ணீர் பெறமுடியாத நிலை

வலி.வடக்கு. ஒக் 15

கொக்குவில் இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்லும் மக்களின் நன்மை கருதி பெரிய தண்ணீர்த் தொட்டி கட்டப்பட்டுள்ள போதிலும் அதில் இருந்து தண்ணீர் பெற முடியாத நிலமையே பல மாதங்களாகக் காணப்படுகின்றது.

இந்து மயானத்தில் கிரியைகளைச் செய்யச் செல்வோர் முப்பத்தைந்து அடிக்கும் மேற்பட்ட ஆழமான கிணற் றில் இருந்து பலத்த சிரமத்தின் மத்தியில் தண்ணீரை அள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்து மயானத்துக்கு பிரதேச சபையால் காவலாளி போடப்பட்டுள்ள போதிலும் ஒரு சிறிய நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பெற்று அதன் மூலம் குறிப்பிட்ட தண்ணீர் தாங்கியில் இரண்டு மூன்று நாள்களுக்கு ஒரு தடவை தண்ணீர் நிரப்ப முடியாத நிலைமை உள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-86)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட சந்தேகத்தில் நால்வரை கைது செய்த பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ். ரயில் நிலையக் கட்டடத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் நால்வர் யாழ். பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். ரயில் நிலையக் கட்டடத்தில் சூதாட்டம் நடைபெறுவதாகப் பொலிஸாருக்கு பொது மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸார் உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

பொலிஸாரைக் கண்டதும் சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தப்பி ஓட முற்பட்ட போதிலும் பொலிஸார் நான்கு சந்தேக நபர்களையும் தப்பி ஓடவிடாது கைது செய்து யாழ்ப்பாணம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்(ம-86)

## மானிப்பாயில் ஆசிரியை வீட்டில் தாலிக்கொடி, பணம் திருட்டு

### போலி நகைகளும் தப்பவில்லை

வலி.தென்மேற்கு, ஒக்.15

வீட்டில் உள்ள அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் இரவு நேரம் வீட்டுக்குள் தந்திரமாக உட்புகுந்த திருடர்கள் அங்கு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தாலிக் கொடி, சங்கிலி உட்பட சுமார் 15 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளையும் கைத் தொலைபேசி, ஒரு தொகைப் பண்ம் ஆகிவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்துணிகரமான திருட்டு மானிப்பாய் இந்துக் கல்லூரி வீதியில் உள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் இடம் பெற்றுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரான இவர் மானிப்பாயில் உள்ள ஒரு வாடகை வீட்டில் குடும்பத்துடன் வாழ்ந்து வருகி றார். சம்பவதினம் பகல் இவர் மானிப்பாயில் உள்ள வங்கி ஒன்றுக்குச் சென்று ஒருதொகைப் பணத்தை எடுத்து வந்துள்ளார்.

இதேவேளை, அன்று மாலை 3 மணியளவில் வெற்றுப் போத்தல்கள் கேட்டு ஓட்டோவில் இருவர் ஓட்டோவில் வந்து சென்றுள்ளனர் என்று கூறப்பட்டது. அன்று இரவு குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

அலுமாரியில் பாதுகாப்பாக வைத்திருந்த தாலிக் கொடி, சங்கிலி உட்பட 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், கைத்தொலைபேசி, ஒரு தொகைப் பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர் திருடர்கள்.

ஆசிரியை வழமை போல் அதிகாலை 4 மணிக்கு எழுந்து கைத்தொலைபேசியை எடுப்பதற்காக அறைக்குச் சென்றபோது அறை திறந்திருப்பதையும் அலுமாரியில் உள்ள பொருள்கள் அனைத்தும் சிதறிக் கிடப்பதையும் கண்டு அதிர்ச்சியடைந்தார். மறைத்து வைக்கப்பட்டிருந்த நகைகள் அனைத்தும் திருட்டுப் போயிருந்தமை தெரியவந்தது. தங்க நகைகளுடன் சேர்த்து வைக்கப்பட்டிருந்த போலி நகைகளையும் திருடன் விட்டு வைக்கவில்லை என்று கூறப்பட்டது.

இந்தத் திருட்டுப் பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து குறித்த இடத்துக்குச் சென்று பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டதுடன், கைவிரல் அடையாளங்களையும் பதிவு செய்துள்ளனர். மோப்பநாயின் உதவியுடனும் தேடுதல் நடத்தியுள்ளனர். (ம-115)




சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகம் லயன்ஸ் கழகமும் மருதனார்மடம் வாழ்வகம் நிறுவனமும் இணைந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் பல்வேறு நிகழ்வுகளை நடத்தின. சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்பாக இருந்து வாழ்வகச் சிறார்களின் வெள்ளைப் பிரம்பு தாங்கிய ஊர்வலம் ஆரம்பமாகியது. வெள்ளைப் பிரம்பை வாழ்வகச் சிறார்களுக்கு வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ், சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி நிஷாந்தா ஆகியோர் வழங்கி ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தனர். ஊர்வலம் காங்கேசன்துறை - சுன்னாகம் நவீனசந்தை - சபாபதிப்பள்ளை வீதி ஊடாக வாழ்வகத்தை அடைந்து சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் ரி. தேவராஜன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. வாழ்வகத்தை ஆரம்பித்த அன்னை அமரர் சின்னத்தம்பி அன்னலட்சுமியின் நினைவாலயத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரதம விருந்தினராக பிராந்திய [illegible] சீமாட்டி ச.இந்திராவும் கலந்துகொண்டனர். சிறப்புரைகளை வாழ்வகத் தலைவர் ஆர். ரவீந்திரன், லயன் சி.ஹரிகரன், லயன்.ஆர்.சிவநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர். (ம-86)

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காத 20 குடியிருப்பாளர் மீது வழக்குகள்


தென்மராட்சி,ஒக்.15

தென்மராட்சி பிரதேசத்தில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட டெங்கு நுளம்பு ஒழிப்பு வாரத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தத் தவறிய 20 குடியிருப்பாளர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இக்காலப் பகுதியில் பிரதேசத்தில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைக்காகப் பிரிக்கப்பட்ட ஏழு வலயங்களிலும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் சுகாதாரப் பகுதியினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து பரிசோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது நுளம்பு உற்பத்திக்கு ஏற்ற வகையிலான சூழலை வைத்திருந்தமையால் குடியிருப்பா ளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று தென்மராட்சி கிழக்குப் பிரதேசங்களில் எழுதுமட்டுவாழ், ஒட்டுவெளி, கரம்பகம், மிருசுவில், உசன், கச்சாய், அல்லாரை போன்ற இடங்களில் இடம்பெற்ற பரிசோதனைகளின் போது பத்துக்கு மேற்பட்டோர் சிக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாறானவர்களின் எண்ணிக்கை குறைந் துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லக்னோ விமான நிலையத்துக்குச் சென்ற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை அந்த மாநில முதல்வர் அகிலேஷ் யாதவ் வரவேற்றார்.

## கலாம் பயணித்த கார் மீது பொலிஸ் வாகனம் மோதியது

### நூலிழையில் தப்பினார் அவர்

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பயணித்த கார் மீது பாதுகாப்புக்கு வந்த பொலிஸ் வாகனம் மோதியதில் கலாம் காயமின்றி உயிர் தப்பினார்.

கேரள மாநிலத்தில் நடைபெற்று வரும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் சுற்றுப் பயணம் செய்துவருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் கோழிக்கோட்டிலிருந்து காரில் கண்ணூர் மாவட்டம் தலசேரிக்குச் சென்றார். அவரது காருக்குப் பின்னால், பொலிஸார் பாதுகாப்பு வாகனங்களில் சென்றனர்.

கலாமின் கார் கொயிலாண்டி பகுதியில் சென்றபோது இளைஞர் ஒருவர், திடீரென மோட்டார் சைக்கிளில் குறுக்கே வந்தார்.

அவர் மீது மோதாமல் இருப்பதற்காக கலாமின் பாதுகாப்புக்கு வந்த பொலிஸாரின் வாகனம் சற்று வேகமாகச் சென்றது. இதனால் கலாம் சென்ற காரின் பின்பகுதியில் பொலிஸாரின் வாகனம் மோதியது.

இந்த விபத்தில் கலாம் உட்பட எவரும் காயமின்றி உயிர் தப்பினர். அவர் தொடர்ந்து, தலசேரி நோக்கி பயணித்தார். (வ)

## மேற்கு வங்க எல்லையில் கள்ளநோட்டு தரகர் கைது

மேற்கு வங்க எல்லையில் கள்ள நோட்டு விநியோகிக்கும் கும்பலைச் சேர்ந்த தரகர் ஒருவரை சிறப்புப் படைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்தியப் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் நாட்டில் கள்ள நோட்டுப் புழக்கம் அதிகரித்து வருகிறது.

கள்ள நோட்டுக்களை இந்திய மாநிலங்களில் புழக்கத்தில் விடுவதில் பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. மற்றும் அந்த நாட்டின் சில தீவிரவாத அமைப்புகள் மற்றும் பங்களாதேஷ் தரகர்கள் பின்னணியில் இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் மேற்கு வங்க எல்லையில் கள்ள நோட்டு விநியோகிக்கும் கும்பலைச் சேர்ந்த ஒருவரை சிறப்புப் படை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தோனேஷியா- பங்களாதேஷ் எல்லையில் பதுங்கியிருந்த பாதல்சிங் என்ற இவருக்கு ஹிஸ்புல் முஜாகிதீன் என்ற தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (வ)

## ஈழத்தமிழர் குறித்துப் பேச தகுதியில்லை கருணாநிதிக்கு

### சாடுகிறார் அமைச்சர் பன்னீர்ச்செல்வம்



இலங்கைத் தமிழர்கள் குறித்துப்பேச கருணாநிதிக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஈரோடு மகாலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. காங்கிரஸ், பாரதீய ஜனதாக் கட்சிகள் ஆட்சிக்கு வரப் போவது இல்லை என்று பார தீய ஜனதா மூத்த தலைவர் அத்வானி கூறியுள்ளார். எனவே மாநிலக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தான் இந்தியாவின் பிரதமராக வருவார் என்று அவர் கூறி உள்ளார். அவர் முதலமைச்சர் ஜெயலலிதாவைக் குறிப்பிட்டுத் தான் இவ்வாறு பேசியுள்ளார்.

மத்திய அரசின் அமைச்சர்களாக பதவி வகித்து வந்த தி.மு.க. தமிழக மக்களின் ஜீவாதார தேவைகளான காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு, கச்சதீவு பிரச்சினைகளைக்கூட தீர்க்க முடியவில்லை. கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றது. அதைத் தடுக்க மத்திய அரசோ, கருணாநிதியோ எந்த நடவடிக்கையும்எடுக்கவில்லை. கருணாநிதிக்கு இலங்கைத் தமிழர்களை பற்றிப் பேச எந்தத் தகுதியும் இல்லை.

உச்சநீதிமன்றத்தை நாடி தமிழகத்துக்கு காவிரி தண்ணீரைப் பெற்றுத் தந்த வர் முதலமைச்சர் ஜெய லலிதா. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் முதல மைச்சர் யாரை வேட்பாள ராக நிறுத்துகிறாரோ அவரை வெற்றிபெறச் செய்தால் இந்தியாவின் பிரதமராக ஜெயலலிதா பதவி ஏற்பார். இதற்கு அ.தி.மு.க. தொண்டர்கள் உறுதுணையாக இருந்து நாடாளுமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளரை வெற்றி பெறச்செய்ய வேண்டும்-என்றார். (வ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் தீ விபத்தில் சாவு

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில், வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

மகேசன், அவரது மனைவி சதானா இவர்களது குழந்தைகள் ஹிமான்சூ, வர்ஷா, சிவானந்த், மகேசன் சகோதரர் ராகேஷ், அவரது மனைவி மற்றும் 3 குழந்தைகள் உட்பட அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு குறித்த வீட்டில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறால் வீடு தீப்பற்றிக் கொண்டது.

தீ மளமளவெனப் பரவியதையடுத்து அதனைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

இதனால் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த 6 குழந்தைகள் உட்பட 10 பேரும் உயிரிழந்தனர்.

## மணிப்பூரில் சிறியளவிலான நிலநடுக்கம்



மணிப்பூர் மாநிலம் தமெங்லாங் பகுதியில் நேற்று அதிகாலை 4.46 மணிக்கு சிறியளவிலான நில நடுக்கம் ஏற்பட்டது.

நேற்று ஏற்பட்ட நில நடுக்கம் ரிச்டர் அளவில் 4.2 ஆக பதிவானதாக புதுடில்லி புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும் வீடுகள் அதிர்ந்ததால் மக்கள் பீதி அடைந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதங்களில் வடகிழக்கு மாநிலங்களில் நில நடுக்கம் ஏற்பட்டு வருவது அதிகரித்துள்ளது.

## கூடங்குளத்தில் புதிய அணு உலைகள் ரஷ்ய அதிகாரிகளுடன் ஆலோசனை

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மேலதிகமாக 3 ஆவது, 4 ஆவது அணு உலைகளை அமைப்பது தொடர்பாக டில்லியில் நடைபெறவுள்ள இந்தியா - ரஷ்ய அதிகாரிகள் கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

கூடங்குளத்தில் ரஷ்யா உதவியுடன் முதலாவது மற்றும் 2 ஆவது அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் இரு நாடுகளுக்கிடையே அமைக்கப்பட்டுள்ள ஆணையக் குழுக் கூட்டம் இன்று 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில், வர்த்தகம், அறிவியல் தொடர்பான விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தப்படும். குறிப்பாக கூடங் குளத்தில் கூடுதலாக இரண்டு அணு உலைகளை அமைப்பது குறித்து பேச்சு நடத்தப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின் றன.

தற்போது முதல் இரண்டு அணு உலைகளில்எரிபொருள் நிரப்பப்படுவதை எதிர்த்து அப்பகுதி மக்கள் கடும் போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜாங்கிபூர் இடைத்தேர்தலில் பிரணாப்பின் மகன் வெற்றி



மேற்குவங்க மாநிலத்தின் ஜாங்கிபூர் மக்களவைத் தொகுதியில் இடைத் தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மகன் அபிஜத் முகர்ஜி வெற்றி பெற்றுள்ளார்.

காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அபிஜித் முகர்ஜிக்கு 3 இலட்சத்து 32 ஆயிரத்து 919 வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சி.பி.ஐ. (எம்) இன் முசாஃபர் ஹுசைனுக்கு 3 இலட்சத்து 30 ஆயிரத்து 383 வாக்குகளும் கிடைத்தன. இதன் மூலம் 2 ஆயிரத்து 536 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் பெரு வெற்றி பெற்றுள்ளார். பா.ஜ.கவின் சுதாங்சு பிஸ் வாஸ் மூன்றாம் இடத்தைப் பிடித்தார். இவர் இந்தத் தொகுதியில் 2009 ஆம் ஆண்டு 1.28 இலட்சம் வாக் குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார் எனக் குறிப்பிடத்தக்கது. (வ)

## எல்லை தாண்டிய மீனவர்கள் கைது

எல்லை தாண்டிச் சென்று மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 29 பேரை ஈரான் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

மோசமான வானிலை காரணமாக தமிழ்நாடு மற்றும் கேரளத்தைச் சேர்ந்த மீனவர்கள் 29 பேர் கத்தார் எல்லையைக் கடந்து ஈரான் எல்லைக்குள் சென்று விட்டனர்.

இதனால் ஈரான் கடலோர பாதுகாப்புப்படையினர் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மீனவர்கள் கைது செய் யப்பட்டமை குறித்து இந்தியத் தூதரக அதிகாரிகள் நேரில் சென்று விசாரித்துள்ளனர்.

இதேவேளை இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கைதான மீனவர்களை மீட்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.(வ)

## உத்தரப் பிரதேசத்தில் மூளைக் கொதிப்பு நோய்; 421 பேர் சாவு

உத்தரப் பிரதேச மாநிலத்தில் பரவி வரும் மூளை கொதிப்பு நோயால் இது வரை 421 பேர் உயிரிழந்தனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் மூளைக் கொதிப்பு நோய் தற்போது பரவி வருகிறது.

குறித்த மாநிலத்தில் உள்ள குஷிநகர், சாந்த் கபீர் நகர் ஆகிய மாவட்டங்களில் இந்தநோயால் 4 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இந்த நோயால் 421 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்தநோய் காரணமாக கடந்த இருதினங்களில் மட்டும் 41 பேர் பாதிக்கப்பட்டு பி.ஆர்.டி. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ)

## காஷ்மீர் போர் முனைக்கு புதிதாக 12 ஹெலிகள்



இந்தியாவுக்குச் சொந்தமான காஷ்மீரின் சியாச்சென் பனிமலைப் பகுதியில் கூடுதலாக 12 இலகுரக ஹெலிகொப்டர்களை நிறுத்த இந்திய இராணுவம் முடிவு செய்துள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் நாடுகளுக்கு மிகவும் உயரமான போர்முனைப் பகுதியாக சியாச்சென் பனிமலை செயற்படுகிறது.

இங்குள்ள இந்தியப் பகுதிக்கு பாதுகாப்பைப் பலப் படுத்த 12 இலகுரக ஹெலி கொப்டர்களை நிறுத்த இந்திய இராணுவம் முடிவுசெய்துள்ளது.


குறித்த ஹெலிகொப்டர்கள் பொதுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநேக்டிக்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்படவுள்ளது.

இதுதவிர இந்திய இராணுவத்துக்கு 197 இல குரக ஹெலிகொப்டர்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன என்றும், இவற்றில் வான் படைக்கு மட்டும் 133 ஹெலிகொப்டர்கள் சேர்க்கப்பட உள்ளன என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தா? சதியா?

## கோயில், பாடசாலை எரிந்து நாசம் அமெரிக்காவில் பயங்கரம்



வொஷிங்டன், ஒக்.15

அமெரிக்காவில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சீக்கிய கோயில் மற்றும் பாடசாலை ஆகியவை முற்றிலுமாக எரிந்து நாசமாகின.

அமெரிக்காவின் வொஷிங்டன் மாகாணத்திலுள்ள வான்கூவர் பகுதியில் சீக்கிய கோயில் மற்றும் பாடசாலையின் கட்டுமானப் பணிகள் கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்று வந்தன.

இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. உடனே தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தும், அவர்கள் வருவதற்குள் தீ பரவி கட்டடம் முழுவதும் எரிந்து தரைமட்டமாகியது.

இந்த புதிய இடத்தை 200 சீக்கிய குடும்பங்கள் இணைந்து 2008 ஆம் ஆண்டுதான் விலைக்கு வாங்கின.

பழைய இடத்தில் செயற்பட்டு வந்த குருத்துவாராப் பள்ளியை வருகிற டிசெம்பர் மாதம் இந்த புதிய கட்டடத்துக்கு மாற்ற முடிவு செய்திருந்தனர். ஆனால் இதற்கு அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

எனவே இந்த விபத்தின் பின்னணியில் சதிவேலை காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால், இது குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகின்றது. (வ)

## வைரங்கள் நிரம்பிய புதிய கிரகம்




பூமியை விட இரண்டு மடங்குப் பெரிய மற்றும் பெரும்பாலான பகுதிகள் வைரங்களால் நிரம்பிய புதிய கிரகம் ஒன்றை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

'55 கான்க்ரி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த கிரகம், பூமியில் இருந்து சுமார் 40 ஒலி ஆண்டுகள் தூரத்தில் உள்ளது.

பூமி ஒருமுறை சூரியனைச் சுற்றிவர 365 தினங்கள் ஆகும் நிலையில், 18 மணி நேரத்தில் இந்தக் கிரகம் சூரியனைச் சுற்றி வந்து விடுகிறது என்று வியப்பில் ஆழ்த்துகின்றனர் விஞ்ஞானிகள். பூமிப் பகுதி எவ்வாறு மண் மற்றும் தண்ணீரால் நிரம்பியுள்ளதோ, அதுபோல இந்த கோளின் அடிப்பாகம், காபன், கிராபைட் மற்றும் வைரத்தால் நிரம்பியிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.(வ)

# எகிப்தில் கலவரம் 110 பேர் காயம்



எகிப்திய ஜனாதிபதியின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 110 பேர் காயமடைந்தனர்.

எகிப்தில் சகோதரத்துவ கட்சியைச் சேர்ந்த முகமது முர்சி ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் திடீரென இவரது ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே தலைநகர் கெய்ரோவில் பயங்கர மோதல் ஏற்பட்டது.

கற்கள், போத்தல்கள் மற்றும் பெற்றோல் குண்டுகளை ஒருவர் மீது ஒருவர் வீசி தாக்குதல் நடத்தினர். வீதியில் நிறுத்தியிருந்த வாகனங்களை அடித்து நொருக்கியதோடு, 2 பஸ்களுக்கு தீ வைத்தனர்.

இந்தத் தாக்குதலில் 110 பேர் படுகாயமடைந்துள்ளனர். இத்தகவலை சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. முகமது முர்சி பதவியேற்ற பின்னர் நடைபெற்ற முதலாவது தாக்குதல் இதுவாகும். (வ)

### 'முஸ்லிம்களின் அப்பாவித்தனம்'

# ஆர்ப்பாட்டங்கள் நடத்துங்கள் அழைக்கிறது அல் குவைதா

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டதாக கூறப்படும் இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் திரைப்படத்துக்கு எதிராக மேலும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு அல் குவைதா இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அல் குவைதா தலைவர்களின் அறிக்கைகளை வெளியிடும் இணையத்தளம் ஒன்றில் ஷவாஹிரியின் குரல் பதிவில் குறித்த ஆர்ப்பாட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஷவாஹிரியின் குரல் பதிவில் ஆர்ப்பாட்டம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது மதத்துக்கு எதிராக அமெரிக்கா போர் புரிந்து வருகின்றது.

தனிநபர் சுதந்திரம் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் குறித்த திரைப்படத்துக்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளது.

குவாண்டனாமோ, ஈராக் மற்றும் ஆப்கானில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடயத்தில் இந்த சுதந்திரங்கள் பின்பற்றப்படுவதில்லை-என்றார். (வ)

# காஸாப் பகுதியின் மீது இஸ்ரேல் ரொக்கெட் தாக்குதல்

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் திடீரென ரொக்கெட் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் பகுதிக்குள் காசா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருவதும், அதற்குப் பதிலடி தாக்குதல் நடத்துவதும் வழக்கமான ஒன்றாகி விட்டது.

இஸ்ரேலின் வடக்குப் பகுதியிலுள்ள நெடிவோர் நகர் மீது தீவிரவாதிகள் நடத்திய இராணுவத் தாக்குதலுக்குப் பதிலடியாகவே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த 10ஆம் திகதி இஸ்ரேல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்த ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வ)

# 2 வயதுக் குழந்தையை சித்திரவதை செய்த தாய்

## கொடூரம் புரிந்த அவருக்கு 99 ஆண்டு காலச் சிறைவாசம்



அமெரிக்காவில் தனது இரண்டுவயதுக் குழந்தையை மிக கொடுமையாகத் தாக்கிய தாய்க்கு 99 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் பகுதியைச் சேர்ந்தவர் எலிசபெத் எஸ்கலோனா. இவரது இரண்டு வயதுக் குழந்தை குழப்படி செய்ததால், கையில் பசையை தேய்த்து சுவரில் ஒட்ட வைத்து விட்டார்.

அத்துடன் கையில் கிடைத்த பொருள்களை கொண்டும், வயிற்றில் எட்டி உதைத்தும் மிகக் கடுமையான முறையில் குழந்தையைத் தாக்கியுள்ளார்.

இதனால் குழந்தை கோமா நிலைக்குச் சென்று விட்டது. நினைவு திரும்பிய பின் தன்னைத் தாக்கிய விதத்தை குழந்தை உறவினர்களிடம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக எலிசபெத்தை பொலிஸார் கைது செய்தனர். கடந்த 5 தினங்களாக நீதிமன்றத்தில் தொடர் விசாரணை நடைபெற்றது.

முடிவில் 99 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். நீதிபதி கூறுகையில், பாதிக்கப்பட்ட குழந்தையின் வாழ்நாள் வரையிலும் எலிசபெத் விடுதலையாகி வெளியே வரக்கூடாது என்பதற்காகவே 99 வருட சிறைத் தண்டனை வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

இன்னும் 45 வருடங்கள் வரை அவர் மேல்முறையீடு செய்ய முடியாது என்றும், 30 வருடங்களுக்கு மன்னிப்பில் அனுப்பக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். (வ)

# மாலியின் வட பகுதியை மீட்க ஐ.நா. சபையில் தீர்மானம்

தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்பில் உள்ள மாலியின் வடக்குப் பகுதியை மீட்க ஐ.நா.வில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சர்வதேச இராணுவ உதவியுடன் மேற்கு ஆபிரிக்கா நாடுகள் இந்த நடவடிக்கையை எடுக்க ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

வடக்குப் பகுதியில் நிலவும் அசாதாரண சூழலைக் கட்டுப்படுத்தி அரசியல் ரீதியில் தீர்வு காண அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலியின் வடக்குப் பகுதியில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியானது, அந்த நாட்டின் இறையாண்மையைக் காக்கும் வகையிலும் பிராந்திய ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையிலும் இருக்க வேண்டும் என்று ஐ.நா. உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்க நாடு மாலி. இங்கு, கடந்த மார்ச் மாதம் நடந்த இராணுவ நடவடிக்கையின்போது, அந்த நாட்டு ஜனாதிபதி டௌமனி டௌரியை வெளியேற்றி விட்டு தலைநகர் பமாகோவை இராணுவத்தினர் கைப்பற்றினர். அப்போது, மாலியின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியை அல் குவைதா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய டௌரெக் தீவிரவாதிகள் ஆக்கிரமித்தனர். (வ)



இந்தோனேசியா,பாலியில் 2002 ஆம் ஆண்டு நடந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் தினத்தை முன்னிட்டு, பாலியிலுள்ள நினைவு சின்னத்துக்கு ஆஸ்திரேலியா பிரதமர் ஜூலியா கில்லார்ட் மற்றும் பாலி ஆளுநர் மேட் மங்கு பஸ்டிகா இருவரும் அஞ்சலி செலுத்தினர்.

# வெளிநாட்டவர் மூவரை ஆப்கனில் காணவில்லை

### கடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கர் உட்பட 2 பேர் கடத்தி செல்லப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டவர்கள் மறு சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் தலைநகர் காபூலில் இருந்து புறநகர் பகுதியான வார்டாக் என்ற இடத்துக்குக் சென்ற அமெரிக்கர் உட்பட 2 பேர் கடத்திச் செல்லப்பட்டு விட்டனர்.

இதுகுறித்து வார்டாக் மாகாண பொலிஸ் அதிகாரி வாலி முகமது கூறுகையில், அமெரிக்கா மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்த ஓர் ஆண், ஒரு பெண் ஊழியர்கள் தொழிலுக்கு புறப்பட்டுச் சென்றபோது திடீரென மாயமாகி விட்டனர். அவர்களைத் தீவிரவாதிகள் அல்லது குற்றவாளிகள் கடத்திச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம் என்று தெரிவித்தார்.

இதேவேளை கடத்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து இதுவரையிலும் எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றும், ஊழியர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது என்றும் நேட்டோ படை அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மலையேற்றப் பாதை நேபாளத்தில்



காத்மாண்டு, ஒக்.15

மோதல்கள் அடிக்கடி இடம்பெற்று வரும் கிராமங்களைத் தவிர்த்து புதிய மலையேற்றப்பாதையை நேபாள அரசு திறந்துள்ளது.

நேபாளத்தில், மியாக்டி, பாக்லங், ருகும், ரோல்பா ஆகிய மாவட்டங்கள் வழியாக புதிய மலையேற்றப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான சுற்றுலா வாரியம், தேசிய இயற்கை பாது காப்பு அறக்கட்டளை, ருகும் மாவட்ட வளர்ச்சிக் குழு ஆகியவை இணைந்து இதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இந்தப் புதிய பாதையின் மூலம் மேற்குறித்த கிராமங்களை வளர்ச்சி அடையச் செய்ய முடியும் என்பது அரசின் நோக்கம். இமய மலை மலையேற்றக் குழுவினருக்கு இந்தப்பாதை பெரிதும் பயன்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

## இறுதிப் பயணத்தைப் பூர்த்தி செய்து வரலாற்றுச் சின்னமாகிறது 'எண்டேவர்'



விண்ணில் சேவையில் ஈடுபட்ட அமெரிக்காவின் விண்வெளி ஓடமான 'எண்டெவர்' விண்வெளி ஓடம், தனது சேவையின் எல்லையை அடைந்து விட்டதால் அதன் இறுதிப் பயணத்தை ஆரம்பித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை கலிபோர்னியாவில் உள்ள விஞ்ஞானக் கழகத்தை நோக்கித் தனது பயணத்தை லொஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தில் இருந்து ஆரம்பித்தது.

இரு தினங்களில் இந்த விண்கலம் கலிபோர்னிய விஞ்ஞானக் கழகத்தை அடையவுள்ளதுடன் ஒக்ரோபர் 30 ஆம் திகதி தொடக்கம் அது முக்கிய ஒரு வரலாற்றுச் சின்னமாக பார்வையாளர்களைக் கவரவுள்ளது.

எண்டேவருடன் சேர்த்து நாசா பயன்படுத்தி வந்த முக்கிய விண் ஓடங்களான, டிஸ்கவரி, என்டெர்ப்ரைஸ் மற்றும் அட்லாண்டிஸ் ஆகிய விண் ஓடங்களும் தமது சேவையிலிருந்து நிரந்தரமாக ஓய்வு பெற்று விட்டன. இவை அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப் பட்டுள்ளன. அதாவது நாசா 2011 ஜூலையில் தனது 30 வருட விண் ஓடத் திட்டத்தை நிறைவு செய்திருந்தது. குறித்த விண்கலம் மொத்தம் 25 தடவை பூமிக்கு அப்பால் சென்றுள் ளதுடன் மொத்தம் 123 மில்லியன் மைல்கள் பய ணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# முஸ்லிம் விஞ்ஞானிகளுக்கு தனியான நோபல் பரிசு

## போட்டியாக அறிவிக்கிறது ஈரான் அரசு

தெஹ்ரான், ஒக்.15

சர்வதேச நோபல் பரிசுக்குப் போட்டியாக, முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளைக் கௌரவிக்கும் வகையில் நோபல் பரிசை ஈரான் அரசு அறிவித்துள்ளது.

இயற்பியல், வேதியியல் உட்பட 6 அறிவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு, சுவீடன் அக்கடமி ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கி வருகிறது. இந்த வருடத்துக்கான நோபல் பரிசுகள் கடந்த சில தினங்களாக அறிவிக்கப்பட்டன.

இந்தநிலையில், நோபல் பரிசுக்குப் போட்டியாக, முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்காக மட்டும் புதிய போட்டி நோபல் பரிசு வழங்கப்படும் என்று ஈரான் அரசு அறிவித்துள்ளது. இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சர்வதேச நோபல் பரிசு 1901ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தப் பரிசு வழங்கப்பட்டு வந்தாலும், ஈரானைச் சேர்ந்த ஒரே ஒரு விஞ்ஞானிக்கு மட்டும் நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. ஈரானில் மனித உரிமைக்காகப் போராடி வரும் ஷெரின் எபாடி என்ற பெண்ணுக்கு 2003 ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப் பட்டது. ஆனால், அறிவியல் துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒருவருக்குக் கூட வழங்கப்பட வில்லை. இதனால் அதிருப்தி அடைந்த ஈரான், போட்டி நோபல் பரிசு அறிவித்துள்ளது. நபிகள் நாயகம் பெயரில், திகிரேட் புராபட் வேர்ல்ட் பிரைஸ் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப் படும். இந்தப் பரிசு மூன்று தொழில் நுட்பத் துறைகளில் சிறந்த சாதனை படைக்கும் முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு மட்டும் வழங்கப் படும் என்று ஈரான் அறிவியல் தொழில்நுட்பத் துறைத் துணைத்தலைவர் நஸ்ரின் சுல்தான்கா அறிவித்துள்ளார். (வ)

## ஒபாமா அலுவலகம் மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டு

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தேர்தல் அலுவலகம் மீது துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ஒபாமா, மிட்ரோம்னி இருவரும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒபாமாவுக்காக டென்வர் நகரில் தேர்தல் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை நோக்கி மர்ம மனிதன் ஒருவர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தார்.

இதில் அலுவலகக் கண்ணாடிகள் உடைந்துநொருங்கின. துப்பாக்கி சூட்டில் எவருக்கும் காயம் ஏற்பட வில்லை.

துப்பாக்கியால் சுட்ட நபர் உடனே அந்த இடத்தில் இருந்து தப்பி ஓடி விட்டார். அந்த நபரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் எதற்காகச் சுட்டார் என்பது குறித்த மர்மம் துலங்கவில்லை.

இந்தச் சம்பவம் அமெரிக்காவில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு தொடர்பாக ஒபாமா அலுவலகத்தில் இருந்து இதுவரை கருத்து எதுவும் வெளியிடப் படவில்லை. இந்தச் சம்பவம் நடந்த போது ஒபாமா வொஷிங்டனில் இருந்தார்.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

அக மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

கடந்த (09.10.2012) இல் கொழும்பில் நடைபெற்ற வைபவத்தில் பிரதீபா பிரபா விருதினை மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட எமது கல்லூரி ஆசிரியர்களான திருமதி ஜெயந்தி ஜெயதரன், திருமதி. பிருந்தா சத்தியசீலன் ஆகியோரையும், உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட வலயமட்ட ஆசிரியர்களுக்கிடையிலான போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்கள் செல்வி வி.சுப்பையா, திருமதி பா.பாலகுமாரன், சி.சிறிதரன், இ. இராஜராஜன், பூ.நகுலன், செ. சிவசுதன், வி.விஸ்ணுகரன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம், யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

(24040)(45-6-7)

யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழையின் இன்றைய பரிசுத்தினத்தில் இவர்களை வாழ்த்துகின்றோம்

2011 க.பொ.த (சா/த) பரீட்சையில் 100 % சித்தியையும் வடமாகாணத்தில் முதலிடத்தையும் பெறுவதற்கு உழைத்திட்ட ஆசிரியர்கள்

திரு. சி.ஜெயரூபன் – சைவம், தமிழ்
செல்வி பு. இளையதம்பி – சைவம்
திருமதி சி. தவராசா – தமிழ்
செல்வி ச. புவேந்திரன் – தமிழ்
திருமதி.ஜெ. தவேந்திரராஜா – றோ.க, றோ.க.அ
திரு. பா. தர்மசீலன் – கணிதம்
திரு. சி. சிறீதரன் – கணிதம்
திருமதி ம. ரவீந்திரன் – கணிதம்
செல்வி வ. வயித்திலிங்கம் – ஆங்கிலம்
திரு. க. பாலவிசாகன் – ஆங்கிலம்
திரு. ம. ரவீஸ்வரன் – விஞ்ஞானம்
திரு. சி. ஜீவானந்தம் – விஞ்ஞானம்
செல்வி ஜெ. முருகையா – சாங்கீதம்
திருமதி ம. பிரேம்குமார் – நடனம்
திருமதி தி. ஜெயக்குமார் – நாடகமும் அரங்கியலும்
திருமதி லெ. சோ. லொயிட் – சித்திரம்
திருமதி க. நாதசொரூபன் – தமிழ் இலக்கியநயம்
செல்வி ஜெ. செந்தில்வேல் – வர்த்தகமும் கணக்கியலும்
திரு. வே. சேந்தன் – ஊடகம், குடியுரிமைக்கல்வி
திருமதி பி. சத்தியசீலன் – புவியியல்
திரு. வி. துஸ்யந்தன் – தகவல் தொ.தொ.நு
திருமதி ம. ஜெகரூபன் – தகவல் தொ.தொ.நு
திரு. இ. நவகேதீஸ்வரன் – வரலாறு
செல்வி வி. சுப்பையா – வரலாறு
திரு. அ. தயாபரன் – விவசாயம்
திருமதி ஜெ. ஜெயதரன் – சுகாதாரம்
திருமதி. ரே. தர்மசீலன் – மனைப்பொருளியல்

Best Wishes

இவர்களையும் அத்துடன் இன்றைய நாளில் தமது சாதனைக்காக பரிசுகள் பெறும் மாணவர்களையும் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்

2012.10.15

பரிசளிப்பு விழாக்குழு, யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(24039)(6.7.8)

பாராட்டி வாழ்த்துகிறோம்



அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் சிறந்த ஆசிரியருக்கான பிரதீபா பிரபா விருதினைப் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை செல்வி **அருளாம்பிகை அருளம்பலம்** அவர்கள் மேன் மேலும் உயர் விருதுகள் பெற்று வாழ்க்கையில் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

கிளி / கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

(24062)(45.6.7)

எமது வலயக்கல்விப் பணிப்பாளரை பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையை பொறுப்பேற்றுக் கொண்ட **மா. ராஜ்குமார்** அவர்களை எமது பாடசாலையின் சமூகம் சார்பாகப் பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகம். மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(9)

ஆக, கட்டளையிட்டோ, அதிகாரத்தைப் பயன்படுத்தியோ நாம் எதையும் வெற்றியுடன் சாதிக்க முடியாது. மற்றவர்களைக் கவர்வதும் மிகவும் கடினம்.

நாம் சொல்லும் வேலையை, அவர்கள் செய்வதனால் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்பதை உணரும்படி செய்ய வேண்டும்.

மாறாக, "அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி, மற்றவர்களை மிரட்டி எதையும் சாதிக்கமுடியும்" என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும்.

மற்றவர்கள் தவறு செய்யும்போது கூட, அவர்களைத் திருத்த உதவி செய்ய வேண்டும்.

**ஜப்பானியர்களிடம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை**

உலகத்திலேயே வேகமாக முன்னேறி வருபவர்கள் ஜப்பானியர்கள். ஜப்பான் இன்று மிகப் பெரிய பணக்கார நாடாகி விட்டது. காரணம் அவர்கள் எல்லாத்துறைகளிலும் அபார வெற்றியைக் கண்டிருக்கின்றனர்.



ஜப்பானியர்களின் வெற்றிக்குக் காரணம் இடைவிடாத உழைப்பும், பண்பும்தான். மற்றவர்களை மதிக்க வேண்டும் என்ற பண்பு இவர்களை மிக மிக உயர்த்தி விட்டது.

ஜப்பானியர்கள் எதையும் வேகமாகச் செய்கிறார்கள்; அழகாகச் செய்கிறார்கள். நேர்மையுடன் செய்கிறார்கள்.

நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்வதில் ஜப்பானியர்களுக்கு இணை ஜப்பானியர்கள் தாம்!

முன் பின் தெரியாத ஜப்பானியர்களின் கடைக்கு நாம் போனால் கூட, எவ்வளவு தான் அவர்கள் வேலையாக இருந்தாலும், நண்பர்களை வரவேற்பது போல் நம்மை வரவேற்பார்கள்.

தலையைக் குனிந்து, உடம்பை வளைத்து அவர்கள் வரவேற்கும் முறையிலேயே நமக்குப் பெரும் செல்வம் வந்துவிட்டது போன்ற உணர்வு ஏற்படும். நாமும் திருப்பி அவர்களைப் போல் தலையைத் தாழ்த்தி உடம்பை வளைத்து வணங்குவோம்.

முன் பின் தெரியாத புதியவர்களைக் கண்டால் கொஞ்சமாக தலையைத் தாழ்த்தி வரவேற்பார்கள்.

நண்பர்கள் என்றால் தலையை மேலும் தாழ்த்தி வரவேற்பார்கள். பெரிய மனிதர்கள் என்றால் தலையை இன்னும் அதிகமாகத் தாழ்த்தி தமது மரியாதையைத் தெரிவிப்பார்கள்.

எதையும் அவர்கள் மெல்லப் புரியும்படி பேசுவார்கள். அவர்கள் பேச்சில் அன்பும் கனிவும் கலந்திருக்கும்.

இதனால் தான் ஜப்பானியர்கள் உலகத்தில் மிக மிக மதிக்கப்படுகிறார்கள்.

ஜப்பானியர்கள் இருக்கட்டும். அமெரிக்கர்கள் எப்படி?

புதியவர்களைக் கண்டாலும் சிரித்து வரவேற்பார்கள். நீண்ட கைகளை நீட்டி கைகுலுக்குவார்கள். நீண்ட நேரம் கை குலுக்கித் தமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதில் அமெரிக்கர்களுக்கு நிகர் அமெரிக்கர்கள் தாம்.

நடந்து போகும் போது புதியவர்களைக் கண்டால் கூடப் புன்சிரிப்புடன், "எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்பார்கள்.

ஐரோப்பாவில் வாழ்பவர்கள் கை குலுக்கும்போது ஒன்றிரண்டு தடவைகள் மட்டுமே குலுக்கி விட்டுச் சிரிப்பார்கள். நீண்ட நேரம் கைகுலுக்குவது அவர்களுக்குப் பிடிக்காது.

தென் அமெரிக்காவில் வாழ்பவர்கள் ஒருவரை ஒருவர் கட்டியணைத்துத் தமது அன்பைக் காட்டுவார்கள்.

இந்தியாவில்கூட வடநாட்டில் வாழும் சிலர் இப்படி ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துத் தமது அன்பையும் நட்பையும் வெளிப்படுத்துகிறார்கள்.

ஆக, நட்பைப் பெற பல வழிகள் இருக்கின்றன.

ஜப்பானியர்களிடையே மற்றொரு பழக்கம் இருந்து வருகிறது. ஒருவர் பேசுவது தவறு என்றால், நீங்கள் சொல்வது தவறு என்று யாரும் சுட்டிக் காட்ட மாட்டார்கள். மாறாக, "நீங்கள் சொல்வது எனக்குப் புரிய வில்லை" என்று சொல்லி, மீண்டும் மீண்டும் அவரைப் பேச வைத்து, அவர் தவறை அவரே உணரும்படி செய்வார்கள்.

**நீங்கள் நினைப்பதை மற்றவர்கள் செய்ய வேண்டும். முடியுமா?**

உங்களுக்கு ஒரு கடிகாரம் வேண்டும். கடிகாரத்தை வாங்கப் பணம் இல்லை. ஆனால் எப்படியும் ஒரு கடிகாரத்தை அடைந்தே தீர வேண்டும். அதோ தெருவில் தனியாகப் போகிறானே ஒருவன், அவன் வெளிநாட்டுக் கடிகாரத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறான். பளபளப்பான ஜப்பான் கடிகாரம். விலை மிகுந்தது. ஒரு துப்பாக்கியைக் காட்டி மிரட்டினால், அவன் கடிகாரத்தைக் கழற்றிக் கொடுத்து விட்டு ஓடிவிடுவான். இல்லையா?

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# கல்வியைப் பூரணமாக வழங்கினால் தான் சிறுவர்கள் சிந்தித்துச் செயற்பட முடியும்

## கனகராயன்குளம் மகாவித்தியாலய அதிபர் தெரிவிப்பு

மாங்குளம்,ஒக்.15

சிறுவர்களுக்கான கல்வி அறிவைப் பூரணமாக வழங்கும் போது தான் அவர்களால் சிந்தித்துச் செயற்பட முடியும். அப்போதுதான் அவர்களின் உரிமைகளை அவர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்று வவுனியா வடக்கு கனகராயன்குளம் மகாவித்தியாலய அதிபர் எஸ்.நித்தியானந்தம் தெரிவித்தார்.

வவுனியா கிராம அபிவிருத்தி நிறுவனமும், 'ரூம்ரீட்' நிறுவனமும் சேர்ந்து வவுனியா வடக்கு கல்விப் பணிமனையின் ஆதரவுடன் வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நித்தியானந்தம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்களுக்கான கல்வியை வழங்காது அவர்களின் உரிமையைப் பற்றி பேசுவதால் பயன் இல்லை. சிந்திக்கக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள் தான் தமது உரிமைகளைப் பற்றியும் அது மீறப்படுவது பற்றியும் தெரிந்து கொள்வார்கள்.

**சிறுவர்களுக்கான கல்வியை வழங்காது அவர்களின் உரிமையைப் பற்றி பேசுவதால் பயன் இல்லை.**

கல்வியில் சமத்துவம் என்பது வார்த்தையளவில் தான் உள்ளது. அதுவும் வன்னிப் பிரதேசத்தில் கல்வி நிலைமையால் பாதிக்கப்படும் மாணவர்கள் அதிகம். இதனை அதிகாரிகள் கூட கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஏனெனில் வசதியான நகரப்புற பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் மிகையாக இருக்க, கிராமப்புற பாடசாலைகளில் இது பூரணப்படுத்தப்படாமலேயே இருக்கிறது. இது கூட சிறுவர்களின் உரிமை மீறல் தான் - என்றார்.

இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், 'ரூம்றீட்' நிறுவன அதிகாரி ஏ.ஆர்.சாமி, கிராம நிறுவன அதிகாரிகள், யுனிசெவ் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பெற்றோர்கள், அயல் பாடசாலை அதிபர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-422)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்த யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை தரம் 6 மாணவியான செல்வி குணரத்தினம் லோசனாவுக்கு பண்டத்தரிப்பு அஞ்சல் அதிபர் ம.மரியடெரன்ஸ் பரிசு வழங்குகிறார். (எ-130)

# மாணவரின் உளநலம் பாதிக்காதவாறு ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

யாழ்ப்பாணம்,ஒக்.15

மாணவர்களிடம் நேரிய மனப்பாங்கு இருந்தால் மட்டுமே எதிர்பார்க்கக்கூடிய இலக்கை அடைய முடியும். இதற்கு உளம் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள் மாணவர்களின் உளநலம் பாதிக்கப்படாதவகையில் சேவை வழங்க வேண்டும் என்று யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தெரிவித்தார்.

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் உலக உளநல நாள் நிகழ்வு அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தும் போதே இராசலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த கால இன்னல்களை [illegible] கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள், பெற்றோர், இளைஞர், மாணவர்கள் உளப்பாதிப்புக்கு ஆளாகி இருப்பதால், அவர்களின் உளத்தை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

மாணவர்கள் உளப்பாதிப்புக்கு உள்ளானால் கல்வியில் பின்னடைவைச் சந்திப்பர். உளப்பாதிப்பு காரணமாகவே ஆசிரியர்களுடன் மாணவர்கள் முரண்படுகிறார்கள். இதனால் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நேரிய சிந்தனைகளை உருவாக்க வேண்டும். மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். மாணவர்கள் தனியாக கல்வியில் மட்டும் திறனுடையவர்களாக இருந்தால் போதாது, ஒழுக்கம் மிக அவசியமான ஒன்றாகும். நல்ல சிந்தனைகளை தினமும் புகட்ட வேண்டும். விட்டுக் கொடுக்கும் தன்மையை மாணவர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் - என்றார். (எ-14)

# குறு வினா விடைப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்-11 மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட விவசாய விஞ்ஞான குறுவினாப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

**பாடசாலை வகை 1ஏபிசி**

முதலாமிடம்-க.திலக்ஸன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி) இரண்டாமிடம்- சி.அற்புதஜீவா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), மூன்றாமிடம் க.கஜனி (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), த.நிரோஜன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

**பாடசாலை வகை 1 சி**

முதலாமிடம்-லி.துருபதன் (உசன் இராமநாதன் ம.வி), இரண்டாமிடம்-இ.சங்கமி (உசன் இராமநாதன் ம.வி), மூன்றாமிடம்-தி.நிதர்சன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி)

**பாடசாலை வகை II**

முதலாமிடம்- யோ.அபிரா- (மிருசுவில் அ.த.க. பாடசாலை) இரண்டாமிடம்- இ.வைஸ்ணவி (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி.), மூன்றாமிடம் பி.ரிவோஜன் (மிருசுவில் அ.த.க. பாடசாலை), மு.பவித்திரன் (மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை) (எ-9)

# வினாடி வினாப் போட்டி முடிவுகள்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட 'உங்களுக்குத் தெரியுமா' வினாடி வினாப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் நெடுங்கேணி கோட்டத்தில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

ஞா. அபிராஜிதன் (குளவிசுட்டான் அ.த.க.பாடசாலை), அ.லுஜித்நாதன் (கனகராயன்குளம் ம.வி) கோ.சதுர்சனா (நெடுங்கேணி ம.வி), யோ.ருவின்சன் (குளவி சுட்டான் அ.த.க. பாடசாலை), தி.திவாரசன் (குளவி சுட்டான் அ.த.க. பாடசாலை), அ.அருண்ராஜ் (ஒலுமடு அ.த.க. பாடசாலை), பூ.டியாசினி (ஒலுமடு அ.த.க.பாடசாலை) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். (எ-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021–2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# 'மணல் வீடு' விளையாட்டு இனியும் வேண்டாமே!

மாரி வந்துவிட்டது. அடைமழை காலத்தில் கொட்டித் தீர்க்கும் பெரு மழைக்கு, நன்கு திட்டமிடப்பட்டு லட்சக்கணக்கில் காசைக்கொட்டி கட்டுகின்ற வீடுகளே தாக்குப்பிடிக்க முடிவதில்லை. வீட்டின் கூரை வழியே எப்படியேனும் ஊடுருவிக் கொண்டு மழை நீர் ஒழுகத்தான் செய்கிறது. சுவர் ஓரங்களிலும், தரையிலும் கசிவுகளில் பொசியும் நீர் குந்துவதற்குக் கூட இடமில்லாமல் செய்துவிடுகிறது. கல்வீடுகளுக்கே இந்த நிலை என்றால் மண் வீடுகளின் கதியை மாரி காலத்தில் கேட்கவா வேண்டும்?

ஆனால் 'கல்வீட்டில் இருப்பதைவிட கட்டாந்தரையில் கட்டப்பட்ட தற்காலிகக் குடிசைகள் எவ்வளவோ பரவாயில்லை' என்று மீளக்குடியேறிய மக்கள் கூறுமளவுக்கு இந்திய நிதியுதவியுடன் கட்டப்பட்ட வீடுகள் அவர்களைப் பாடாய்ப் படுத்துகின்றன. இந்திய வீட்டுத் திட்டத்தால் தங்களுடைய தற்காலிக குடிசைகள் எல்லாம், கல்வீடாக மாறியதை எண்ணி முதலில் இந்த மக்கள் ஆனந்தப்படவே செய்திருந்தார்கள். ஆனால் வீடு கையளிக்கப்பட்டு சில மாதங்கள் கழிவதற்கிடையில் மனித பாவனைக்கு ஒவ்வாத நிலையை இந்த வீடுகள் அடைந்துவிட்டதாக மக்கள் குறை கூறுகின்றார்கள். குறிப்பாக பாண்டியன் குளத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் சீத்துவத்தைக் கண்கூடாக காணமுடிகிறது.

இந்தப் பகுதியில் உள்ள ஏராளமான வீடுகளில், பெரிய அளவிலான வெடிப்புகள் சுவர்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளன. ஒரு சில வீடுகளில் இந்த வெடிப்புகளின் அளவைத் தாங்க முடியாமல் பக்கச் சுவர்கள் இடிந்து வீழ்ந்துமுள்ளன. நல்லவேளையாக அவ்வாறு இடிந்து வீழ்கையில் பக்கத்தில் மனிதர்களின் நடமாட்டம் இருந்திருக்கவில்லை. இல்லாவிட்டால் பாறுண்டு விழுந்த சுவர்கள் சில உயிர்களையும் காவு கொண்டிருக்கும்.

''இப்பிடி இடிஞ்சு விழுகிற வீடுகளை நம்பி எப்பிடிப் பிள்ளை குட்டியளோட நிம்மதியா இருக்க முடியும்? இப்பவே இப்பிடி எண்டால் அடை மழை பெஞ்சால் இதுக்க இருக்கவே முடியாது'' என்று கூறும் மக்கள், இப்போதே மக்களின் முன்னேற்பாடாக வீடுகளுக்குப் பக்கத்தில் தறப்பாள்களால் தற்காலிக இருப்பிடங்களையும் அமைக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்திய நிதி உதவியுடனான வீட்டுத் திட்டத்துக்கான ஒப்பந்த உரிமத்தை பெற்ற இந்தியாவைச் சேர்ந்த எச்.பி.எல். என்ற நிறுவனம், தனக்கு ஒரு குறித்த லாபத்தை ஒதுக்கிக்கொண்டு திட்டத்தை இன்னொரு இந்திய நிறுவனமான ஆர்.பி.பி. இடம் கையளித்தது. ஆனால் ஆர்.பி.பி. நிறுவனம் கூட இலங்கையில் மீளக்குடியமர்ந்தோருக்கான வீடுகளை அமைக்கும் பணியில் நேரடியாக ஈடுபடவில்லை. அது தன்னிடம் வழங்கப்பட்ட நிதியில் குறித்த வீத லாபத்தை எடுத்துக் கொண்டு, உள்ளூர் ஒப்பந்தகாரர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பிரித்துக்கொடுத்தது. பின்னர் ஒப்பந்தகாரர்களும் தங்களுக்கான இலாபத்தை எடுத்துவிட்டு எஞ்சிய நிதியிலேயே வீடுகளை ஒப்பேற்றி முடித்தனர்.

இவ்வாறு பல கைகள் மாறி வந்து சேர்ந்த வீட்டுத் திட்டம் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய' நிலையிலேயே மக்களிடம் போய்ச் சேர்ந்தது. ஒவ்வொரு நிறுவனமும் தமக்காக பெருமளவு நிதியை சுருட்டிய பின்னரே, வீடுகளை கட்டியிருந்தன. இதனால் மிகக் குறைந்த செலவில் வீடுகளைக் கட்டிமுடிக்க வேண்டியிருந்தது. எனவே தரக்குறைவான பொருள்கள், சீமெந்தில் அதிகளவான மணலைக் கலத்தல் என்பன போன்ற சூட்சுமங்களுடன் வெளிப்பார்வைக்கு வீடுபோல தோன்றும் அளவுக்கு இந்தத் திட்டம் நிறைவேறியிருந்தது.

''அகதிகள்தானே? வீட்டை எப்படிக்கட்டினாலும் கேள்வி கேட்பதற்கு யார் வரப்போகிறார்கள்?'' என்ற எண்ணமே இவ்வாறு கட்டிமுடிக்கப்பட்டு சில மாதங்களுக்கு இடையில் பொல பொல என்று வீழ்ந்து போகும் வீடுகளின் உருவாக்கத்திற்கு காரணம். இந்தத் திட்டத்துக்கான நிதி வழங்குதலுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் திருப்தி கொண்டு விட்டன. திட்டம் சரிவர மேற்கொள்ளப்படுகிறதா என்ற கண்காணிப்பில் இவை ஈடுபடவில்லை. இவையும் தரமற்ற இந்திய நிதி உதவியுடனான வீடுகளுக்கு காரணம்.

ஏற்கனவே நொந்து நூலாகியிருக்கும் மக்களை இது போன்ற மணல் வீடுகளைக் கட்டி மீண்டும் ஒருமுறை அவலத்துக்குள் தள்ளிவிடும் விளையாட்டு கச்சிதமாக நடந்தேறிவிட்டது. இந்தத் திட்டத்தில் பணத்தைச் சுருட்டிய நிறுவனங்களும், அதிகாரிகளும், ஒப்பந்தகாரர்களும் சொகுசாக இருக்க, மாரிக்குள் அந்தரப்படப்போவது மக்கள்தான். இந்திய வீட்டுத் திட்டத்தின் அடுத்த கட்டம் விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக அறிவிப்புகள் வந்துள்ளன. அதிலேனும் இந்த மணல் வீடு விளையாட்டை காட்டாதிருப்பார்களா?

# நீதிச்சேவையை அதிரவைத்துள்ள தாக்குதல் சம்பவம்

*'சண்டே ரைம்ஸ் அரசியல் விமர்சனத்திலிருந்து*
*கோகுலன்*

## கொந்தளிப்பை தணிக்க அரசு பகிரங்க முயற்சி

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஒரு நபரைப் பின் தொடர்ந்து சென்று, அவர் தனது காரை ஓரிடத்தில் நிறுத்தி வைக்கும் வரை காத்திருந்து ஈவிரக்கமற்ற முறையில் அவரை தாக்குவதானால் அதற்கு கால அவகாசத்துடனான மிகக்கவனமான அவதானிப்பு இருந்திருக்க வேண்டும்.

இந்த வார்த்தைகளை உதிர்த்தவர் மூன்று ஆண்டுகளுக்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான போரை வெற்றிகரமாக நடத்தி முடித்த பெருமைக்குரியவரான முன்னாள் இராணுவத் தளபதியும், முன்னாள் ஜெனரலுமான சரத் பொன்சேகா ஆவார்.

மர்ம நபர்களால் தாக்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ணாவைப் பார்த்து ஆறுதல் கூறிவிட்டு வெளியில் வந்த அவர் ஊடகவியலாளர்களிடம் இவ்வாறு கூறியிருந்தார்.

சில சமயம் நகைச்சுவையான கருத்தும் கூட பாரதுரமாகவிருந்துவிடுவதுண்டு என்று வின்சென்ட் சேர்க்கில் ஒரு சமயம் கூறியிருந்தார். இந்தக் கருத்தை உண்மையாக பிரதிபலிக்கின்றது பொன்சேகாவின் இந்த வார்த்தைகள். இந்த வார்த்தைகளைச் சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது. போர் அனுபவம்மிக்க ஒரு போராளியின் வார்த்தைகள் இவை. இரகசியமாக அல்லது பரகசியமாக நடத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து அவர் நன்கு அறிவார். பாதுகாப்புச் சேவையிலுள்ள வேறு பலரைவிட இவர் அதிகம் அறிவார். அவரும் கூட பதவியில் இருந்தபோது தம்மை விமர்சித்தவர்களுக்கு எதிராக இவ்வாறு இரகசியமான நடவடிக்கைகளை எடுத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுகள் இருந்ததுண்டு. எதுவானாலும் அவரைப் பொறுத்தவரை பாத்திரங்கள் இப்பொழுது மறுபக்கமாக திரும்பியுள்ளன.

பொன்சேகா மருத்துவமனையில் இருந்து வெளியில் வந்து கொண்டிருந்த அதேவேளை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். மருத்துவமனையில் இருக்கும் மஞ்சுள திலகரட்ணாவைப் போய்ப் பார்க்கும்படியாக ஜனாதிபதியிடமிருந்து தொலைபேசி அழைப்பில் தெரிவிக்கப்பட்டிருந்துள்ளது. திலகரட்ணாவின் படுக்கைக்கு அருகில் பலபேர் நிற்பதை ஹக்கீம் கண்டார். இலங்கை சட்டவாளர்கள் சங்கத்தின் தலைவர் விஜயதாச ராஜபக்ஷவும் வேறு சில நீதிவான்களும் காணப்பட்டனர்.

தாக்குதலுக்கு பின்னணியில் இருந்துள்ள குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு சகல விதமான முயற்சிகளும் எடுக்கப்படும் என்று தம்மை உறுதியளிக்கும்படி ஜனாதிபதி பணித்துள்ளார் என்று ஹக்கீம், திலகரட்ணாவிடம் கூறினார். இச்சம்பவம் நடந்து ஒருவாரமாகின்றது. குற்றவாளிகள் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஹக்கீம் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில், இந்தத் தாக்குதலில் சுய நலசக்திகள் பின்னணியில் இருந்துள்ளன என்றார். இலங்கையில் குற்றங்களில் இருந்து தப்பிக்கொள்ளும் கலாசாரம் ஒன்று நிலவுகின்றது என்று அரசுக்கு எதிராக நடத்தப்படும் பிரசாரத்துக்கு வலுசேர்க்கவே இது நடத்தப்பட்டுள்ளது என்றார். நாங்கள் மிகவும் வெளிப்படையாகவே செயற்படுகின்றோம். [illegible] [illegible] வதற்கு அரசு கடமைப்பட்டிருக்கிறது என்றார் அமைச்சர். இவ்வாறான கருத்துக்கள் ஏனைய அவரது சக அமைச்சர்களாலும் வெளியிடப்பட்டன. தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார இதில் ஏதோ சர்வதேச சதி வேலை இருப்பதாக தாம் கருதுவதாகக் கூறினார். கட்டுமாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச கூறுகையில் இந்தத் தாக்குதலை நடத்த திலகரட்ண தாமே ஏற்பாடு செய்திருக்கலாம் என்று தெரிவித்தார்.

ஆனால் இவர்களில் எவரும் இது தொடர்பான இரகசியங்களை புலனாய்வுப் பொலிஸாருக்கு தெரிவித்திருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு செய்திருந்தால் புலனாய்வில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் ஒரு முடிவைக் கண்டு குற்றவாளிகளையும் கைது செய்திருப்பார்கள்.

திலகரட்ணா தம் மீது எவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது என்பதை அமைச்சருக்கு விளக்கினார்.

### ஞாயிறு காலையில்

மவுன்ட் லெவினியா சென். தோமஸ் கல்லூரியில் தமது மனைவியையும் மகளையும் இறக்கிவிட்டுள்ளார். மகள் மேசைப்பந்து விளையாடுவதில் பயிற்சி பெற்றுவருகிறார். அதன்பின் பாடசாலை வளவுக்கு வெளியில் காரைச் செலுத்தி காலி வீதிக்கு வந்துள்ளார். அங்கே வியாபாரி ஒருவரிடம் சண்டே ரைம்ஸ் பத்திரிகை ஒன்றை வாங்கினார். பின்னர் ஹொட்டேல் வீதிக்கு வந்து அங்கு காரை நிறுத்தினார். தனது ஜகுவார்களில் அமர்ந்து பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தார். திடீரென சில ஆள்கள் தமது காரை நோக்கி நடந்து வருவதை காரின் பின்பக்கம் பார்க்கும் கண்ணாடியில் அவதானித்தார். அவர்களில் ஒருவர் கார்க் கண்ணாடியில் தட்டினார். நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அவர்தானா என்று கேட்டார். பின்னர் அவர் வெளியில் இழுத்தெடுக்கப்பட்டு தாக்கப்பட்டார். அவர்களில் ஒருவர் கைத் துப்பாக்கியின் பிடியினால் தாக்கினார். அதனால் முகத்தில் இருந்து இரத்தம் சிந்தியது. உதடுகள் கிழிந்து விட்டன. இன்னொருவர் இரும்புக் கம்பியால் தாக்கினார். பின்னர் அவரது கைத் தொலைபேசியையும் எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டார்கள்.

திலகரட்ணா இன்னுமொரு கைத் தொலைபேசியையும் காரில் வைத்திருந்துள்ளார். தாக்கியவர்கள் கண்ணில் அது படவில்லை. கஷ்டத்துடன் அதனை எடுத்து மனைவியிடன் தொடர்பு கொண்டு நடந்ததை கூறியுள்ளார். மனைவி உடனே வந்தார். அத்துடன் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. தனது மனைவியும் ஆபத்தில் இருப்பதாக திலகரட்ண அஞ்சியுள்ளார்.

இவை அனைத்தும் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் அறிக்கையொன்றை சிங்களத்தில் விடுக்குமாறு திலகரட்ண பணிக்கப்பட்டிருந்ததின் பின்னர் இடம்பெற்றவை.

நீதித்துறையில் தலையீடுகள் இடம்பெறுவதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை நிரூபிக்க பலமான ஆதாரங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் கடந்த ஞாயிறன்று ஊடகத்துக்கு வெளியிட்ட கருத்தில், தம்மீது விஷமத்தனமாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை மறுப்பதாகத் தெரிவித்தார். அவை உண்மைக்குமாறானவை. இவை எனக்கும் நீதிச் சேவையைச் சேர்ந்த ஏனையவர்களுக்கும் பாதுகாப்பு தொடர்பான கவலைகளைத் தோற்றுவித்துள்ளனவென்றும் கூறியிருந்தார்.

வழமைபோல் இன்னமும் பொலிஸாரால் தாக்குதல் நடத்திய மர்மக் கும்பலைக்கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆயுதம் தரித்த மர்மக்கும்பல்கள் இன்னமும் நடமாடித் திரிகின்றன. பொலிஸ் பதிவுகளில் அவை ''தீர்க்கப்படாத குற்றங்கள்'' என்ற வகையில் பதியப்படுகின்றதா என்பதை நிரூபிக்கும் இன்னுமொரு சம்பவமாக இது அமைந்துவிட்டது.

இதன் விளைவாக கடந்த திங்கள் மற்றும் செவ்வாய் தினங்களில் உயர் நீதிமன்றத்தையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தையும் தவிர நாடுமுழுவதும் நீதிமன்ற சேவைகள் ஸ்தம்பிதமாகின. கும்பல் தாக்குதலை எதிர்த்து நீதிவான்களும் சட்டவாளர்களும் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

### ராஜதந்திரிகள் அவதானிக்கிறார்கள்

இலங்கையின் மனித உரிமை செயற்பாடுகள் எதிர்வரும் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பூகோள பருவகால ஆய்வுகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட விருக்கும் நிலையில் இத் தாக்குதல் சம்பவத்தையொட்டிய விடயங்கள் கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களில் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வந்தன. நவம்பர் முதலாம் திகதியிலிருந்து இலங்கையின் மனித உரிமை செயற்பாடுகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதிலும் இந்த தாக்குதல் சம்பவம் விவாதத்துக்கு வரமாட்டாது. ஆனால் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் அடுத்த கூட்டத்தில் அது விவாதிக்கப்படக்கூடும்.

இந்த நிலைமையில் தற்போது இலங்கையில் இடம்பெற்று வரும் சம்பவங்களில் பல ராஜதந்திர அமைப்புகள் குறிப்பாக மேற்கு நாடுகளின் ராஜதந்திரிகள் அதிக அக்கறை செலுத்தி வருவதாக தெரிகிறது. குறிப்பாக இலங்கை நீதிச்சேவைகள் சங்கத்தின் செயற்பாடுகள். மேற்படி சங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையின்படி கடந்த செவ்வாயன்று சங்க உறுப்பினர்களின் விசேஷட கூட்டமொன்று கொழும்பு மாவட்ட நீதிமன்ற கட்டடத்தில் நடைபெற்றுள்ளது. ஜே.எஸ்.சி.செயலாளர் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலை சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. நாட்டில் சட்ட ரீதியான ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனம் நிலவ வேண்டியதன் அவசியம் பற்றியும் நீதிவான்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அறிக்கை கூறியது.

சட்டமா அதிபரின் திணைக்களம் நீதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படவேண்டும் என்பது குறித்தும் - அது தற்பொழுது ஜனாதிபதியின் கீழ் இருக்கின்றது. பொலிஸ் திணைக்களத்தை உள்துறை அமைச்சின் கீழ் கொண்டு வருவது குறித்தும் - தற்பொழுது பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருக்கின்றது. இக் கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்கப்பட்டதாக சட்டவாளர்கள் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இந்த விடயங்கள் நீதிவான்களால் விவாதிக்கப்படுவதற்கு முன்னரே சட்டமா அதிபர் திணைக்களத்தை நீதி அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிகின்றது.

பொலிஸ் திணைக்களம் உள்நாட்டு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்ற விடயம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளிலும் இடம்பெற்றுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிகாட்டும் வழிகாட்டி

த.சிவகுமார்
விரிவுரையாளர், விசேட கல்வித்துறை
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.



சர்வதேச வெள்ளை பிரம்பு தினம்
**ஒக்ரோபர் -15**

ஒருவர் ஐம்புலன்கள் ஊடாக புதிய விடயங்களைக் கற்றுக் கொள்கின்றார். இதில் ஒரு புலனில் குறைபாடு அல்லது பல புலன்களில் குறைபாடுகள் ஏற்படுவதனால் அவர் சமூகத்திலே வாழமுடியாதுஎன்பது அர்த்தமல்ல. பார்வைக் குறைபாடுடையோர் அனைவரும், இன்று உலக நாடுகளில் சாதாரணமானவர்கள் போன்று சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு சகல விதமான தொழில்களில் பணி செய்யும் அளவிற்கு ஆற்றல் பெற்றுள்ளனர். இவர்கள் சுயமாக சமூகத்தில் நடமாடுவதற்கு உதவும் கண் போன்ற கருவியே வெள்ளைப் பிரம்பு ஆகும்.

வெள்ளைப் பிரம்பு என்பது சர்வதேச ரீதியாக சட்டரீதியாக கண்பார்வை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு அடையாளச் சின்னமாகும். இப்பிரம்பு பார்வைக் குறைபாடுடையவரை பிறர் உதவியின்றி சுயமாக நடமாடும் சக்தியினை வழங்குகின்றது. அவர் மற்றவர்களில் தங்கி இருக்கும் நிலையினைத் தவிர்த்து அவரை சுயாதீனமாக்குகின்ற ஒரு சாதனமாகும். அத்தோடு வெள்ளைப் பிரம்பானது பார்வையற்றவர்கள் பார்வையுடையவர்களிடமிருந்து உதவியைக் கோரும் அடையாளச் சின்னமாகவும் விளங்குகின்றது.

வெள்ளைப்பிரம்பு தினமானது உலகெங்கும் உள்ள பார்வையற்றவர்களுக்கு ஒரு முக்கிய தினமாகக் கருதி கொண்டாடப்படுகின்றது. சர்வதேச விழிப்புலனற்றோர் சம்மேளனத்தின் மாநாட்டுக் கூட்டம் 1969 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்திலேயே ஒக்ரோபர் 15 ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதிலிருந்து அனைத்து நாடுகளிலும் இந்தத் தினத்திலே வெள்ளைப்பிரம்பு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதன் நோக்கங்களாக

1. வெள்ளைப் பிரம்பு பற்றியும், அதன் சர்வதேச அங்கீகாரம் பற்றியும் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம் வீதியில் அதனைத் தாங்கிச் செல்லும் விழிப்புலன் அற்றவருக்கு பாதுகாப்பையும், உதவியையும் பெற்றுக்கொடுத்தல்.

2. விழிப்புலன் இழந்தோரின் தகைமைகள், திறமைகள் என்பவற்றை வெளிக்கொணர்ந்து சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு நல்லதோர் சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொடுத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

### வெள்ளைப் பிரம்பின் சட்ட அங்கீகாரம்

1930 ஆம் ஆண்டு அமெரிக்கா இலினோய் மாவட்டத்திலுள்ள பியோரியா என்னுமிடத்தில், வெள்ளைப்பிரம்பு கண்பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னமென சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதனைச் சாதித்தவர்கள் அந்த இடத்தைச்சேர்ந்த லயன்ஸ் கழகத்தினர். இதனைத் தொடர்ந்து உலக நாடுகள் முழுவதிலும் சட்ட அங்கீகாரம் கொண்டு வருவதற்காக இவர்கள் பாடுபட்டு வருகின்றன.

★ வெள்ளைப் பிரம்பை தாங்கிச்செல்லும் ஒருவருக்கு வீதியில் முதலில் நடந்து செல்லும் உரிமையுண்டு. வீதியை முதலில் கடக்கும் உரிமையுண்டு.

★பொதுப் போக்குவரத்து வாகனமொன்றை எவ்விடத்திலும் மறிக்கவோ, சாத்தியமாகும்பட்சத்தில் அதில் பயணிக்கவோ உரிமையுண்டு.

★ ஒருவர் தன் வெள்ளைப் பிரம்பை இரண்டாக மடித்த நிலையில் வீதிக்குக் குறுக்கே உயர்த்திக் காட்டினால் அவர் வீதியைக் கடக்க முற்படுகிறார் என்பது அர்த்தம். வெள்ளைப் பிரம்பை தாங்கிச் செல்லும் ஒருவருக்கு வீதியிலே யாதேனுமொரு விபத்து ஏற்படுமாயின் அந்த விபத்தை ஏற்படுத்தியவருக்கு கூடுதலான தண்டனை வழங்குவதற்கு சட்டத்தில் இடமுண்டு.

### நாம் அனைவரும் பார்வைக் குறைபாடுடையவர்களுக்கு உதவுவோம்

1. வெள்ளைப் பிரம்பைத் தாங்கிச் செல்பவர் பார்வையில்லாதவர் அல்லது மிகக் குறைந்த பார்வையுடையவர் என்பதையும் பாதையிலே சுயமாக நடமாடும் உரிமை அவர்களுக்கும் உண்டு என்பதையும் மதித்துணருங்கள்.

2. அவசியம் ஏற்படும்போது அவர் ஒரு பாதையைக் கடக்க ஓர் இடத்தை கட்டடத்தை, பாதையைக் கண்டுபிடிக்க, எதிரே இருக்கும் வாகனம் போன்ற தடைகளில் மோதி விபத்துக்குள்ளாகாதிருக்க அவருக்கு உதவி செய்யுங்கள்.

3. வெள்ளைப் பிரம்பு தாங்கியவர் உதவி வேண்டிநின்றால் அவருக்கு உதவமுன்வரும் அதேவேளையில், வெள்ளைப் பிரம்பு தாங்கியவரைக் கண்டால் உதவி வேண்டுமா எனக் கேட்கத் தயங்க வேண்டாம்.

4. அவர் ஆபத்தான நிலையை, இடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தால் உடன் அவருக்கு அவர் நிலையை அறிவியுங்கள்.

5. அவர் பாதையில் நடக்கும் போதோ அல்லது கடக்கும்போதோ பாதையைத் தடை செய்யாதீர்கள்.

6. வெள்ளைப் பிரம்பைப் பற்றிய உண்மைகளை அறியாத உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அவற்றை பற்றிக் கூறுங்கள்.

7. வெள்ளைப் பிரம்பைப் பற்றி அறியாத பார்வையற்ற ஒருவரைச் சந்தித்தால் அதுபற்றி அவருக்கு எடுத்துக்கூறி அவர் அதனைப் பெற்றுக்கொள்ள வகை செய்யும் பொருட்டு, யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், லயன்ஸ் கழகங்கள் றோட்டறிக் கழகங்கள், அரச சமூகசேவைகள் பகுதி போன்றதொரு தொண்டர் அமைப்புக்கு அவரை வழி நடத்திச் செல்லல்.

### வாகன சாரதிகளும், சைக்கிளோட்டிகளும் செய்ய வேண்டிய உதவிகள்

1. வெள்ளைப்பிரம்பு தாங்கிச் செல்பவரைக் கண்டால் மிகக் கவனமாகவும் மெதுவாகவும் உங்கள் வாகனத்தையும் சைக்கிளையும் செலுத்துங்கள்.

2. அவர் பாதையைக் கடக்க முற்படும்போது வாகனத்தை நிறுத்திப் பாதையைக் கடந்து செல்ல அவரை அனுமதியுங்கள்.

3. மற்றொரு வாகனத்துக்கு இடமளிக்க முற்படும்போது வெள்ளைப்பிரம்பு தாங்கியவருக்கு அருகில் வர நேர்ந்தால் வாகனத்தை நிறுத்துங்கள்.

4. வாகனத்தின் கோணை அல்லது சைக்கிள் மணியைத் தொடர்ந்து அடித்துக்கொண்டு அவருக்கு மிக அருகில் செலுத்தி அவரைத் தடுமாற்றம் அடையச் செய்யவேண்டாம்.

5. இரு சைக்கிளோட்டிகள் சமாந்தரமாக வரும்போது, வெள்ளைப்பிரம்பு தாங்கிய ஒருவரைக் கடந்து செல்ல நேர்ந்தால் ஒருவர் வெள்ளைப் பிரம்பு தாங்கியவருக்கு ஒரு புறமும், மற்றவர் மறு புறமும் சைக்கிளைச் செலுத்திச் செல்ல ஒருபோதும் முற்படக் கூடாது அவ்வாறு நிகழும் போது அந்த நபர் தான் பாதையின் மத்திக்கு வந்து விட்டோமா என அச்சமடைகின்றார்.



6. ஒரு வெள்ளைப் பிரம்பு தாங்கியவரைக் கடந்து செல்ல நேர்ந்தால் பாதையின் கரையோரப் பகுதியில் இடமிருந்தாலும் கூட பார்வையற்ற அப்பாத சாரி...... கரைப்பக்கம் இருக்க நீங்கள் எப்போதும் வாகனத்தை பாதைப் பக்கமாகவே எடுத்துச் செல்லுங்கள்.

7. அசாதாரண சந்தர்ப்பத்தில் வெள்ளைப் பிரம்பைத் தாங்கியவர் ஆபத்து ஏற்படத்தக்க வகையில் நின்று கொண்டிருந்தால் வாகனத்தை நிறுத்தி விடுங்கள். அவரை அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லுமாறு கேட்பதை விடுத்து அவசியமானால் வாகனத்திலிருந்து இறங்கி சரியான இடத்தை அவருக்குக் காட்டி விடத் தயங்க வேண்டாம்.

### அரச, தனியார் போக்குவரத்து வாகன சாரதிகள் நடத்துநர்கள் செய்ய வேண்டிய உதவிகள்

1.வெள்ளைப்பிரம்பு தாங்கியவர்களுக்கு விசேட கவனமும், அக்கறையும் சலுகையும் காட்டுங்கள்.

2. பார்வையற்றவர்கள் வெள்ளைப்பிரம்புடன் கையை வீதிக்கு குறுக்காக நீட்டினால் அவர் வாகனத்தை நிறுத்தவிரும்புகிறார் என்பதைச் சாரதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

3. அவர் பஸ்ஸை மறிக்கும் இடம் ஒரு பஸ் தரிப்பிடமாக இல்லாவிட்டாலும் கூட பஸ்ஸை நிறுத்துங்கள்.

4. அவர் பஸ்ஸுக்காக தனித்து நிற்கும் இடத்து அவரைக் கடந்து செல்லுமுன் வாகனத்தை நிறுத்தி அதில் அவர் ஏறிக்கொள்ள நடத்துநர் அவருக்கு உதவி செய்தல் வேண்டும்.

5. வாகனத்தினுள் அவர் ஏறமுன் செல்லுமிடத்தைவிசாரித்து சரியான பஸ்ஸில் தான் ஏறுகிறாரா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

6. அவர் வாகனத்தில் ஏறி பொருத்தமான இடத்தில் நின்று கொள்வதற்கு அல்லது ஆசனத்தில் அமர்ந்து கொள்வதற்கு நடத்துநர்கள் உதவலாம் அது வரை சாரதிகள் வாகனத்தைச் செலுத்த ஆரம்பிக்க வேண்டாம்.

அவர் இறங்கவேண்டிய பஸ் தரிப்பு இடத்தைக் கேட்டறிந்து மறந்துவிடாமல் குறிப்பிட்ட இடத்தில் மறித்து அவரை இறக்கிவிடவேண்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலே பார்வைக்குறைபாடுடையவர்களுக்கு வழிகாட்டுவதற்காகபயிற்சியளிக்கப்பட்ட நாய்கள், சட்லைட் தொடர்புடைய வெள்ளைப்பிரம்பு என்பன பயன்படுத்தப்படுகின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலே வெள்ளைப்பிரம்பையே கூடுதலானோர் பயன்படுத்துகின்றனர். ஆகவே நாம் அனைவரும் இந்த நாளிலே அவர்களின் திறன்களையும், ஆற்றல்களையும் மதித்து அவர்களை எமது நாட்டின் சொத்தாக பாதுகாப்போம்.

வெள்ளைப் பிரம்பு என்பது சர்வதேச ரீதியாக சட்டரீதியாக கண்பார்வை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு அடையாளச் சின்னமாகும். இப்பிரம்பு பார்வைக் குறைபாடுடையவருக்கு பிறர் உதவியின்றி சுயமாக நடமாடும் சக்தியினை வழங்குகின்றது. அவர் மற்றவர்களில் தங்கி இருக்கும் நிலையினைத் தவிர்த்து அவரை சுயாதீனமாக்குகின்ற ஒரு சாதனமாகும். அத்தோடு வெள்ளைப் பிரம்பானது பார்வையற்றவர்கள் பார்வையுடையவர்களிடமிருந்து உதவியைக் கோரும் அடையாளச் சின்னமாகவும் விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம் வேண்டும்

மதுரையில் கூன்பாண்டியன் என்னும் பெயர் உடைய அரசன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன் சமண மயக்கத்தில் ஆழ்ந்திருந்த காரணத்தால் மக்களும் சைவத்தை மறந்து வாழ்ந்தனர். கூன் பாண்டியனின் பட்டத்து ராணியாகிய மங்கையர்க்கரசி என்னும் பெயருடைய புண்ணியவதி சைவத்தில் பெரும் பற்றுடையவர். தன் கணவனும் அரசனுமாகிய கூன் பாண்டியனைச் சைவத்துக்கு மாற்ற வேண்டும் என்று நினைத்த அவள், ஒரு தூதரை அழைத்து திருஞான சம்பந்தரை மதுரையம்பதிக்கு வரும்படி அழைப்பு விடுத்தார்.

மங்கையர்க்கரசியாரின் அழைப்பு வந்ததும் சம்பந்தர் உடனே மதுரையம்பதிக்குப் புறப்பட்டார். அப்போது அருகிலிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள், ''சமணர்கள் பொல்லாதவர்கள். உங்களுக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்க முயல்வார்கள். காலம் பார்த்துச் செல்லலாம்'' என்று கூறி அவரைத் தடுத்தார்.

''நாளும்... கோளும் நலிந்தோர்க்கில்லை'' என்று கூறிய ஞான சம்பந்தர் உடனே மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றார். அவருடைய வருகையை அறிந்த சமணர்கள் அச்சம் கொண்டார்கள். தங்கள் பிழைப்புக்கு அவரால் பாதகம் ஏற்படும் கற்பனை செய்து கொண்ட அவர்கள் சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்துக்கு தீ வைத்தனர்.

அதனைக்கண்ட ஆளுடைய பிள்ளையார் ( ஞானசம்பந்தர்), ''மடத்தைப் பற்றிய தீ மன்னனைப் பற்றுக'' என்று ஆணையிட்டார்.

அதன்காரணமாக கூன் பாண்டியனை வெப்பு நோய் பற்றியது. மன்னன் அந்த நோயினைத் தாங்க முடியாமல் துடித்தான். அப்போது சமணர்கள் மயில் பீலிகை கொண்டு வருடி பல மந்திரங்களை உச்சரித்தனர். வலி அதிகமாகியதே ஒழிய சிறிதும் குறையவில்லை.

மன்னன் தொடர்ந்து வலியால் துடித்துக் கொண்டிருந்தான். அதனைக் காண சகிக்காத மங்கையர்க்கரசியார், ''சைவப் பெரியோராகிய திருஞானசம்பந்தர் மதுரையம்பதிக்கு வந்திருக்கிறார். அவரால் உங்கள் நோயைக் குணப்படுத்த முடியும் என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன். அவரை இங்கே வரவழைக்கலாமா....?'' என்று கேட்டாள்.

எப்படியோ தன் நோய் குணமானால் சரியென்று கருதிய கூன்பாண்டியன் அவரை வரவழைக்கும் படி கட்டளையிட்டான். ஞானசம்பந்தப் பெருமான் அரண்மனைக்கு வந்து திருநீற்றினை மன்னன் மேனியில் பூசினார். அவனுடைய வெப்பு நோய் அவனை விட்டு விலகியது. அதைக்கண்ட சமணர்கள் தங்கள் பிழைப்புக்கு ஆபத்து வந்து விட்டதாகக் கருதி ஞானசம்பந்தரை அனல்... புனல் வாதத்துக்கு வரும்படி அழைத்தார்கள்.

அதோடு நின்றிருந்தால் கூடப் பரவாயில்லை. இந்தப் போட்டியில் தோற்பவர்கள் கழுமரம் ஏற வேண்டும் என்று நாவடக்கமின்றி கொக்கரித்தார்கள். எந்த விடயத்திலும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். வாதங்கள், பிரதிவாதங்கள் இருக்கலாம். ஆனால் காழ்ப்புணர்ச்சி கொண்டு ஒருவரை அழிப்பதிலேயே குறியாக இருப்பது அவர்களுடைய அடக்கமில்லாக் கொலைவெறியினைத் தானே காட்டும்....? ஞான சம்பந்தப் பெருமான் மதுரையம்பதிக்கு வந்து திருமடத்தில் தாங்கிய போது அந்தமடத்துக்குத் தீ வைத்தது அவரை அழிப்பதற்காகத்தான்.

கூன் பாண்டியனின் நோயைச் சமணர்களால் குணப்படுத்த இயலவில்லை. திருநீறு பூசி சம்பந்தப் பெருமான் குணப்படுத்தினார். அதனால் ஏற்பட்ட பொறாமையால் இப்படியெல்லாம் அடக்கமின்றி அவர்கள் நடந்து கொண்டார்கள். தகுந்த பாடம் கற்பிக்க எண்ணிய ஞானசம்பந்தர் அனல், புனல் வாதத்துக்கு ஒப்புக் கொண்டு தோற்றால் கழுவேற வேண்டும் என்கிற நிபந்தனையையும் ஏற்றுக்கொண்டார்.


அனல் வாதம் என்பது தாங்கள் எழுதிய ஓலைச் சுவடியை நெருப்பில் போட வேண்டும். எவருடைய ஓலைச்சுவடி தீயில் கருகாமல் உள்ளதோ அவரே வென்றவர் ஆவார். இதன்படி சமணர்கள் தங்கள் சுவடியை மந்திரம் ஓதி நெருப்பிலேபோட்டார்கள். அது எரிந்து சாம்பலாகியது. ஞானசம்பந்தப் பெருமான் சர்வேஸ்வரனை நினைத்து தமது ஓலையைத் தீயிலிட்டார். அது கருகாமல் பச்சையாகவே இருந்தது.

சமணர்கள் திடுக்கிட்டனர். இருப்பினும் அவர்களுடைய ஆணவம் அடங்கவில்லை. அவரைப் புனல் வாதத்துக்கு அழைத்தார்கள். அதன்படி தங்கள் ஓலைச்சுவடியை சமணர்கள் ஆற்றிலே இட்டார்கள். அது ஆற்றோடு அடித்துக் கொண்டு சென்றது. ஞானசம்பந்தப் பெருமான் தன்னுடைய ஓலைச்சுவடியை ஆற்றிலிட்டார். அது ஆற்றின் ஓட்டத்தில் செல்லாமல் எதிர்த்துக் கரையேறியது.

அனல்... புனல் வாதத்தில் தோற்ற சமணர்கள் கழுவேற வேண்டியதாயிற்று. ஞானசம்பந்தப் பெருமான் சமணர்களைக் கழுவேறச் சொல்லவில்லை. அவர்களாவே நாவடக்கமின்றி இப்படியொரு நிபந்தனையை விதித்து தங்களுக்குத் தாங்களே அழிவினைத் தேடிக் கொண்டார்கள். இதனையே வள்ளுவப் பெருந்தகை,

யாகா வாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு

என்று கூறுகிறார். ஒருவர் எதனைக் காக்கத் தவறினாலும் நாவையாவது காக்க வேண்டும். அவ்வாறு காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர் என்பது இதற்குப் பொருளாகும். இந்த நாவடக்கம் இல்லாத காரணத்தால்தான் சமணர்கள் தாங்களாகவே போட்டியையும் நிபந்தனைகளையும் விதித்த அழிந்து போக நேரிட்டது. ஆகவே அடக்கமே ஒருவரை உயர்த்தக்கூடியது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.



பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்

# ஆரம்பக் கல்வியில் வீறு நடைபோடும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை



லக்ஸ்மன்

'இந்துவின் ஆரம்பம் இனிய ஆரம்பம்' அதனால் தான் தமது பிள்ளைகளுக்கு இந்தப் பாடசாலையில் ஒரு இடம் கிடைத்தால் அதுவே பெரிய காரியம் என்று ஒவ்வொரு பெற்றோர்களும் முண்டியடிக்கிறார்கள். யாழ்.மாவட்ட ஆரம்பப் பாடசாலைகளில் முன்னணியில் திகழ்வது யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை என்பதில் பாடசாலைச் சமூகம் பெருமிதம் அடைவது நியாயமானதே. எமது பிள்ளைகளின் ஆரம்பக் கல்வியின் உச்ச நிலைக்காக அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையே பெற்றோர்களின் முண்டியடிப்புக்குக் காரணமாகும். பழமையும் வரலாற்றுப் பின்ணணியையும் கொண்ட சிறந்த பாரம்பரியம் மிக்க யாழ்.நகரிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஆரம்பப் பாடசாலை யாழ்இந்து ஆரம்பப் பாடசாலை ஆகும்.

18.1.1915 இல் ஆரம்பிக்கப்பட்ட இதன் உருவாக்கத்தில் இருந்து மாகாண சபையின் பங்களிப்பு முதன்மையும் காத்திரமும் கொண்டது மாகும். இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலை என ஆரம்பத்தில் இயங்கிய இந்தப் பாடசாலை அன்று ஆண் பிள்ளைகளுக்கென தனித்துவமாக ஆரம்பிக்கப்பட்டது. 5.3.1927 பெண்பிள்ளைகளும் கல்வி கற்கக் கூடிய கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. பெண்பிள்ளைகளின் ஆரம்பக் கல்வி அறிவுக்குமாக இந்தப் பாடசாலையின் இயக்கம் இருத்தல் முக்கியம் என்பதைக் கவனத்தில் கொண்ட பெரியவர்கள் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் ஆரம்பம் இந்துக்கல்லூரியுடன் இணைந்ததான காலகட்டத்தைக் கொண்டது எனவும் ஒருசாரர் கூறுகின்றனர். 1928 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப்பாடசாலை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கொட்டகையாக அமைக்கப்பட்டது. அதன் காரணமாகவே இந்துக்கல்லூரியுடன் இணைந்த வரலாற்றைக் கொண்டது என்ற நம்பிக்கையாகவும் இது இருக்கலாம். கஸ்தூரியார் வீதி 244 இலக்க இல்லத்தில் 1951.08.17 ஆம் திகதி இந்தப் பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைக்க அத்திபாரக்கல் நடப்பட்டது. கட்டட வேலைகள் பூர்த்தியடைந்ததும் 1954 இல் இது இயங்கத் தொடங்கியது. இந்துக்கல்லூரியின் நிர்வாக அமைப்பில் இயங்கிய இந்தப் பாடசாலை 1975 இல் இருந்து விலகி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் தனித்துவமான கட்டமைப்பின் ஆரம்பக் கல்விக்கான பாடசாலையாக வீறுநடை போடத் தொடங்கியது.

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரை வகுப்புக்கள் இருந்தபோதும் 1984-1985 ஆம் ஆண்டுகளில் தரம் ஆறு தொடக்கம் தரம் ஏழு வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டு, மீண்டும் தரம் ஒன்று முதல், தரம் ஐந்து வரை ஒவ்வொரு தரங்களிலும் ஆறு சமாந்தர வகுப்புக்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது. 1915 இல் ஆரம்பிக்கப்பட்டு 1927 இல் கலவன் பாடசாலையாகத் தோற்றம் பெற்றது. எனினும் இக்கால கட்டத்தில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களின் பெயர் விவரங்களை அறிய முடியவில்லை. 1942-1966 வரை க.முத்துக்குமார், 1966-1969 வரை இ.நல்லதம்பி,1969-1971 செ.சரவணமுத்து, 1971-1973 வரை எ.தருமலிங்கம், 1973-1985 வரை செ.கனரத்தினம் 1991-1992 வரை ஆ.அரவிந்தன் 1992-1998 வரை கா.தவராசா, 1998-2010 வரை வே.ஞானகாந்தன் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். தற்போதைய அதிபராக சு.தியாகலிங்கம் 2010 முதல் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1485 மாணவர்கள் வரை இங்கு கற்கின்றனர். யாழ். மாவட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் ஆரம்பப் பிரிவில் மிகக் கூடுதலான மாணவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பாடசாலை இது என்பது யாழ்.குடாநாட்டுக்கே பெருமை சேர்க்கின்றது.

பாடசாலையின் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் ஒவ்வொருகால கட்டத்திலும் பதவியில் இருந்த, இருக்கும் அதிபர்கள் முழுமையான பங்களிப்பை வழங்கி வந்துள்ளனர். பாடசாலைகளின் தேவைகளைத்துரிதமாக பெற்றுக் கொள்வதில் அதிபர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளே அங்கு இடம்பெறும் ஒவ்வொரு செயற்பாடுகளின் ஊடாகவும் தெரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளன. நிர்வாகக் கட்டமைப்பின் சாதனையாளர்களாகவும் சிறந்த முகாமைத்துவம் கொண்டவர்களாகவும் அதிபர்கள் விளங்குவதே இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும்.

பிள்ளைநேய மனப்பாங்கு கொண்ட அதிபர் ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரோக்கியம் மிக்கதாக, வினைத்திறன் கொண்டதாக உள்ளன. எல்லோரதும் அயரா முயற்சியும், அவர்கள் காட்டும் ஆர்வமும் குடாநாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் இப்பாடசாலை முன்னிலைப் பாடசாலையாக பரிணமிக்க உந்து சக்தியாக விளங்குகிறது. நாற்பத்திநான்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை பாடசாலையின் தொடர் வளர்ச்சிக்கு மெருகூட்டுவது குறிப்பிடத்தக்கது. 1485 மாணவர்கள் வரை இங்கு கற்கின்றனர். யாழ். மாவட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் ஆரம்பப் பிரிவில் மிகக் கூடுதலான மாணவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பாடசாலை இது என்பது யாழ்.குடாநாட்டிற்கே பெருமை சேர்க்கின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயருக்கு பிரியாவிடை



மட்டக்களப்பு,ஒக்.15

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயராகக் கடமையாற்றி திருமலை மறை மாவட்டத்துக்கு ஆயராகக் கடமையாற்றச் செல்லும் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையை வழியனுப்பும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இநத நிகழ்வில் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயராகக் கடமையாற்றிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையை அவரது ஆயர் இல்லத்திலிருந்து பிரமுகர்கள் மலர் மாலை அணிவித்து ஊர்வலமாக மண்டபத்துக்கு அழைத்து வந்தனர்.

அவரது சேவையைக் கௌரவிக்கும் முகமாக பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

இலங்கை சமாதானத்துக்கான சமயங்களின் சபை மட்டக்களப்பு கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிஷன் தலை வர் சுவாமி கபாலிஜி, காத் தான் குடி ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி எஸ்.எம்.அலியார் உட்பட அனைத்து மத பிரமுகர்கள் , மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## தீப்பெட்டி வாங்க கடைக்குச்சென்றவர் சடலமாக வீதியில்

பொகவந்தலாவ,ஒக்.15

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெர்க்கஸ் வோல்ட் மேற்பிரிவு தோட்டத்தில் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு அவரது வீட்டுக்கு அண்மையில் இருக்கும் கடைக்குச் சென்று தீபெட்டி வாங்கி வருவதாகக் கூறிவிட்டு சென்ற நபர் இரவு வீடு திரும்பவில்லை. அவரது மனைவி தேடிச் சென்றவேளையில், வீதியில் குறித்த நபர் சடலமாகக் கிடந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஹற்றன் நீதிமன்ற நீதிவான் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டார். பின்னர் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# உரிமைகளை வென்றெடுக்க இணையுங்கள் தொழிற்சங்கத்தில்

### தோட்டத் தலைவர்கள் கூட்டத்தில் அழைப்பு

நுவரெலியா,ஒக்.15

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமானால் தொழிலாளர்களின் தொழிற்சங்க அங்கத்துவம் முக்கியமானது. இன்று தோட்டங்களில் தொழில் செய்யும் ஒரு பகுதித் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்காமல் இருக்கின்றார்கள். இந்த நிலை தோட்டங்களின் தொழிற்சங்கத்தை பலவீனப்படுத்துவதாக அமையும் என்று தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி.அய்யாத்துரை தெரிவித்தார்.

ஹற்றன் அலுவலகத்தில் நடைபெற்ற தோட்டத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**தொழிற்சங்க அங்கத்துவம் தொழிலாளியை மாத்திரமல்ல, அவர்களின் குடும்பத்தையும் பாதுகாக்கின்றது.**

தொழிலாளர்கள் அரசியல் நடவடிக்கைகளில் கூடிய ஆர்வம் காட்டுவதால் தொழிற்சங்க அங்கத்துவத்தை முக்கியமாகக் கருதுவது இல்லை. ஆனால், தொழிலாளர்களாகப் பணிபுரியும் அனைவரும் தொழிலாளர்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணமுடியும். இதை தொழிலாளர்கள் உணராததால் பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தப்படும் போது தொழிற்சங்கத்தின் உதவியை நாடாமல் பிரச்சினையைத் தீர்க்க முடியாது, தொழிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

ஆகவே, ஒவ்வொரு தோட்டத்திலும் உள்ள தொழிலாளர்கள் அவசியம், தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் பெறவேண்டும். தொழிற்சங்க அங்கத்துவம் தொழிலாளியை மாத்திரமல்ல, அவர்களின் குடும்பத்தையும் பாதுகாக்கின்றது என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் சிந்தித்து தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்க வேண்டும்.

அங்கத்தவர்களின் பலமே தொழிற்சங்கத்தின் பலம், தொழிற்சங்கபலமே தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, உரிமைகளைவென்றெடுக்க சக்தி யாக திகழ்கின்றது என்பதை தொழிலாளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும். - என்றார்.(ச)

## விகாரைக்கு அருகில் தீக்கிரையானது பஸ்

தொம்பே,ஒக்.15

தொம்பே, பரகடுமுள்ள பௌத்த விகாரைக்குச் சமீபமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு தீப்பிடித்து முற்றாக எரிந்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் குறித்த பஸ் ஒன்றே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

தொழிலாளர்களை வீட்டில் இறக்கிவிட்டு குறித்த பஸ் விகாரைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளையே தீப்பிடித்து எரிந்துள்ளது.

பஸ் தீப்பிடித்து எரிந்தமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பஸ்ஸின் சாரதி குறித்த பஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அண்மையில் வசிப்பவர் என்றும் பொலிஸார் கூறினர். (ச)

## கண்டியில் பௌத்தர்கள் ஆர்ப்பாட்டம்...




பங்களாதேஷில் பௌத்த விகாரைகள் சேதப்படுத்தப்பட்டமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் இயக்கத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகளும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண் டனர். (ச)

# மோசமான வறட்சியால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

### முதலாளிமார் சம்மேளனம் திணறல்

பதுளை,ஒக்.15

நாட்டில் நிலவிய கடும் வறட்சியான காலநிலை காரணமாக உயர்நில தேயிலை உற்பத்தி 11.6 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பெருந் தோட்ட முதலாளிமார் சம் மேளனம் தெரிவித்துள்ளது.

இலங்கை தேயிலை சபையின் மூலம் வெளியிடப் பட்டிருந்த புள்ளி விவரங் களுக்கு அமைய கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் உயர்நிலத் தேயிலை உற்பத்தியின் அளவு 54.7 மில்லியன் கிலோ வாகக் காணப்பட்டது.

இந்த வருடம் இந்தப் பெறுமதி 48.3 மில்லியன் கிலோவாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று குறித்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள பெருந் தோட்டங்களில் இறுதியாக 2012 மே மாதத்துக்குப் பின்னர் செப்ரெம்பர் மாதம் வரையில் குறிப்பிடத்தக்களவு மழை வீழ்ச்சியின்றி வறட்சியான காலநிலையே நிலவியது. இதன் காரணமாக வேலை செய்யும் நாள்கள் குறைவடைந்தது. ஊடுவெரி தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டு இங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் தெமோதர தொழிற்சாலைக்கு மாற்றப்பட்டனர் என்று பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# 1600 மில்லியன் செலவில் மண்முனைத் துறையில் பாலம்



மட்டக்களப்பு,ஒக்.15

மட்டக்களப்பு, மண்முனைத்துறையில் 1600 மில்லியன் ரூபா செலவில் பாலம் அமைக்கப்படுகின்றது.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து குறித்த பாலம் நிர்மாணிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நீர்வழிப் போக்குவரத்துப் பாதை யாணமண்முனை-கொக்கட்டிச் சோலையை இணைக்கும் வகையில் இந்தப் பாலம் அமைக்கப்படுகின்றது.

இந்தப் பாலம் அமைக்கப்படுவதால் போரால் பாதிக்கப்பட்ட கொக்கட்டிச்சோலை மற்றும் மீளக்குடியமர்ந்த கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மை அடையவுள்ளனர். ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் இந்தப் பாலத்தின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பட்டதாரிப் பயிலுநர் நிரந்தர நியமனத்தில் அரசியல் தலையீடு என்கிறார் அரியம் எம்.பி.



எருவில்,ஒக்.15

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சார்பாக பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் விடயத்தில் அரசியல் தலையீடு இடம்பெறுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கண்டனம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

இந்த நியமனங்களில் சிலர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சார்பாக பிரதேச செயலகங்களுக் கெனத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் அரச கட்சி ஆதரவாளர்கள் தவிர ஏனையோருக்கு, குறித்த பொருளாதார அமைச்சின் கீழ் நிரந்தர நியமனம் வழங்கக் கூடாது. வெற்றிலைக்கட்சி சார்ந்தோருக்கு மாத்திரமே சகல நியமனங்களும் வழங்கப்பட வேண்டும் என்று ஆளும் தரப்பில் உள்ளோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் நான் முறையிட்ட போது, அரசியல் தலையீடு இன்றி தாங்கள் ஏற்கனவே தயாரித்த பட்டியலுக்கமையவே இந்த நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார் - என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் இருந்த கவலை விலகி, உற்சாகம் பெறுவீர்கள். தொழில், வியாபார வகையில் இருந்த இடையூறு விலகும். அதிகமான புதிய வாய்ப்புகள் தேடி வரும். தாராளமான பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** தொழிலில் உள்ள குளறுபடியைச் சரிசெய்வதால், ஓரளவு வளர்ச்சி கிடைக்கும். குறைந்தளவில் பணவரவு இருக்கும். குடும்பத்தின் நடைமுறைச் செலவை ஈடுகட்ட சிறிதளவு பணக்கடன் பெறுவீர்கள். வாகன பயணத்தில் மிதமானவேகத்தைப் பின்பற்றவும்.

**மிதுனம்:** உங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்களின் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். நல்ல கருத்துச் சொன்னாலும், உங்களைக் குறை சொல்லும் நிலை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும்.

**கடகம்:** நீங்கள் உங்களைச் சார்ந்தவர்களின் சூழ்நிலை அறிந்து செயற்படுவீர்கள். நல்ல பெயரும், மரியாதையும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த தடங்கல் விலகும். தாராளமான பணவரவு கிடைத்து, மனமகிழ்ச்சி கொள்வீர்கள்.

**சிங்கம்:** உங்கள் மனதில் இனப்புரியாத குழப்பம் ஏற்படலாம். செயல்கள் நிறைவேறுவதில் மந்தமான நிலை இருக்கும். தொழில், வியாபார நடைமுறை சிறக்க, கூடுதல் பணிபுரிவது அவசியம். அளவான பணவரவு கிடைக்கும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும்.

**கன்னி:** நீங்கள் எந்தச் செயலையும் இலகுவாக அணுகுவீர்கள். சவால் நிறைந்த பணிகளில் திட்டமிட்ட வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரம் சிறந்து குடும்ப உறுப்பினர்களிடம் பாராட்டு பெறும். பணவரவு, சேமிக்கும் வகையில் உயர்வாக கிடைக்கும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**நாளை**

புரட்டாதி - 30 செவ்வாய்க்கிழமை 16.10.2012
திதி: பிரதமை பி.ப. 04.26வரை
நட்சத்திரம்: சித்திரை மு.ப 09.01 வரை
சுபநேரம்: 10.32- 12.02 வரை
ராகுகாலம்: 03.02- 04.32 வரை

**துலாம்:** உங்களிடம் பகைமை எண்ணத்துடன், சிலர் நடந்து கொள்வர். விலகிப் போவதால், நேரமும், சுயகௌரவமும் பாதுகாக்கப்படும். தொழில், வியாபார வளர்ச்சிப் பணியை பின் ஒருநாளில் ஆரம்பிக்கலாம். பணவரவை விட, அன்றாடப் பணச்செலவு கூடும்.

**விருச்சிகம்:** திறமையும், சமூகத்தில் செல்வாக்கும் பெற்ற ஒருவர், உங்களிடம் நட்புப் பாராட்டி உதவுவார். திகைப்பு தந்த பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுவீர்கள். பணம், கொடுக்கல்வாங்கல் முன்னேற்றம் பெறும்.

**தனுசு:** உங்களைச் சுற்றி நடைபெறும் நிகழ்வு, இனிய அனுபவம் தருவதாக இருக்கும். பிறரை ஊக்கப்படுத்தும் வகையில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திருப்திகரமாகும். உத்தியோகத்தர் நிர்வாகம் நிர்ணயித்த இலக்கை நிறைவேற்றி நற்பெயர், வெகுமதி பெறுவர்.

**மகரம்:** உங்கள் உறவினர் ஒருவரின் பாசம் வியப்பைத் தரும். ஆரவாரத்துடன் செயற்படுகிற சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சராசரி நிலை இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் மனதில் சஞ்சலம் தோன்றி விலகும். மனம் விரும்பாத நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல், ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் குளறுபடித் தன்மை இருக்கும். நிதானமான அணுகுமுறை நன்மை தரும்.

**மீனம்:** உங்கள் மனதில் கருணையும், இரக்கமும் அதிகரிக்கும். பழகுபவர்களிடம் கூடுதல் அன்பு பாராட்டுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி சிறப்பாக நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | 2 | | | | 8 |
| | 9 | 6 | | | | | | 2 |
| 1 | | 4 | 7 | | | 3 | 9 | |
| | | | 3 | | | | | |
| 3 | 5 | 9 | 2 | 7 | 6 | 8 | 4 | 1 |
| | | | | | 8 | | | |
| | 8 | 7 | | | 4 | 6 | | 9 |
| 9 | | | | | | 1 | 5 | |
| 5 | | | | 3 | | 2 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 6 | 1 | 2 | 4 | 3 | 7 | 9 |
| 2 | 9 | 1 | 3 | 8 | 7 | 5 | 4 | 6 |
| 4 | 7 | 3 | 6 | 9 | 5 | 8 | 1 | 2 |
| 6 | 1 | 2 | 8 | 4 | 3 | 9 | 5 | 1 |
| 9 | 8 | 4 | 5 | 7 | 1 | 2 | 6 | 3 |
| 5 | 3 | 7 | 2 | 6 | 9 | 4 | 8 | 1 |
| 3 | 4 | 5 | 7 | 1 | 2 | 6 | 9 | 8 |
| 1 | 6 | 9 | 4 | 3 | 8 | 7 | 2 | 5 |
| 7 | 2 | 8 | 9 | 5 | 6 | 1 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை நாகரத்தினம்



ஆனைக்கோட்டைப் பாடசாலை வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நாகரத்தினம் கடந்த (11.10.2012) வியாழக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - சின்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகளும், சின்னத்துரையின் (ஆசிரியர்) அன்புமனைவியும், ஸ்ரீறஞ்சிதம் (ஜேர்மனி), ஸ்ரீஸ்வரானந்தன் (கனடா), றமணி (கனடா), ஜோதி, ஜெகன் (சுவிஸ்), ருஜேஸ் (சுவிஸ்), கலா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2012) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.30 மணியளவில் பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

M.M.T. பாடசாலை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(24169)(6.7.8)

# நா தழும்பக் கதறுகின்றோம் நான்காம் ஆண்டில்



அன்னை மடியில் 12.04.1961
ஆண்டவன் அடியில் 29.09.2008

முன்னாள் ஆசிரிய ஆலோசகர்

அமரர் உயர்திரு. கந்தசாமிப்பிள்ளை விக்கினராஜேஸ்வரன்

(B.Sc., Dip. in Edu., SLPS)

திதி: 15.10.2012

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தோம்
நினையாது ஒருபோதும் இருந்தறியோம்.

ஆருயிர் மனைவி,
குடும்பத்தினர்,
நயினாதீவு.

பன்னாலை,
தெல்லிப்பழை.

((24144) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூரை மீது ஏறி நின்று யுவதிகள்ஆர்ப்பாட்டம்

**16 தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்ட பெண் களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

கொழும்பு,ஒக்.15

ஜயவர்தன பல்கலைக் கழகத்துக்கு அருகில் அமைந்துள்ள மெத் செவன புனர்வாழ்வு நிலைய கூரையின் மேல் ஆறு பெண்கள் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக 119 அவசர பொலிஸ் தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிரிஹாண பொலிஸ், சிறுவர் மற்றும் பெண்கள் திணைக்கள அதிகாரிகள் குழு சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தியுள்ளது.

16 தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வரி வருமானம் அதிகரிக்கப்படும்

## நடவடிக்கையில் அரசு

கொழும்பு,ஒக்.15

உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக வரி வருமானங்களை அதிகரித்துக் கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகள் வழங்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பின்தங்கிய உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மந்தநிலையில் காணப்படுகின்றன.

இதனால் வரி வருமானங்கள் குறைவாகக் காணப்படுவதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. இதனால் அவ்வாறான மன்றங்களின் உறுப்பினர்களுக்கு சலுகைகளை வழங்கி, வரி திரட்டல், அனுமதி மற்றும் உறுதிபாடுகளைப் பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகள் நவீனமயமாக்கப்படவுள்ளன.

**2013 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான சலு கைகள் வழங்கப்படவுள்ளன**

இதன் அடிப்படையில் வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதே அரசின் திட்டமாகவுள்ளது.

இலங்கையில் தற்போது 330 உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும்

## கோத்தாவின் விருப்பம்



கொழும்பு,ஒக்.15

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்று பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு, கள நிலவரங்களைக் கருத்தில் கொண்டு 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாமற் செய்ய வேண்டும் அல்லது அதில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

13 ஆவது திருத்தத்தில் எதுவும் இல்லை. ஆனால், போருக்குப் பிந்திய அபிவிருத்தி முயற்சிகளுக்கு அது தடையாக உள்ளது.

இலங்கை அரசுக்கு எழுந்துள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சுறுத்தல்களை முறிடியப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

13 ஆவது திருத்தச் சட்டமும், நோர்வேயின் ஏற்பாட்டில் 2002 பெப்ரவரியில் கையெழுத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்பாடும் ஒரே வகையானவை. இவை இரண்டினாலும் மக்களுக்குப் பயனில்லை. அரசு உடனடியாகச் செயற்படத் தவறினால், தற்போதைய நெருக்கடிகள் நிச்சயமாக தேசிய பாதுகாப்பின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.- என்றார். (ச)

# பெற்றோல் விலையும் அதிகரிக்கலாம்

கொழும்பு,ஒக்.15

விரைவில் பெற்றோலின் விலையும் உயர்த்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்து செல்கின்றது என்று குறித்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, விரைவில் பெற்றோல் விலையை உயர்த்த நேரிடும் என்று லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுபோத் திக்வெல்ல தெரிவித்தார்.

டீசலுக்கான விலையை லீற்றர் ஒன்றுக்கு, 4 ரூபாவால் அண்மையில் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் அதிகரித்திருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.

பெற்றோல் இறக்குமதிக்கான வரி காரணமாக அதிகளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே விரைவில் பெற்றோலுக்கான விலையை உயர்த்த வேண்டி நேரிடும் என்றும் அவர் கூறினார். (ச)

## ஆணைக்குழு செயலர் தாக்குதல் சம்பவம்:

# போதும் கண்டனங்கள் விசாரணையே வேண்டும்

## சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் கூறுகிறார்



கொழும்பு,ஒக்.15

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மீதான தாக்குதல் குறித்து கண்டன அறிக்கைகளை வெளியிடுவதைவிட, பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்த வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு உரிய முறையில் தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி, சட்டமா அதிபர் மற்றும், பொலிஸ் மாஅதிபர் ஆகியோரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள்குழுகொழும்பில்நேற்று முன்தினம் சனிக்கிழமை கூடி கலந்துரையாடலில் ஈடுபட்டது.

இந்தத் தாக்குதலை நீதிமன்றத்தின் சுயாதீன தன்மையைப் பாதிக்கும் சம்பவமாகக் கருதி, இதனைக் கண்டிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் நீதிமன்றத்தின் சுயாதீன தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி, திட்டமொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அதிகாரிகள் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ச)

# ஐ.தே.கட்சியின் தடைகளை மீறி பொன்சேகாவின் பேரணிக்கு ஆதரவு

## தலைமைக்கு அதிகாரம் இல்லை என்கின்றனர் உறுப்பினர்கள்

கொழும்பு,ஒக்.15

சரத்பொன்சேகா ஏற்பாடு செய்துள்ள பேரணி ஒன்றில் கலந்துகொள்ள வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி, அதன் உறுப்பினர்களுக்கு விதித்திருந்த தடையை அதன் உறுப்பினர்கள் சிலர் புறக்கணிக்கவுள்ளனர்.

இந்தத் தடையையும் மீறி தாம் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளவுள்ளதாக, கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவாரப் பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய, பாலித ரங்கேபண்டார மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

**ஐக்கிய தேசியக் கட்சி அதன் உறுப் பினர்களுக்கு விதித்திருந்த தடையை அதன் உறுப்பி னர்கள் சிலர் புறக்கணிக் கவுள்ளனர்.**

சரத் பொன்சேகாவின் அரச எதிர்ப்புப் பேரணி எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் கலந்துக்கொள்ள கட்சி உறுப்பினர்களுக்குத் தடை விதிக்கும் அதிகாரம், கட்சியின் தலைமைக்கு இல்லை என்று அவர் மேலும் கூறினார். (ச)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்த 5 திட்டங்கள்

## அனோமா திசாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு,ஒக்.15

இலங்கையிலுள்ள சிறார்களுக்காக ஐந்து வகையிலான சிறுவர் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானித்துள்ளது. இதன் பொருட்டு நீண்டகால நோக்கில் திட்டங்களை வகுத்து வருவதாக அதிகாரசபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்தார்.

நாளாந்தம் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அன்பு மற்றும் அஹிம்சை வழிகளில் சிறார் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை சிறார்கள் மத்தியில் தொற்றாத நோய்கள் அதிகரித்து வருகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறார்களிடையே நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைந்து வருகின்றமையே இதற்கான காரணம் என்று சிறுவர் மருத்துவ நிபுணர் தீபாலி பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிகளுக்கு வெற்றிடம்

கொழும்பு,ஒக்.15

நாட்டில் 14 பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய முறைமையின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும், சில மாவட்டங்களின் பணிகளை ஒரே பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேற்பார்வை செய்து வருகின்றார். இதனால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. சில முக்கிய மாவட்டங்கள் மற்றும் முக்கிய துறைகளுக்குப் பொறுப்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்படவில்லை. வெற்றிடமாகியுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிகளுக்கு உரிய முறையில் நியமனங்கள் வழங்கப்படாவிட்டால் பொலிஸ் திணைக்களத்தில் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படும் என்று கூறப்படுகிறது.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டில் இரண்டு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் ஓய்வு பெற்றுக்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு

## கூறுகிறார் சந்திரிகா



கொழும்பு,ஒக்.15

இலங்கையில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

நாட்டில் அதிகாரத் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று அவர் கூறினார்.

ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. 17 ஆம் திருத்தச் சட்டம் வலுவிழக்கச் செய்யப்பட்டு, 18 ஆம் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், நாட்டில் எதேச்ச அதிகாரத் தன்மை உருவாகியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரம், ஜனநாயகம் ஆகியன நல்லாட்சியின் மிக முக்கியமான அங்கங்களாகும். எனவே சகல தரப்பினரதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இதனையே ஜனநாயகமாக ஏற்றுக்கொள்ள முடியும் என்றுஅவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்

**திரு.செ. சேதுராஜா**

(B.A. PGDE, PGDEM, M.Sc (Ed.Mgt)
M.Phil (Ed), SLEAS - III



பகுதித் தலைவர்

**திருமதி இரஞ்சினி சிவராசா**

B.Sc, PGDE



**திரு. வீ. சுதர்சன்**

(B.Ed)

Best Wishes

கரவெட்டியூர் சமூகத்தின் தனித்துவமான கல்வி மரபுகளையும் விழுமிய பாரம் பரியங்களையும் தன்னகத்தே கொண்டு அறிவுலகின் புகழ் பூத்த கல்லூரி ஆகிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் தசாப்த கால சேவையை வழங்கிய அதிபரான திரு.செ. சேதுராஜா கல்லூரியின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் உறுதுணையாக இருந்த அதிபர் (09.10.2012) மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் ஆசிரியர் **பிரதீபா பிரபா** விருது வழங்கும் தேசிய விழாவில் வடமராட்சி வலயத்தில் தொடர்ந்து இரண்டாவது தடவையாக சிறந்த அதிபர்விருது பெற்ற எமது அதிபர் அவர்களையும் சிறந்த ஆசிரியர் விருது பெற்ற திருமதி இரஞ்சினி சிவராசா பகுதித் தலைவர் அவர்களையும் இந்த வருடம் சிறந்த ஆசிரியர் விருது பெற்ற திரு. வீ. சுதர்சன் அவர்களையும் அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**செல்லமுத்தூஸ்,** பிரதான வீதி, நெல்லியடி.

(23647) (45.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில்
13.06.1962

விண்ணில்
15.09.2012

**திருமதி மல்லிகாதேவி சுதாகர்**

கடந்த (15.09.2012) அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் மல்லிகாதேவி சுதாகர் அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (15.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

**குடும்பத்தினர்**

## 31 ஆம் நாள் நினைவலையும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
15.04.1946

ஆண்டவன் அடியில்
16.09.2012

**காத்தலிங்கம் பொன்னம்பலம்**

(கர்க்கண்டஜயா)

ஆழ்கடலில் எழும் அலைகளைப் போல்
ஆயிரம் நினைவுகள் மோதுகின்றன
ஆலமர விழுதுகளாய் எம்மை
காத்திருந்தீர்கள் மாண்டழிந்து போனாலும்
மறக்கமாட்டோம் எம் தந்தையே!
எம் கவலையை சொல்லியழ புவிதனில் யாருமில்லை
உம் சிரித்த முகத்தினை இனி எப்போது காண்போம் அப்பா
உம் ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.


எம் குடும்பத்தலைவர் மரணமடைந்த செய்தி கேட்ட உடன் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கட்கும், நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் (16.10.2012) செவ்வாய்க்கிழமை காலை அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று அஸ்த்தி ஊறணி தீர்த்தக்கடலில் கரைக்கப்பெற்று அன்னாரின் இல்லத்தில் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும், மதியபோசனமும் இடம்பெறும் வைபவத்தில் தாங்கள் குடும்ப சகிதமாக பங்குபற்று மாறு வேண்டுகின்றோம்.

[illegible] கடற்கரை வீதி,
வல்வெட்டித்துறை

**பிள்ளைகளும், மருமக்களும்.**

(24067)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும்பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தொடரும் டெங்கு அச்சுறுத்தல் தீவிரமாகும் ஒழிப்பு நடவடிக்கை

### சுகாதாரப் பகுதியினர் பல இடங்களில் சோதனை



யாழ்ப்பாணம், ஒக்.15

குடாநாட்டில் அதிகரித்து வரும் டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக அனைத்து சுகாதாரப் பிரிவுகளிலும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டெங்கு நோயாளர்கள் தொடர்ச்சியாக இனங்காணப்பட்டு வருவதாலும், மழை காலத்தில் நுளம்பு பெருகும் சூழல் காணப்படுவதாலும் அதற்கு முன்னெச்சரிக்கையாக இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை வீடு வீடாகச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துஅறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர். சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்புப் பிரிவினால் வழங்கப்பட்ட டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அறிக்கையிடும் அட்டையில் சுகாதாரப் பரிசோதகர்கள் அடையாளப் படுத்துவதுடன், நுளம்பு பெருகும் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைவாக இளவாலை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட 1265 வீடுகளில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொண்ட போது இரண்டு வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனைவிட நல்லூர், யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.''வீட்டில், வளவுக்குள் நீர் நிறைந்த சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், பிளாஸ் ரிக் பாத்திரங்கள், பொலித்தீன் உறைகள், ரயர்கள் மற்றும் குப்பை கூளங்களை உடனடியாக அழித்துவிடுங்கள்'' ''தவறாமல் கிழமைக்கு ஒருமுறை உங்கள் சுற்றாடலினுள் டெங்கு நுளம்பு உருவாகும் இடங்களை இனங்கண்டு அழித்துவிடுங்கள்'' போன்ற வாசகங்களைத் தாங்கிய துண்டுப் பிரசுரங்கள் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு, யாழ். பொலிஸ் பிரிவு ஆகியவற்றின் அனுசரணையுடன் வீடு வீடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை,கோப்பாய், இருபாலைப் பகுதிகளிலும் டெங்கு நோயைக் கட்டுப் படுத்தும் விழிப்புணர்வு செயற்பாடுகளில் சுகாதாரப் பகுதியினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மட்டும் இந்தப் பிரதேசத்தில் உள்ள ஆயிரத்து ஐம்பது வீடுகள் சுகாதாரப் பகுதியினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சுகாதாரப் பகுதியினருக்கு உதவியாக பொலிஸாரும் இணைந்து இந்த சோதனையில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் வீட்டு சுற்றாடல்கள் மற்றும் பொது இடங்களும் இந்தச் சோதனைக்கு இலக்காகின. போதிய சுகாதார வசதி இன்றி இருக்கும் சுற்றாடல்களை உடனடியாக துப்புரவு செய்யுமாறும் சுகாதார பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டது.

அதனைவிட சுற்றாடல்களில் காணப்படும் குப்பைகள் மற்றும் செடிகொடிகள் புற்களை உடனடியாக அழிக்குமாறும் சுகாதார பகுதியினரால் அறிவுறுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் சுகாதாரப் பகுதியினர் இந்தப் பிரதேசத்தில் பெருமெடுப்பில் மேற்கொண்ட இந்த டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் தொடர்ந்தும் இடம்பெறும் என்று சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பகுதியில் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் கிராமங்கள் தோறும் விஸ்தரிக்கப்படவுள்ளன- என்றார் அவர்.

(3-14-7- 555-23-17)

## அங்கத்தவராக ரூபா 1,000

வரணி, ஒக்.15

தென்மராட்சி கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையில் ரூபா ஆயிரம் செலுத்தி அங்கத்தவராக இணைந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவராகச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் வீடுகளில் நிகழும் நிகழ்வுகளுக்கு கதிரைகளை இலவசமாக வழங்கவுள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்று உதயனில் வெளியான செய்தியில் 1,000 ரூபாவுக்குப் பதிலாக 100 ரூபா என தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. (ஒ-3)

## வசதி குறைந்த மக்களுக்கு உதவிகள்

செம்பாட்டான் தோட்டம் மூளாய், வேரம்பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் உதவிகளை வழங்கியுள்ளார். முன்பள்ளிக்கான உதவிகள், இரு பெண்களுக்கு தையல் இயந்திரம், 51 வறிய மாண வர்களுக்கு ஓர் ஆண் டுக்கு கல்வி கற்பதற்கான உதவு தொகை, 8 வறிய மக்களுக்கு வீட்டுக் கூரை, வசதிகள் என்பவற்றை சரவணபவன் செய்து கொடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (3)

## மின்னியலாளருக்கான பயிற்சிநெறி

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையின் ஏற்பாட்டில் மின்னியலாளருக்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 16 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த சாதாரணதரம் வரை கற்றிருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் தங்களது சுய விவரக்கோவையை எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட முகாமையாளர், இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ண பாலன் அறிவித்துள்ளார்.(3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

எமது பாடசாலை முதல்வர்

திரு. சேதுபாண்டியர் அம்பிகைபாகன்

(Sp. Trd (Primary) B.Ed, DSM, SLPS 2 - II

(கிளி/ செல்லியாதீவு அ.த.க. பாடசாலை)

அவர்கள் 02.10.2012 அன்று மாண்புமிகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களின் திருக்கரங்களால் சேவைத்தரம் 2 - II இற்கு அதிபராக பதவி உயர்த்தப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்மேலும் பலபட்டங்கள், பதவிகளைப் பெற்று நீடூழி காலம் சிறப்பாக வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், (24106)(6.7.8)

பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பழைய மாணவர்கள் பெற்றோர்கள் (கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

2012 தரம் 05 புலமைப்பரிசில் பரிட்சையில் 158 புள்ளி களைப் பெற்று சித்தியடைந்து எமது வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்த

செல்வி ரவீந்திரன் மதுசனா

அவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த

செல்வன் சிவபாலன் செந்தாளன் (144 புள்ளிகள்)

செல்வன் பரமநாதன் அபிநாத் (140 புள்ளிகள்)

இவர்களுடன் 70 புள்ளிக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம். (தீ/9399)(6.7.8)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/ வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் நல் ஆசான் எனும் சொல்லுக்கு இலக்கணமாகி 2012 ஆம் வருடத்திற்குரிய பிரதீபா பிரபா விருதினைத் தனதாக்கிக் கொண்ட நம் ஆசிரியர்

இரத்தினசிங்கம் சபேசன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் உளம் நிறைகின்றோம்.

மு/ வற்றாப்பளை மகா வித்தியாலய கல்விச் சமூகம், வற்றாப்பளை, முள்ளியவளை.

(20925)(45-6-7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. கதிரவேற்பிள்ளை கஜேந்திரன்

அவர்கள் 02.10.2012 அன்று அலரிமாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் 2 – II இற்குரிய பதவி உயர்வு நியமனத்தைப் பெற்றுக் கொண்ட பெருமை மிகு நிகழ்வைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலை. (24560)(6.7.8)

வீடு வாடகைக்கு

207, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு எனும் முகவரியில் அமைந்துள்ள விசாலமான வீடு வாடகைக்குண்டு.

(சி/4142)(9.14) தொடர்பு- 0776179105

வான் விற்பனைக்கு

HR- XXXX டொல்பின் டுவல் ஏசி சுப்பர் GL உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:

(24134)(3.6) 0778393896

திருத்தி வாசிக்கவும்

2012.10.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான உதயன் பத்திரிகையின் 20 ஆம் பக்கத்தில் பாராட்டி வாழ்த்துகிறோம் பகுதியில் [illegible] [illegible] சிங்கம் என்று திருத்தி வாசிக்கவும்.

(23987)(6-7-45)

அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



செல்வராசா கின்ஷிகா

(கிளி/ சோரன் பற்று சி.சி.த.க. பாடசாலை (பேராலை)

2012 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரீட்சையில் 148 புள்ளிகளை பெற்றமைக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு பல்கலையும் பெற இறைவன் அருள் புரிவாராக

வாழ்த்துவோர். அம்மம்மா, நவம் மாமா, சித்தப்பா,சித்தி, தம்பிமாரான மிது, சோபன், கபிசன், அன்ரி, தாசன்னா.

பிரதான வீதி, கண்டாவளை. [23542][3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

**"அன்புத் தந்தையின் பன்னிரு திங்கள் நினைவும்......!**
**அருமை அம்மாவின் இருபத்தொன்பது திங்கள் நினைவும்.......!"**



அமரர்
**திரு. மரியாம்பிள்ளை**
**எட்வின் ஜோசப்**



அமரர்
**திருமதி. எட்வின் ஜோசப்**
**இராஜமலர்**

பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்,
வாழ்வின் வழிகாட்டியாய், வாழ்ந்த எம் குலவிளக்குகளே..!
எங்கள் உயிரே அப்பா ! அம்மா!காலங்கள் ஓடி
மறைந்தாலும் உங்கள் நினைவுகள் ஓடி மறையவில்லை.
எங்கள் அன்புப் பெற்றோரின்,
பாதங்களிற்கு......
எங்கள் கண்ணீர் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

**உங்கள் அன்புப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(C/4138)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

பலவருடங்களின் பின்னர் எமது பாடசாலைக்கு 2012 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்ற

செல்வி **செல்வராஜா கின்ஷிகா**

**(148 புள்ளிகள்)**

கோட்டம் - பளை கிளி/சோரன் பற்று சி.சி.த.க. பாடசாலை, பேராலை

சித்தி பெற்று பாடசாலைக்குப் பெருமை சேரத்துள்ளார். இவரை பல்லாண்டு காலம் வளமுடன் மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம். அத்துடன் சித்தி வீதத்தை அன்மித்த

1. அருள் முருகன் பவித்திரா - 130
2. மோகநாதன் நிந்துசா - 124
3. முனியாண்டி யசிந்தன் - 119

ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலை 100 % சித்தியைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
கிளி/சோரன் பற்று சி.சி.த.க. பாடசாலை.

(24120)(6.8)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ் வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2013 ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன

கேள்வி இல: O&M/RM/JAF/VEHICLE SERVICE/ 2013

01. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ்வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2013 ஆம் ஆன்டு தூய்விப்புச் செய்வதற்காக தகுதியான சேவை வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
02. சேவை வழங்குனர்கள் கேள்வியுடன் தங்களது வியாபார பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதியினை (Business Registration Certificate) இணைத்து அனுப்புதல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரங்களை கீழ் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய சுயமாக தயாரித்து விண்ணப்பிக்கலாம்.
04. தங்களால் கோரப்படும் கேள்விகள் கேள்வி முடிவு தினத்திலிருந்து ஒரு(01) வருட காலத்திற்கு செல்லுபடியாகும்.
05. இக் கேள்வி அறிவித்தல், இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சகல சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாகும்.
06. தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வி இலக்கம் மற்றும் முடிவுத் திகதி குறிப்பிடப்பட்டு, கேள்வி கோரல் சபை, பிராந்திய காரியாலயம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிராந்திய முகாமையாளர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கேள்விகள் அனைத்தும் 05.12.2012, மு.ப 10.00 க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றையதினமே உடனடியாகத் திறக்கப்படும்.

பிராந்திய காரியாலயம்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பிராந்திய முகாமையாளர் (யா)
யாழ்ப்பாணம்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ் பிராந்திய காரியாலயத்தின் கீழ் வரும் அனைத்து வாகனங்களுக்கும் 2013ஆம் ஆண்டு தூய்விப்புச் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்

| | | |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் பெயர் | :............................................. |
| 2. | உரிமையாளர் பெயர் | :............................................. |
| 3. | வியாபார முகவரி | :............................................. |
| 4. | வியாபார பதிவுச் சான்றிதழ் இலக்கம் | :............................................. |
| 5. | வியாபாரத்தின் தன்மை | :............................................. |
| 6. | வியாபாரத்தில் எத்தனை வருட அனுபவம் | :............................................. |
| 7. | 2011/2012ம் ஆண்டுகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு தூய்விப்புச் செய்திருந்தால் அதுபற்றிய விவரங்கள் | :............................................. |
| 8. | நிறுவனத்தின் பாவனையாளர் விவரங்கள் | :............................................. |
| 9. | தூய்விப்புச் செய்யப்படும் வாகன வகைகள் மற்றும் தூய்விப்பிற்கான கூலி/செலவு | : பிக்கப் - ரூபா. லொறி - ரூபா.<br>: முச்சக்கர வண்டி - ரூபா.<br>: நீர்த்தாங்கி வாகனம் - ரூபா.<br>: உழவு இயந்திரம் - ரூபா. |
| 10. | கடன் அனுமதிக்கப்படும் காலம் | :............................................. |
| 11. | தொடர்புகொள்ள வேண்டிய நபர் | :............................................. |
| 12. | தொலைபேசி இல | :............................................. |
| 13. | தொலைநகல் இல | :............................................. |
| 14. | கையொப்பம் | :............................................. |

குறிப்பு: நிறுவனத்திற்குரிய உத்தியோகபூர்வ முத்திரை (சீல்) கையொப்பத்துடன் பதிக்கப்படல் வேண்டும்

(சி/4136)(3.6)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலய அதிபரும், பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளரும், இலங்கை சாரணர் தேசிய பயிற்சிக்குழு அங்கத்தவருமான

**மு. இரவீந்திரன்**

அவர்கள் இலங்கை அதிபர் சேவை II இற்கு பதவி உயர்வு பெற்று அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் நியமனக்கடிதத்தை பெற்றுள்ளார். இவரது சேவை சிறப்புற மனதார வாழ்த்துகின்றோம்

ஆசிரியர்கள். மாணவர்கள்.
யா/கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயம்.

(23649)(6.8.14)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மகேஸ்வரன்- குமுதினி தம்பதியரின்


**செல்வப் புதல்வன் சந்தோஷ்**

அவர்களை மனமார வாழ்த்துவதோடு அவரை வழிநடத்திய ஆசிரியர்களையும் மனதார நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி.

வாழ்த்துவோர்
அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், அண்ணன், தம்பிமார், தங்கைமார், மாச்சாள்மார்.

[24170][3.6]



# பாராட்டுவிழா கொண்டாடும் நன்னாளில் பேருவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தாளையம்பதி வீதி, கல்வயலைச்சேர்ந்த

**சுகந்தன் – வினோதினி**

தம்பதியரின் செல்வப்புதல்வனும், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவனுமாகிய

**சு. ஜெஷிபன்** (148 புள்ளிகள்)

தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வாழ்வில் மேன்மை பெற மருதடியானின் ஆசி வேண்டி இறைஞ்சுகின்றோம். பாராட்டுவிழா கொண்டாடும் இன்றைய நாளில் ஏனைய மாணவர்களையும் பாராட்டுவதோடு கற்பித்த ஆசிரியர் திருமதி ம. சிவநேசனுக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக.

வாழ்த்துவோர்:
பூட்டி – சின்னம்மா, தாத்தா – வேதநாயகம், அம்மம்மா – ரெங்கநாயகி, அப்பம்மா – செங்கா,
மாமாமார் – ஜங்கரன், அகிலன், வர்ணன்,
சித்தப்பாமார் – சங்கர், உதயன், தீபன், அஜந்தா,
அன்ரிமார் – பாமினி, யாழினி, நிசாந்தினி
தம்பி – அகரன், தங்கை – அஸ்வினி,
அண்ணா – ஜெலக்ஷன், அத்தை – சுபா, மச்சாள் – அபி

(சி/2801)(6.8)

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை கறுவல்தம்பி (செல்லையா)

*(பிரபல அண்ணாவியார்)*



ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை கறுவல்தம்பி 13.10.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வடிவேலு - இரத்தினம் தம்பதியரின் மருமகனும், தவமணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, மாரியம்மா மற்றும் கந்தையா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் தங்கம் (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் றோஸ்மலர் (ராணி), காலஞ்சென்ற ஜெயரஞ்சன் மற்றும் சந்திரமோகன் (மோகன்), இலட்சுமிகாந்தன் (செல்வம்), காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் வசந்தகுமார் (சுவிஸ்), அம்பிகைபாலன் (கண்ணன்-கனடா), காலஞ்சென்ற கமலதாஸ் மற்றும் மோகனாம்பிகை (லண்டன்), நளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமயில் (லண்டன்), பேரின்பநாயகி, ஜெயலதா (கனடா), செல்வமனோகரி (சுதா), சிவச்செல்வி (சுவிஸ்), சுகிர்தன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்), மயூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சுமன் மற்றும் புருஜோத்தமன் (இணைய ஊடகவியலாளர் - கொழும்பு), மதுசூதனன் (ஆசிரியர், யா/உடுத்துறை ம.வி), யாழினி (விஞ்ஞானபீட மாணவி, கிழக்கு பல்கலைக் கழகம்), மினுசா (கனடா), மதுசன் (கனடா), விந்துஷா (யா/மருதங்கேணி இதகவி), டினோஜன் (யா/மருதங்கேணி இதகவி), சந்தியா (சுவிஸ்), அனுஷ்கா (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மருதங்கேணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதங்கேணி வடக்கு,
தாளையடி.

(21562)(3.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**கந்தையா மனோகரன்**

எமது வித்தியாலய ஆசிரியர்
திருமதி யோ. மனோவிஜயா
அவர்களின் தந்தை

**கந்தையா மனோகரன்**

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாருக்கு
எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யா/தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை
மகா விதத்தியாலயம். (சி/4153)(3.14) ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்

**சுவாமிநாதன் மயில்வாகனம்**



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன்- வள்ளியம்மை தம்பதியரின் மகனுமான மயில்வாகனம் 13.10.2012 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரி யின் அன்புக் கணவரும், பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - மூத்ததங்கம் தம்பதி யரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பதிவாளர்), நகுலேஸ்வரன் மற்றும் கனகசபை (கனடா), காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை மற்றும் ஞானசௌந்தரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஸ்ரீகுமாரின் பாசமிகு தந்தையும், உமாவின் அன்பு மாமனாரும், கயூரி, கவிலயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.10.2012) செவ்வாய்க் கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் வளவு,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (3536)(3.14.6)

தகவல்:
ஸ்ரீகுமார் (மகன்)

## இலங்கையிலும் செயற்கை மழை

இலங்கையில்செயற்கை மழையினை உருவாக்க சீனாவின் உதவியை இலங்கை அரசாங்கம் கோருகின்றது என அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பலாங்கொட, கொகல்ல கிராமிய சுகாதார நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். எந்த விதமான சவால்களையும் முறியடிப்பதற்கான தைரியம் அரசாங்கத்திடம் உள்ளது என அவர் தெரிவித்தார்.

வறட்சி என்பது எமது நாட்டு புதிய கலாசார மல்ல. இந்த வறட்சியை கட்டுப்படுத்துவதற்கு பல தற்காலி நடவடிக்கைளை முன்னர் மேற்கொண்டிருந்தோம். எனினும் தற்போது வறட்சிக்கு முகங்கொடுக்க தயாராகுதல் மாத்திரமின்றி இதன் மூலம் நன்மையடையவும் உள்ளோம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

செயற்கை மழையினை இலங்கையில் எவ்வாறு ஏற்படுத்தல் என்பது தொடர்பிலான தொழிநுட்பத்தை பெறுவது தொடர்பில் சீனாவுடன் பேச்சு நடத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (16)

## வீடு விற்பனைக்கு

இல.15,கலைப்புலவர் வீதி,பெருமாள்
கோயிலடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த
வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 7111 212 (24172)(3.14)

## வீடு தேவை

யாழ்ப்பாணம், பிறவுண்
வீதிக்கு அருகில் தம்பதியருக்கு
அனெக்ஸ் வீடு தேவை.
தொடர்புகளுக்கு:
0778475990 (24176)(3.14)

## தேவை

ஹோட்டல் வேலையில் அனுபவம்
உள்ள
01. பிரதான சமையலாளர் (கோக்கி)
02. றைஸ்/ரொட்டி வேலையாள்
03. உணவு பரிமாறுபவர்
ஆண்/ பெண் இருபாலாரும்
தொடர்பு: 0779691178 (24173)(3.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2012 ற்கான
தரம் - 05
புலமைப்பரிசில்
பரீட்சையில்
யா/மானிப்பாய்
மகளிர் கல்லூரி
மாணவி ஆகிய

**செல்வி காந்தராசா நந்தாயினி**

அவர்கள் 154 புள்ளிகளைப் பெற்ற எமது
மண்ணிற்கும் பாடசாலைக்கும்
சமூகத்திற்கும் பெருமை தேடித் தருவதற்கு
வித்திட்டு துளிர்விடச்செய்த பாடசாலை
அதிபர், ஆசிரியர் அனைவரையும்
மனமுவந்து பல நன்றிகளையும்
பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு அவர்
மேலும் பல சித்திகள் எல்லாம் பெற்று பல
உயர்ச்சிகளைப் பெற வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
அம்மப்பா, அம்மம்மா,
மாமாமார்கள், அத்தைமார்கள்,
சித்தப்பாமார்கள், சித்திமார்கள்.
(24174)(6.14)
உடுவில் கிழக்கு, அண்ணா சனசமூக நிலையத்தடி

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திகை நன்றி நவிலல்



தோற்றம்
26 * 08 * 1924

மறைவு
16 * 09 * 2012


அமரர்

**சுப்பிரமணியம் தங்கராசா**

கடந்த 16.09.2012 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சுப்பிரமணியம் தங்கராசா அவர்களின் மரணச்செய்தி கேட்டு பல வகையிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியை தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.10.2012) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்தி சபிண்டீகரண நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் தாங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி மேற்கு,
சொக்கன கலட்டி, தம்பசிட்டி. (சி/23652)(3.14) குடும்பத்தினர்.

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



யோகபவனம், இணுவில் தெற்கு,சுன்னாகம்

தோற்றம்
02.01.1931

மறைவு
16.09.2012

அமரர் **மகேஸ்வரி குருசாமி**

( ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்)

கடந்த 16.09.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்த் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (15.10.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். மேலும் எமது குடும்பத்தலைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், சகல உதவிகளையும் முன் வந்து உதவிய உள்ளங்களுக்கும் எம் நெஞ்சு நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
திரு. க. யோகராசா ( நிர்வாக உத்தியோகத்தர், இ.போ. ச. வடக்கு),
திருமதி. யோ. சுலோசனா ( ஆசிரியர் / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்),
திரு திருமதி .சுசீலா செல்வநாயகம் (ஜேர்மனி),
யோ. கிருத்திகன், யோ . பிரியதர்ஷன்
(24175)(.8.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## முருகேசு முரளிதரன்

அவர்கள் சைவசித்தாந்த பண்டிதர்
BA, Dip - in Ed, M.Ed SLPS 2 - II

நல்லாசிரியராய் பகுதித்தலைவராய் மிளிர்ந்து ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயத்தில் முத்தான ஆளுமை மிக்க நல்லதிபராய் மகத்தான சேவை தந்து சன்மார்க்க அதிபராய் இடமாற்றம் பெற்றுச்சென்ற உங்கள் நற்பணி என்றும் தொடரட்டும் உயர்வுகள் பல பெற்று உன்னதமாய் வாழ வாழ்த்தும்

பாடசாலைச் சமூகம்.
யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்.

## இளைஞன் நீரில்மூழ்கிச் சாவு

கொழும்பில் இடம்பெற்ற கொரிய மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய கடுகஸ்தோட்டையைச் சேர்ந்த 21 வயதான இளைஞன் ஒருவர், பம்பலப்பிட்டி கடலில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சரத் உதயந்த சந்திரரத்ன என்ற இளைஞனே இவ்வாறு கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

நேற்றுமுன் தினம் கொரிய மொழிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மேற்படி இளைஞன், பரீட்சை நிலையத்தில் அறிமுகமான மேலும் சில பரீட்சார்த்திகளுடன் குளிப்பதற்காக பம்பலப்பிட்டி கடலுக்கு சென்றிருந்த நிலையிலேயே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பம்பலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (16)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும்

செல்வி **திருச்செல்வம் திவ்வியா**

அவர்கள் 2012 ஆம் ஆண்டிற்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் எமது சமூகத்துக்கும் பெருமை தேடித்தந்த செல்வியை பாராட்டுவதோடு அவரது உயர்ச்சிக்கும் அரும்பாடு பட்டு உழைத்த பாடசாலை அதிபர், ஆசிரியர் அனைவருக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர் மேலும் பல உயர் சித்திகள் பெற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி முருகையா - ஜீவராணி குடும்பத்தினர்.
பெரியப்பா, பெரியம்மா அண்ணன்மார், அக்காமார்.
ஞானவைரவர் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

(சீ84157)(9.14)

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகத்தில்
25 ★ 09 ★ 1963

விண்ணகத்தில்
03 ★ 10 ★ 2005

## அமரர் கிட்டினர் பரமேஸ்வரன்

(சங்கீத ஆசிரியர், O.L.R)


அன்பான உறவொன்று ஆண்டவனடி சென்றதோ
பண்பான உயிரொன்று பரமனடி சென்றதோ
எங்குதான் சென்றீர்கள் எம் உறவுகளைத் தவிக்கவிட்டு
ஓடி வந்திடுங்கள் உங்கள் உறவுகளை அரவணைக்க

விளையாட்டு அரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய்.

ப. சாந்தினி
(மனைவி)

(24186)(8.14)

# 45 ஆம் நாள் நினைவில்



மலர்வு
2010 ★ 08 ★ 19

உதிர்வு
2012 ★ 09 ★ 01

## செல்வன் தவேஸ்வரன் அஹிம்சஜன்

(ஹரிஸ்)

கண்ணின் மணியாய் உனைக் காத்து
கண்ணில் ஒரு துளி நீர் வடித்தாலே
கலங்கித் துடித்த உன்பெற்றோர்
கதறியே அழதிடே தம்பி தம்பி என்று ஆசைய
உனை அழைத்தவர்கள் அநாதரவாய் நிற்க
கூடித்திரிந்த நண்பர்கூட்டம்
குழந்தைத் தனத்துடன் விம்மியே புலம்பிட
பாசம் வைத்துப் பழகிய உன்
உறவினர் நாம் இன்று
வாய் பேச முடியாது மௌனித்து நிற்க
விண்ணுலகம் சென்றதுதான் குறையே...?

01.09.2012 அன்று எங்களை விட்டுப்பிரிந்த அன்புச்செல்வன் ஹரிஸ் குட்டியின் 45 ஆம் நாள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்


பள்ளம் தோட்டம்,
கொற்றாவத்தை.

தவேஸ்வரன் குடும்பத்தினர்.

(24179)(8.14)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் அன்னலக்சுமி



கந்தர்மடம் மணல்தறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி நாகலிங்கம் அன்னலக்சுமி அவர்கள் 13.10.2012 அன்று தனது 100 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அருளானந்தம் (ஓய்வு பெற்று விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி), சண்முகநாதன் (முன்னாள் சாமுவேல் அன் சன்ஸ் களஞ்சியப் பொறுப்பாளர்), இந்திராதேவி, கருணாநிதி, குகதாசன் (பாலா) ஆகியோரின் பாசமிகு தாயும், அன்னலக்சுமி, சோதிமலர் (ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்), செல்வராசா (ஓய்வுபெற்ற பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்), சைலாகுமாரி (யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியும், பராசக்தி (கிளி), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சுந்தரம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்ச்செல்வி (ஆசிரியை, யா/மல்லாகம் மகாவித்தியாலயம்), அருளாசி (விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), அருள்கரன் (பொறியியலாளர்), நிஷாந் (ஆஸ்திரேலியா), உஷாந் (ஆஸ்திரேலியா), வைஷ்ணவி (சட்டத்துறை மாணவி, யாழ்.பல்கலைக் கழகம்), தர்மிகா (ஜேர்மனி), தர்சிகா (லண்டன்), பிரியங்கா (வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), அருட்குகன் (லண்டன்), விஜிதா (உதவிப் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்), கஜானன், ராஜீ ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தனுப்பிரியா (ஜேர்மனி), சேந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


35/2, மணல்தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
நா.அருளானந்தம் (மகன்)

(24182)(3.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதுவந்தபோதும்....



சு.பூவரசி

இன்றைய காலத்து வாழ்க்கையெனும் வண்டியை ஓட்டுவதற்கு மனிதர்களாகிய நாம் பெரும் சிரமப் படுகின்றோம். அதிலும் இன்றைய காலத்தில் வாழ்க்கையின் தேவைகள் நாளுக்கு நாள் அசுர வேகத்தில் கூடிக் கொண்டு செல்கின்றன. அந்த வேகத்தோடு ஒத்து, நாமும் உழைக்க வேண்டிய கட்டாயம் அனைவருக்கும் இருக்கின்றது. இந்த இடத்தில் தான் நாம் அனைவரும் எம்மை நோக்கி கேள்விகளை கேட்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நிலை தவறும் பட்சத்தில், குடும்பத்திலுள்ள அனைத்து சுமைகளும் அந்த இல்லத்தை நிர்வாகம் செய்யும் இல்லாளுக்கே சொந்தமாகி விடுகின்றன.

உண்மையில் இந்த விடயம் தொடர்பில் குடும்ப உறுப்பினர்களான கணவன், பிள்ளைகள் [வயது வந்த] அனைவரும் சிந்திக்க வேண்டும். அனைவரும் கண் மூடிக்கொண்டு குடும்பத்தில் வரவு– செலவு எவ்வாறு நடைபெறுகின்றது என்ற வரையறை தெரியாமல் பொறுப்பற்றவர்களாக இருப்பதால், அங்கே சுமை தாங்கியாக இருந்து தவிப்பவள் இல்லாளே. குறிப்பாக இன்றைய காலத்துப் பிள்ளைகள் கொஞ்சம் கூட பொறுப்பற்றவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்கள் தமது தேவைகள் என்று சொல்லி நாகரிக மோகத்துள் மூழ்கி அவற்றை நிறைவேற்றுவதையிட்டு கண் முன் தெரியாமல் தமது பெற்றோரை கஷ்டப்படுத்துவதால் அவர்களின் குடும்பநிலை கடன் எனும் அரக்கனை வலிந்து வரவழைத்துச் சிரமப்படுத்துவதை நாம் அனைவரும் கண்கூடாகவே காண்கின்றோம்.

இதனால் வீட்டில் தமது பெற்றோர் எத்தனை சிரமங்களுக்கு ஆளாகின்றனர் என்பதனைப் பிள்ளைகள் புரிந்துகொள்ள முற்படுவது இல்லை. இன்று எமது கட்டாயமான அன்றாட தேவைகளுக்கே திண்டாட்டமாக இருக்கையில் தேவையற்ற தேவைகளுக்கு எங்கே போவது. கொஞ்சமும் பொறுப்பின்றி தமது இஷ்டம் போல் செயற்படும் பிள்ளைகளால் இன்று பெரும் சுமைதாங்கியாக இருந்து தவிப்பது தாய் தான். குடும்பத்தின் பொருளாதார சுமைகள் பிள்ளைகளின் கண்மூடித்தனமான செயற்பாட்டால் ஏற்படும் உளத்தாக்கம் அனைத்தும் சேர்ந்து, அவளை உருக் குலைத்து விடுகின்றது. இப்படியிருக்கையில் அனைத்தையும்தன்னால் முடியுமென்று சுமைதாங்கியாக இருந்த சுமைகளை சுகமெனத் தாங்கும் சுமைதாங்கி சாய்ந்தால் இந்த குடும்பத்தின் சுமைகளை நாளை யார் சுமப்பது. இது தொடர்பாக யாருமே சிந்திப்பதாக இல்லை. ஏனெனில் அந்தளவு தூரம் இன்றைய இளம் சந்ததிக்கு சிந்திக்க நேரம் கிடைப்பதில்லை. எதிலுமே பொறுப்பற்ற தன்மை யாருக்குமே கீழ்படிந்து நடக்காத ஆணவக் குணம். அனைத்தும் சேர்ந்து இன்றைய இளம் பிள்ளைகளை சீர்கெட வைத்துள்ளது.

இன்று குடும்பத் தலைவியாக இருக்கும் எமது சகோதரிகள் படும் அவஸ்தை சில குடும்பங்களில் சொல்லிமாளாது. மது போதையோடு வரும் கணவரின் கொடுமைகள் ஒரு புறம், அதைவிட சீர் கெட்ட பிள்ளைகளின் கேவலமான செயற்பாடுகளால் ஏற்படும் அவமானம் இன்னொரு புறமாக மிகவும் சொல்லமுடியாத நரக வேதனைகளை அனுபவித்து வருகின்றனர்.

உண்மையில் அனைத்தும் சீராக இருந்தும், ஏதோ ஒன்றை எண்ணி ஏங்கித் தவிக்கும் குடும்பப் பெண்கள் வாழும் வீடுகளில் இப்படியான யாவும் துன்பமான நிலையாக இருந்தும், அவற்றை சுகமென எண்ணி சுமக்கின்ற சுமை தாங்கிகளான எம் சகோதரிகளை யாருமே மதிப்பதாக இல்லை. குடும்பத்தில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினை, அத்தோடு அனைத்து நிலைகளுக்கும் தலைவியாக நின்று தன் நலம் துறந்து தன் குடும்பம் தழைக்க தன்னைக் கருக்கும் எமது மாசற்ற, மங்கையருக்கு கிடைக்கின்ற பட்டங்கள் தான் எத்தனை. அதிலும் குடிகாரனான கணவனால் கிடைக்கின்ற பட்டமளிப்புகள் அதைவைத்து அந்தப் பெண்ணை சமூகம் பார்க்கின்ற கண்ணோட்டம், இத்தனையும் தாங்கி, தாண்டி எதையுமே கணக்கிலெடாமல் தான் கொண்ட கொள்கையில் தளர்வின்றி உழைக்கும் எமது சகோதரிகள் என்றும் பூசிக்கப்பட வேண்டிய புதுமைப் பெண்களே! அவர்கள் தூற்றப்படும் சாக்கடை நீரல்ல. புனித கங்கை ஆறு போன்றவர்கள் தன் குடும்பம் வாழ வேண்டும் என்பதற்காய் விழியில் நெய் ஊற்றியல்ல, உதிரம் ஊற்றி விளக்கேற்றுபவர்கள்.

பெண்ணை மதித்து, அவருக்கென்று தனி கௌரவம் கொடுத்து சுதந்திரமாய் வாழ சிறகு கொடுத்த பெற்றோரான தெய்வங்கள் இன்று இல்லை.

இருப்பினும் அனைத்திலும் சம உரிமை கொடுத்து வளர்த்த தெய்வங்களின் வழிமுறையில் வாழ்ந்து அவர் அடியொற்றி நடைபயின்ற அக்கினிக் குஞ்சுகள் இன்று அனைத்தும் இழந்து கேப்பார் இன்றி இரத்தக் கண்ணீர் வடிக்கும் நிலை.


இது நிரந்தரமல்ல நாமாக மாற்றுவோம். அதுவரை அனைத்தையும் தாங்கிட மனத்திடம் கொள்வோம்.

## அன்னைக்கு நிகர் ஏதுண்டு?

சொர்க்க வாசலம்மா உங்கள்
கருவறை-நரக வாசலம்மா வெளி உலக
வாழ்வு-உங்கள் கருவறையில்
இருந்த போது கண்மூடியே
வெளிச்சமான வாழ்வைக் கண்டு மகிழ்ந்தேன்
கருவறையில் கண்கள் மூடிய படியே
வெளி உலகை நேசித்தேன்
அன்று-ஆனால் கண்கள்
திறந்த போது வெளி உலகு
இருட்டாய் இன்று தெரிகிறது அம்மா
அம்மா-உங்கள் சக்தியை எனக்காய்
செலவழித்து-உங்கள் இரத்தத்தை
எனக்கு பாலாக்க எதற்கு பாழான இந்த
உலகில் என்னைக் கடினமாய் பெற்றெடுத்தீர்கள்
உங்கள் சுவாச உணர்வுகளோடு - அன்று
கருவறையில் பல உறவுகளுடன் வாழ்ந்தேன்-
இன்று பல உறவுகள் இருந்தும் பொய்யான
பல உணர்வுகளோடு வாழ்கிறேனம்மா-வேஷமான
பூமியில் பறவையைப் பார்த்து விமானத்தை
உருவாக்கினான்-கடலில் ஓடும் மீனைப் பார்த்து
படகையும் செய்தான்-ஆனால்
ஏனம்மா உங்கள் உண்மையான பாச
உணர்வுகளைப் பார்த்து பண்பான
பாரை மனிதன் உருவாக்கவில்லை?
காரணம் தேடுகின்றேன்!...

திருநாவுக்கரசு-சுதர்சினி
வேலணை





திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

## வலிமை மிகு தோளினாய் வா.. வா...!



ம.அ.ஜெனிற்றா
சாவகச்சேரி

''மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்றான் ஒரு கவிஞன் 'தாயும் பெண்ணே தாரமும் பெண்ணே' என்பது முதுமாழி.

அந்த வகையில் நாம் அனைவரும் தெய்வமாகப் போற்றப்படத்தக்க பெருமையுடையவளாக பெண் விளங்குகின்றாள்.

பெண்ணின் பெருமைகள் பற்றி புராணங்கள் பல கதைகள் சொல்கின்றன. சூரியனை உதிக்காது நிறுத்திய நளாயினி. பாண்டிய மன்னனைப் பழிவாங்க மதுரை நகரத்தைச் சுட்டெரித்த கண்ணகி, இயமன் கைப்பட்ட கணவனின் உயிரை மீட்டெடுத்த சாவித்திரி. கம்பன் காட்டும் சீதை என பலரை எடுத்துக்காட்டப்படுகின்றது.

ஆடவன் ஒருவனின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் பின்னணியில் ஒரு பெண்ணே நிற்பாள்! என்பது வரலாறு கண்ட உண்மையாகும். அதனால் தான் ஆவதும் பெண்ணாலே மனிதன் அழிவதும் பெண்ணாலே. வாழ்வதும் பெண்ணாலே அவனே தாழ்வதும் பெண்ணாலே என கவிஞர் ஒருவர் பாடினார்.

மகாகவி பாரதியார், பாரதிதாசன் என பெண்ணடிமைத் தனத்துக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள் பலர். ''வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் - எட்டும் அறிவினில் ஆணுக்கும் இங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி'' ''காதலன் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து, மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி'' என பாரதியார் பெண்கள் விடுதலைக் கும்மி என்ற கவிதையில் பெண் விடுதலை பற்றி பேசினார் ஆனால் எத்தனை நூற்றாண்டுகள் கழிந்தாலும் ஆணாதிக்கச் சிந்தனை வாதிகள் இருக்கும் வரை பெண் விடுதலை என்பது முயற் கொம்பே..

இன்று பெண்கள் எத்தனை தான் பட்டம் பதவிகள் பெற்று உயர்நிலை அடைந்தாலும் அடக்கு முறைக்குள்ளிருந்தும், துஷ்பிரயோகங்களுக்குள் இருந்தும் விடுபடுவதற்கு, துணிந்து நின்று நிமிர்ந்து போராடினால் மட்டும் தான் வெற்றியைப் பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசோலை மோசடிகளால் குவியும் முறைப்பாடுகள்

வலி. வடக்கு. ஒக்.15
யாழ். மாவட்டத்தில் தொடரும் காசோலை மோசடிகளால் நாளாந்தம் யாழ். பொலிஸ் நிலையம் உட்பட ஏனைய பொலிஸ் நிலையங்களிலும் வர்த்தகர்களும் பொதுமக்களும் முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த வாரமும் பல லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடிகள் இடம் பெற்றமை சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு சிறப்புப் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ். ஆரியகுளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனக்குத் தரவேண்டிய பணத்துக்குப் பதிலாக மூன்று லட்சம் ரூபா காசோலையை வழங்கியதாகவும் அந்தக் காசோலைக்கான பணத்தைத் தர பல மாதங்களாகியும் வங்கியில் வைப்பிலிடாது தன்னை ஏமாற்றி வருவதாகவும் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மற்றுமொரு சம்பவத்தில் நீர்வேலி சிறுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவர் தனக்கு 3 லட்சத்து எண்பதாயிரம் ரூபாவுக்குப் பதிலாக காசோலையை வழங்கிவிட்டு வங்கியில் பணம் இல்லாமையால் தான் ஏமாற்றப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இயங்கும் விசேட குற்றப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விரைவில் சந்தேக நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ம-86)



வட மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச உளநல நாள் நிகழ்வில் புத்தகக் கண்காட்சியும் இடம் பெற்றது. இந்தக் கண்காட்சியில் வட மாகாண கல்வி வலயத்துக்கு உட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் உள நலம் சார்ந்த ஆக்கங்களைத் தாங்கிய கையெழுத்துச் சஞ்சிகைகள் பலவும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. உள நலம் சம்பந்தமான பல்வேறு நூல்களின் மத்தியில் மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகைகளும் கூட கணினியில் பொறிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த புத்தகக் கண்காட்சியை வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். (ம-86)

## வாய்த்தர்க்கம் முடிந்தது போத்தல் தாக்குதலில்

வலி. வடக்கு, ஒக். 15
சகோதரர்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தைத் தொடர்ந்து ஒருவர் மற்றவரால் போத்தலால் தாக்கப்பட்டு படுகாயத்துக்கு ஆளாகிய நிலையில் யாழ். பேதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அச்சுவேலிப் பொலிஸ் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

புத்தூர் பகுதியில் உள்ள இரு சகோதரர்களுக்கு இடையே கடந்த சில நாள்களாக குரோதம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறிப்பிட்ட தினத்தில் இருவருக்கும் இடையே வாய்த் தார்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து போத்தலால் தாக்கப்பட்டுப் படுகாயத்துக்கு ஆளாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்கிய நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் அச்சுவேலிப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(ம-86)

## வேலணையில் பயணிகள் தங்குமிடம் அமைக்கக் காணி

### விரைவில் பெற்றுத்தர உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15
வேலணையில் பயணிகள் தங்குமிடம் அமைப்பதற்கான காணி கொள்வனவுக்கு விரைவில் ஆளுநரின் அனுமதி பெற்றுத்தரப்படும்.

வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வேலணைப் பிரதேச சபைத் தலைவருக்கு இதனை அறிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களிலிருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் தீவகத்துக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இந்தப் பயணிகள் இளைப்பாறிச் செல்வதற்கும் நீராடுவதற்கும் உணவு பரிமாறுவதற்குமாக வேலணையில் ஒரு தங்குமிடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கு 9 பரப்புக் காணி கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான அனுமதி விரைவாகப் பெற்றுத்தரப்படும் என ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மேலும் தெரிவித்தார். (ம-41)

## நீர்வேலியில் வாழைத் தோட்டத்தில் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம்

### இனங்கண்டனர் சுகாதாரப் பிரிவினர்

யாழ்ப்பாணம், ஒக்.15
நீர்வேலி மேற்கில் உள்ள வாழைத் தோட்டத்தில் நுளம்புக் குடம்பிகள் பெருகி இருந்ததை சுகாதாரப் பகுதியினர் இனங்கண்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வாழைத் தோட்டங்களை சோதனை செய்த சுகாதாரப் பகுதியினர் வெட்டிய வாழைத் தண்டில் பெருமளவு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதை அவதானித்தனர்.

இவ்வாறு இந்தப் பகுதியில் உள்ள இரண்டு வாழைத் தோட்டங்களில் வாழைத் தண்டுகளில் சுரக்கும் நீரில் இருந்து குடம்பிகள் பெருகி இருந்ததாக சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு நுளம்புப் பெருக்கத்தை அவதானிக்காது இருந்த இந்த வாழைத் தோட்ட விவசாயிகள் இருவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் சுகாதாரப் பகுதியினர் வலி.கிழக்கு பிரதேசத்தின் வாழைத் தோட்டங்களிலும் தமது டெங்கு செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

வாழைத் தோட்டங்களில் வாழைக்குலைகள் வெட்டப்பட்டதும் வாழை மரத்தின் தண்டு குற்றியை அடியோடு வெட்டி அதை நிலத்தில் புதைக்க வேண்டும்.

இவ்வாறு வாழைக் குற்றிகளை வெட்டிப் புதைக்காத விவசாயிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## தென்மராட்சி பிரதேசத்தில் இருவருக்கு டெங்குத்தாக்கம்

தென்மராட்சி பிரதேசத்திலும் இருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த ஒருவரும் சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த ஒருவருமே டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் இந்தியாவுக்குச் சென்றுவிட்டு அண்மையில் திரும்பியவர்கள் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தியா செல்வதற்கு முன்பும் அங்கிருந்து சொந்த இடங்களுக்குத் திரும்பிய பின்பும் நோய்த்தடுப்பு இடங்களுக்குத் திரும்பிய பின்பும் நோய்த்தடுப்பு பரிசோதனைகள் அந்தந்த சுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அசண்டையீனமாக இருந்ததால் முழுமையான டெங்குத் தாக்கத்துக்கு ஆளாகிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் மழை காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. காய்ச்சல் அறிகுறி காணப்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று பரிசோதனைகள் மேற்கொண்டு சிகிச்சை பெறுமாறு சுகாதாரப் பிரிவால் அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-9)

## 83 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி அபகரிப்பு

கீரிமலை சித்தன்கேணி வீதியில் தனிமையில் நடந்து சென்ற பெண்ணிடம் இருந்து சுமார் 83 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களால் அபகரித்துச் சென்ற சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவரால் முறையிடப்பட்டுள்ளது. குறித்த பெண் நண்பகல் வேளையில் தனித்து தனது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இந்தவேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணை பின் தொடர்ந்து சென்று ஆள்கள் நடமாட்டம் குறைந்த இடத்தில் வைத்து சங்கிலியை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

குறிப்பிட்ட பெண் சத்தமிட்டதைத் தொடர்ந்து அயலவர்கள் வந்த போதிலும் திருடர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## வாய்க்கால்கள் அமைக்கப்படவில்லை வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஒக்.15
இருபாலை, கோப்பாய் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் மழை வெள்ளம் பாய்ந்ததால் அங்கே இருந்த பொருள்கள் வெள்ளத்தில் நனைந்து நாசமாகின.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் பகுதியில் திடீரென கடும் மழை பெய்தது.

இந்தப் பிரதேசத்தின் பிரதான வீதியான பருத்தித்துறை வீதி அகலிப்பு செய்யப்பட்டு 'காப்பெற்' போடப்பட்டு வரும் நிலையில் இருபாலை, கோப்பாய் பகுதியிலும் 'காப்பெற்' போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் வீதியில் இரு பக்கங்களிலும் உரிய வடிகால்கள் சீர்செய்யப்படவில்லை.

**இந்தப் பிரதான வீதியோரம் உள்ள மக்களின் குடி மனைகளுக் குள்ளும் வெள்ளம் தேங்கிக் காணப்படுகிறது**

இந்த நிலையில் மழை வெள்ளம் பிரதான வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்குள் பாய்ந்து செல்கின்றது.

அதனைவிட இந்தப் பிரதான வீதியோரம் உள்ள மக்களின் குடிமனைகளுக்குள்ளும் வெள்ளம் தேங்கிக் காணப்படுகிறது.

வடிகால்கள் உரிய முறையில் அமைக்கப்பட்டு சீர் செய்யப்படாமையால் வெள்ளம் வழிந்தோட இடமின்றி மக்களின் குடிமனைகளுக்குள் உட்செல்வதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இவ்வாறு குடிமனைகளுக்குள் வெள்ளம் தேங்குவதால் நுளம்புகளின் பெருக்கம் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

### உளநல நிகழ்வு

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் உலக உளநல நாள் நிகழ்வு பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்ட மாணவர்களின் கலை ஆக்கக் கூடத்தைத் திறந்து வைத்தல், ''இன்றைய இளம் பிள்ளைகளிடையே விழுமியப் பண்புகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றனவா' எனும் தலைப்பிலான கருத்தாடற்களம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-17-14)

* * *

சாவக்சசேரி மகளிர் கல்லூரியில் பிற்பகல் ஒரு மணிக்கு கலை உளநல நிகழ்வுகள் இடம்பெறும். வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகள் மற்றும் சிறப்புப் பட்டிமன்றம் என்பன நடைபெறும்.

### நூல் வெளியீடு

ஆசிரிய ஆலோசகர் து.துஷியந்தனின் கண்டிக் கால ஓவியங்கள் நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.இராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்வார். (ம-14)

### பரிசளிப்பு விழா

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நண்பகல் 12 மணிக்கு வித்தியாலய திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சு.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.யோர்குயின்ரஸ் கலந்துகொள்வர். (ம-250)

* * *

### பரிசளிப்பு விழா

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை பரிசளிப்பு விழா பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டத்தில் பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் வ.பிரதீபன் கலந்துகொள்வார். (ம-11)

### செயலமர்வு

இந்தமுறை ஜீ.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத்தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித விஞ்ஞான பாட வழிகாட்டல் செயலமர்வு கோண்டாவில் இந்து மகளிர் வித்தியாலயத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.ஊவா வெல்லச பல்கலைக்கழக தமிழ் மாணவர் சமூகத்தினரால் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது. (ம-11)

### கிளை திறப்பு

அமனா ரகாபுல் இன்சுரன்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளை திறப்பு விழா முற்பகல் 10.30 மணிக்கு இல.240 முதலாம் மாடி மணிக்கூட்டுக் கோபுர வீதியில் இடம்பெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயதீபன் துடுப்பில் அதிரடி மானிப்பாய் பரிஷ் இறுதிக்கு

**ஆரம்பத்திலிருந்தே அதிரடியில் இறங்கிய ஜெயதீபன் ஆட்டம் இழக்காமல் 6 சிக்ஸர், 10 பவுண்டரிகள் அடங்கலாக 97 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.**

யாழ்ப்பாணம், ஒக்.15

ஜெயதீபனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம்.

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்துக்கான '20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.

மதுஷன் 39 ஓட்டங்களையும், ஜேம்ஸ்யண்சன் 35 ஓட்டங்களையும், வதுஷனன் 27 ஓட்டங்களையும், ஜெனேஷன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், மயூரன், செல்ரன் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி சார்பில் யாழினியன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், வினோத் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், நிதர்சன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி 19.3 பந்துப் பரிமாற்றங்களில், 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெயதீபன் ஆட்டம் இழக்காமல் 6 சிக்ஸர், 10 பவுண்டரிகள் அடங்கலாக 97 ஓட்டங்களையும், நிதர்சன் 23 ஓட்டங்களையும், துவாரகன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் வதுஷனன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் சாள்ஸ், 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கினையும், பிரசாந் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், மயூரன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும், கோகுலன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் இறுதியாட்டத்துக்கு மானிப்பாய் பரிஷ் அணி முன்னேறியது.

ஆட்டநாயகனாக மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி வீரன் ஜெயதீபன் தெரிவு செய்யப்பட்டார். (ங-23)

## தேசிய சேமிப்பு வங்கியின் பெரு விளையாட்டு முழவு

வவுனியா, ஒக்.15

தேசிய சேமிப்பு வங்கியின் 12 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாணத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றன.

தேசிய சேமிப்பு வங்கியின் வவுனியாக் கிளை முகாமையாளர் எஸ்.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண வங்கிகளின் பொதுமுகாமையாளர் எஸ்.அருந்தவநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார்.

இந்தப் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு,

**கிரிக்கெட்**
முதலாமிடம்-அநுராதபுரம் தேசிய சேமிப்பு வங்கி
இரண்டாமிடம்-பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி

**உதைபந்தாட்டம்**
முதலாமிடம்-மன்னார் தேசிய சேமிப்பு வங்கி
இரண்டாமிடம்-ஹெக்கிராவ தேசிய சேமிப்பு வங்கி

**கரப்பந்தாட்டம்**
முதலாமிடம்-ஹெக்கிராவ தேசிய சேமிப்பு வங்கி
இரண்டாமிடம்-மன்னார் தேசிய சேமிப்பு வங்கி

**வலைப்பந்தாட்டம்**
முதலாமிடம்-யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி
இரண்டாமிடம்-அநுராதபுரம் தேசிய சேமிப்பு வங்கி

(ங-4[illegible])

## யங்ஹென்றிஸிடம் கவிழ்ந்தது கலைமதி

யாழ்ப்பாணம், ஒக்.15

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது.

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், கலைமதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் இறுதி வரை சமபலத்தோடு மோதிக்கொண்டன. இரண்டு அணி வீரர்களும் ஏட்டிக்குப் போட்டியாக கோல்களை அடித்தனர். இதனால் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்தன.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதன் போதும் இரு அணியினரும் தலா 4 கோல்களை அடிக்க மீண்டும் சமநிலை ஏற்பட்டது.

எனவே மேலதிகமாக ஒரு மேலதிக சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆயினும் அதன்போதும் இரு அணிகளும் சமநிலையைத் தக்க வைத்தன.

எனவே ஆட்டத்தில் எப்படியேனும் முடிவைப் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் மேலும் ஒருசமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. இந்த வாய்ப்பினை சரியாக பயன்படுத்திக்கொண்ட யங்ஹென்றிஸ் அணி அதனைக் கோலாக்கியது.

ஆயினும் கலைமதி விளையாட்டுக் கழக அணி தனக்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தினைத் தவறவிட்டது. சமநிலை தவிர்ப்பு வாய்ப்பில் முன்னிலை பெற்ற யங்ஹென்றிஸ் அணி வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)

## தீவக வலய உதைபந்தாட்டத்தில் சென். அன்ரனிஸ் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.15

தீவக வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் வேலணைத்துறை ஐயனார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியும், புங்குடுதீவு மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் முதல் பாதி ஆட்டம் வரையும் பார்ப்போரை பரவசத்தில் ஆழ்த்தும் வகையில் பரபரப்பாக அமைந்தது. இரு அணிகளும் பரஸ்பரம் கோல் போடும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டன.

ஆயினும் அந்த முயற்சிகளை இறுதிக்கட்டத்தில் எதிர் அணி வீரர்கள் தடுத்து நிறுத்தினர். இவ்வாறு மிகவும் விறுவிறுப்பாக போட்டி அமைந்ததா? ரசிகர்களின் கரகோஷங்களும் குதூகலிப்பும் உச்சக் கட்டத்தை எட்டின. இந்த நிலையில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களாலும் கோல் எதனையும் அடிக்க முடியவில்லை. இதனால் முதற் பாதி ஆட்டம் சம நிலையில் முடிந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் ஆதிக்கம் அதிகரிக்க ஆரம்பித்தது. ஆயினும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் முன்னேற்ற வியூகங்களைத் தடுத்து நிறுத்த வீறுகொண்டு எழுந்தன ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் சிங்கங்கள்.

புங்குடுதீவு மகாவித்தியாலய அணியினர் எதிர்பார்த்திராத தருணத்தில் ஊடுருவிய சென்.அன்ரனிஸ் வீரர்கள் ஒரு கோலை அடித்தனர் . இதனால் ஆட்டத்தின் விறுவிறுப்பு இன்னும் அதிகரித்தது. பதிலடி கொடுக்க புங்குடுதீவு மகாவித்தியாலய வீரர்கள் ஆக்ரோஷமாகப் போராடினர். ஆயினும் இந்த ஆக்ரோஷத்தின் மூலம் அவர்கள் விடுகின்ற தவறுகளை மிகச் சரியாகக் கணித்து, அடுத்தடுத்து இரு கோல்களை அடித்தனர் சென்.அன்ரனிஸ் வீரர்கள்.

தமக்கு எதிராக 3 கோல்கள் அடிக்கப்பட்ட பின்னரும் கூட புங்குடுதீவு மகாவித்தியாலய வீரர்கள் அடங்கிப் போய்விடவில்லை. முன்னரைக்காட்டினும் வலிமையான போராட்டக் குணத்தோடு பந்தை கோல் கம்பத்தை நோக்கி நகர்த்துவதிலே குறியாக இருந்தன[illegible] எனினும் இந்த முயற்சிகளை இறுதிக் கணத்தில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் வீரர்கள் தகர்த்தெறிய, புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கோல் அடிக்கும் கனவு பலிக்காமலே போனது. இதனால் ஆட்ட நேர நிறைவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை தோற்கடித்து தீவக வலய சம்பியனானது. (ங-325)

## கரைச்சிப் பிரதேச செயலக அணி கிளி. மாவட்ட உதைபந்தில் வெற்றி

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டு அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிகளுக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான முதற்கட்ட போட்டிகளை இரண்டாம் கட்டமாக மாவட்ட ரீதியில் பிரதேச தெரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகளை நடத்திவருகின்றன.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் பூநகரி பிரதேச செயலகப் பிரிவு தெரிவு அணியை எதிர்த்து கரைச்சி பிரதேச செயலகப் பிரிவு தெரிவு அணி மோதிக்கொண்டது. ஆட்டநேர முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கரைச்சிப் பிரதேச செயலக தெரிவு அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது. (ங-23)



அரச அதிபர் வெற்றிக்கிண்ண போட்டியில் சிறப்பாக ஆடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி அனைத்துப் போட்டிகளிலும் மொத்தமாக 30 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது தாம்பெற்ற வெற்றிக்கிண்ணங்களின் நடுவில் வெற்றிக் களிப்புடன் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வீரர்கள். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லிக்கு கலக்கல் வெற்றி
# வீழ்ந்தது கொல்கத்தா அணி

சம்பியன்ஸ் லீக் தொடரை டெல்லி டேர்டெவில்ஸ் அணி வெற்றிகரமாக தொடக்கியது. நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.


தென்னாபிரிக்காவில் நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடக்கிறது. நேற்றுமுன்தினம் இரவு நடந்த 'ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் டெல்லி டேர்டெவில்ஸ், நடப்பு ஐ.பி.எல். சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

டெல்லி அணிக்கு அணித்தலைவர் ஜெயவர்தனா, சேவாக் இணைந்து நல்ல அடித்தளம் அமைத்தனர். இருவரும், பாலாஜி பந்துப் பரிமாற்றத்தில் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். பிரட் லீ பந்துப் பரிமாற்றத்திலும் ஜெயவர்தனா இரண்டு பவுண்டரிகள் அடித்தார். இதையடுத்து சுழல் நாயகன் சுனில் நரைனை அழைத்தார் கம்பீர். இதற்கு எதிர்பார்த்த பலன் கிடைத்தது. நரைனின் முதல் பந்தில் ஜெயவர்தனா (21) 'போல்டானார்'. சங்வான் பந்தில் சேவாக் (22) வெளியேறினார்.


தொடர்ந்து மிரட்டிய நரைன் சுழலில் 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இலக்குக் காப்பாளர் பிஸ்லா கைநழுவியதால் தப்பினார் கெவின் பீற்றர்சன். இதனை பயன்படுத்திக் கொள்ளாத அவர், பிரட் லீ வேகத்தில் 14 ஓட்டங்களுக்கு வெளியேறினார்.

கடைசி கட்டத்தில் ரோஸ் ரெய்லர், உன்முக்த் சந்த் சேர்ந்து அதிரடியாக ஆடினர். இவர்கள், பாலாஜி வீசிய ஆட்டத்தின் 17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 30 ஓட்டங்கள் எடுத்தனர். ரெய்லர் 36 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அடுத்த பந்துப் பரிமாற்றத்தை அருமையாக வீசிய நரைன் ஒரு ஓட்டம் மட்டும் கொடுத்து, உன்முக்த் (40), நமன் ஓஜா (0) ஆகிய 2 இலக்குகளை சாய்த்தார். அகார்கர் 8 ஓட்டங்கள் எடுத்தார். டெல்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளுக்கு 160 ஓட்டங்கள் எடுத்தது. இர்பான் (7) ஆட்டமிழக்காமல் இருந்தார். கொல்கத்தா சார்பில் நரைன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

சவாலான இலக்கை விரட்டிய கொல்கத்தா அணியின் முன்வரிசை வீரர்கள் சொதப்பினர். இர்பான் பதான் வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே இரட்டை அடி கொடுத்தார். 3 ஆவது பந்தில் கம்பீரை (0) ஆட்டமிழக்கச் செய்தார். 6 ஆவது பந்தில் பிஸ்லாவை (1) வெளியேற்றினார். மோர்னி மோர்கலின் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் ஆபத்தான பிரண்டன் மக்கலம் 'டக் அவுட்டாக', 1.1 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 3 ஓட்டங்கள் எடுத்து தத்தளித்தது. தொடர்ந்து மோர்னி மோர்கல் பந்தில் காயமடைந்த கலிஸ் (0), 'ரிட்டையர்ட் ஹர்ட்' முறையில் பவிலியன் திரும்பினார். சிறிது நேரத்தில் உமேஷ் யாதவ் வேகத்தில் யூசுப் பதான் (11) 'போல்டாக', நிலைமை மோசமானது.






பின்னர் மனோஜ் திவாரி (33), பாட்யா (22) இணைந்து சற்று போராடினர். பிரட் லீ (13) ஏமாற்ற, கொல்கத்தா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 108 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. ஆட்ட நாயகன் விருதை இர்பான் பதான் வென்றார்.


**பாவம் பாலாஜி**

கொல்கத்தா அணியின் பாலாஜி வீசிய ஆட்டத்தின் 17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் ரோஸ் ரெய்லர் ஒரு சிக்சர், பவுண்டரி அடித்தார். சந்த் தன்பங்கிற்கு 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் அடிக்க, இந்தப் பந்துப் பரிமாற்றத்தில் மட்டும் மொத்தம் 30 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. இதையடுத்து சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் 4 பந்துப் பரிமாற்றங்களில் அதிக ஓட்டங்கள் (61) விட்டுக் கொடுத்த பந்து வீச்சாளர்கள் வரிசையில் பாலாஜி இரண்டாவது இடத்தை பெற்றார். முதலிடத்தில் பெங்களூர் அணியின் ஸ்ரீநாத் அரவிந்த் ( 69 ஓட்டங்கள், எதிர், தெற்கு ஆஸ்திரேலியா, 2011) உள்ளார்.

**கலிஸ் காயம்**

பந்துகள் எகிறும் ஆடுகளத்தில் டெல்லி வேகப்புயல்கள் போட்டுத்தாக்க, கொல்கத்தா வீரர்கள் பெரிதும் அவதிப்பட்டனர். மோர்னி மோர்கல் வீசிய பந்து அனுபவவீரர் கலிஸ் விரலை தாக்க, ரத்தம் கொட்டியது. இதையடுத்து இவர் 'ரிட்டையர்ட் ஹர்ட்' முறையில் பவிலியன் திரும்பினார். பின்னர் துடுப்பெடுத்தாட வரவில்லை. இதே பந்துப் பரிமாற்றத்தில் யூசுப் கையிலும் பந்து தாக்கியது. அகார்கர் வீசிய பந்து, பாட்யாவின் விலா எலும்பு பகுதியை தாக்கியது. (5)

## அப்ரிடிக்கு ஓய்வு தேவை



பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவரான சயிட் அப்ரிடியின் துடுப்பாட்டம் நடந்து முடிந்த 'ரி-20' உலகக் கிண்ணத்தில் மோசமாக இருந்தது. பந்துவீச்சில் சிறப்பாக இருப்பதால் அவர் அணியில் தொடர்ந்து நீடித்து வருகிறார்.

இந்த நிலையில் அப்ரிடி சில காலம் ஓய்வில் இருக்க வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவரும், முன்னாள் இலக்குக் காப்பாளருமான மொய்ன்கான் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், அப்ரிடி ஓய்வு பெற வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இன்னும் சில ஆண்டு காலம் அவரது சேவை பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு தேவை. ஆனால் அவருக்கு தற்போது ஓய்வு தேவை. குடும்பத்தினருடன் அவர் சில காலம் ஓய்வில் இருப்பது அவசியம். இந்தியாவுக்கெதிரான தொடரில் அவர் புத்துணர்வுடன் விளையாட வேண்டும். சில காலம் ஓய்வில் இருந்தால் அவரது துடுப்பாட்டம் சிறப்பாக இருக்கும் எனவும் கூறியுள்ளார். (5)

## டோனி தலைமையில் தொடரலாம்




இலங்கையில் சமீபத்தில் நடந்து முடிந்த 'ரி-20' உலகக் கிண்ண போட்டியில் இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்து வெளியேறியது. தொடர்ந்து 3 ஆவது முறையாக 'ரி-20' உலகக் கிண்ணத்தில் அரையிறுதிக்கு தகுதி பெறாததால் அணித்தலைவர் மஹேந்திர சிங் டோனி கடும் விமர்சனத்துக்கு உள்ளனார்.

பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான வசிம் அக்ரம் டோனியின் அணித்தலைமை குறித்து கேள்வி எழுப்பி இருந்தார்.

3 வகையான ஆட்டத்திலும் அவர் அணித்தலைவராக இருப்பது கூடுதல் சுமை. இதனால் ஏதாவது ஒரு நிலையில் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகி ஆட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதற்கு இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் அஜீத் வடேகர், கெய்க்வாட், ராஜ்புத் பதிலடி கொடுத்துள்ளனர். இந்த நிலை வரை டோனி சிறந்த அணித்தலைவர் தான். அவரை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கக்கூடாது என்று கூறியுள்ளனர்.

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரான அஜீத் வடேகர் கூறுகையில், நெருக்கடியான நேரத்தில் அணியை கையாள்வதில் சிறந்தவராக டோனி உள்ளார். இதனால் இந்திய அணியின் அணித்தலைவரை நீக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. இந்திய அணியில் தான் பிரச்சினை இருக்கிறது என்றும் டோனியின் அணித்தலைவர் பதவியில் இல்லை எனவும் கூறியுள்ளார்.

முன்னாள் பயிற்சியாளர்களான கெய்க்வாட், லால்சந்த் ராஜ்புத் ஆகியோரும் டோனி அணித்தலைவர் பதவியில் நீடிக்க வேண்டும். அவரே சிறந்த அணித்தலைவராக திகழ்கிறார் என்றும் அணித்தலைவர் பதவி தனக்கு கூடுதல் நெருக்கடி இருப்பதாக அவர் நினைக்கவில்லை எனவும் கூறியுள்ளனர்.

லால்சந்த் ராஜ்புத், 2007 ஆம் ஆண்டு டோனி தலைமையில் 'ரி-20' உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிழ்ந்தது டோனி படை



சம்பியன்ஸ் லீக் தொடரில் ஆஸ்திரேலிய பிராந்திய அணியான சிட்னி சிக்ஸர்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதி வரை போராடி 14 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்று வரும் சம்பியன்ஸ் லீக் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலிய பிராந்திய அணியான சிட்னி சிக்ஸர்ஸ் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சிட்னி அணி வொட்ஸன் - லம் ஜோடியின் உதவியுடன் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்டது. வொட்ஸனின் அதிரடி வேட்டையால் முதலாவது இலக்குக்கு 50 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டன. வொட்ஸன் 30 பந்துகளில் 46 ஓட்டங்களை விளாசிய நிலையில் வெளியேறினார். பின்னர் மடின்ஸன் மற்றும் அணித் தலைவர் பரட் ஹடின் இணைந்து மத்திய வரிசையில் சுமாரான இணைப்பாட்டத்தைப் பகிர்ந்தனர். இவர்கள் இருவரையும் அஸ்வின் ஒரே பந்துப் பரிமாற்றத்தில் வெளியேற்றி நெருக்கடி கொடுத்தார்.

இருந்தும் சுதாகரித்த சிட்னி அணி இறுதிப் பந்துப் பரிமாற்றங்களை சரியாகப் பயன்படுத்தி ஓட்டங்களைக் குவித்தது. ஹென்றிக்ஸின் இறுதிக் கட்ட அதிவேக அதிரடியில் சென்னை அணி தகர்ந்தது. இறுதி இரு பந்துப் பரிமாற்றங்களில் மாத்திரம் 30 ஓட்டங்கள் விளாசப்பட சிட்னி சிக்ஸர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஹென்றிக்ஸ் 23 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 49 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் சென்னை சார்பில் அஸ்வின் 2, ஹில்பென்ஹாஸ், ஜடேஜா தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பலமான இலக்குக்கு பதிலளிக்கத் தொடங்கிய சென்னை அணி ஆரம்பத்திலிருந்தே திணறியது. முரளி விஜய், மைக் ஹஸி சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்த தவறியதுடன் பவர்பிளேயையும் வீணடித்தனர். இருந்தும் விஜய் ஓர் ஓட்டத்துடன் இரண்டாவது பந்துப் பரிமாற்றத்தில் வெளியேற களமிறங்கிய பிளஸிஸ் அதிரடியாகப் போட்டுத் தாக்கினார். அவரது அதிரடியுடன் சென்னை அணி 50 ஓட்டங்களைத் தாண்டியது. இருந்தும் பிளஸிஸ் களத்தில் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. 25 பந்துகளில் 43 ஓட்டங்கள் விளாசிய நிலையில் வெளியேறினார். தொடர்ந்து மைக் ஹஸியும் ஆட்டமிழந்தார்.

அதன் பன்னர் களமிறங்கிய ரெய்னா அதிரடியில் கலக்க மறுமுனையில் பத்திரிநாத் பந்துகளை வீணடித்தார். ரெய்னாவின் அதிரடி சென்னையின் வெற்றிக்கான வாய்ப்புக்களை அதிகரித்தது. பந்துகளை வீணடித்த பத்திரி 6 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப அணித்தலைவர் டோனி களமிறங்கினார். ரெய்னா 28 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்த ரெய்னாவின் அதிரடியை ஹென்றிக்ஸ் முடிவுக்கு கொண்டு வந்தார். அதே பந்துப் பரிமாற்றத்தில் டோனியும் ஆட்டமிழக்க சென்னையின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இருந்தும் இறுதியில் அஸ்வின் தனித்துப் போராடியும் பலன் கிடைக்கவில்லை. அஸ்வின் 9 பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார். இறுதியில் சென்னை 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் ஹென்றிக்ஸ், ஸ்ராக் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சகலதுறைகளிலும் கலக்கிய ஹென்றிக்ஸ் தெரிவானார்.

(5)

**வெளிவந்து விட்டது**

கிராம சேவகர் தரம் III ற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான
போட்டிப் பரீட்சை வழிகாட்டி- 2012

- இப்பரீட்சைக்கு என விசேடமாக தயாரிக்கப் பட்டது.
- இலவச இணைப்புக்கள் பெற்றுக் கொள்ள முடியும்
- எதிர்பார்ப்பு வினா விடை தொகுப்பு
- விலை ரூபா 350/=

By.P. கமல்தாசன்

கிடைக்கும் இடங்கள்:- பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை புத்தகசாலைகள்.

(சி/4158)(3.14)

**கிராம சேவகர் போட்டிப் பரீட்சை விசேட வகுப்பு**

பிரிவு II நாளை ஆரம்பம் செவ்வாய் வியாழன் 3 மணி - 5 மணிவரை
பிரிவு I ஒவ்வொரு சனியும் 1 மணி - 5 மணிவரை.
நடைபெறுகின்றது.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

## ஐ.பி.எல் புதிய அணித் தேர்வு

ஐ.பி.எல் போட்டியிலிருந்து டெக்கான் சார்ஜர்ஸ் அணியை நீக்கி விட்டதைத் தொடர்ந்து அதற்குப் பதிலாக புதிய அணியைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளில் இந்திய கிரிக்கெட் சபை இறங்கியுள்ளது.

நிதிப் பிரச்சினையில் சிக்கித் தடுமாறிய ஹைதராபாத் டெக்கான் சார்ஜர்ஸ் அணி அறிவிக்கப்பட்ட திகதிகளுக்குள் குறிப்பட்ட பணயத் தொகையை கட்டவில்லை. இதனால் ஐ.ப.எல் குழுவிலிருந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை டெக்கான் அணியை நீக்கி விட்டது.

இதையடுத்து புதிய அணியை தெரிவு செய்ய கேள்வி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மொத்தம் 12 நகரங்கள் இதற்காக அழைக்கப்பட்டுள்ளன. அவை அகமதாபாத், கட்டாக், தர்மசாலா, இந்தூர், ஹைதராபாத், கான்பூர், கொச்சி, நாக்புர், நொய்டா, ராஜ்கோட், ராஞ்சி மற்றும் விசாகப்பட்டனம்.

இந்த போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் ஒக்டோபர் 25 ஆம் திகதிக்குள் தங்களது கேள்வி கோரல்களை சமர்ப்பக்க வேண்டும் என்று கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

(5)



## பங்களாதேஷ் சுற்றுத் தொடருக்கான மே.தீவுகள் அணி அறிவிப்பு

பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இடம்பெறவுள்ள தொடருக்கான 15 பேர் கொண்ட அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உலக 'ரி-20' தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் வெற்றிகொண்டுள்ள நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி மீது அதிக கவனம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தத் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பங்குபற்றவுள்ளது.அறிவிக்கப்பட்டுள்ள அணியில் அண்மையில் நியுசிலாந்து அணி அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்றிய மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து அட்ரியன் பரத், படல் எட்வேர்ட்ஸ் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அணியில் டெரன் பிராவோ, கேர்க் எட்வேர்ட்ஸ், வீரசம்மி பேர்மாள் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் டெரன் பிராவோ கடந்த தொடரில் உபாதை காரணமாகப் பங்குபற்ற முடியாது போனதோடு, வீரசம்மி பேர்மாள் முதன்முதலாக மேற்கிந்தியத்தீவுகள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டி, 5 ஒருநாள் சர்வதேசப் போட்டி, ஒரு 'ரி-20' சர்வதேசப் போட்டி ஆகியன நவம்பர் 3 ஆம் திகதி முதல் டிசெம்பர் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள அணி:

டெரன் சமி, டினேஷ் ராம்டின், ரீனோ பெஸ்ட், டெரன் பிராவோ, ஷிவ்நரின் சந்தர்போல், நர்சிங் டியோநரைன், கேர்க் எட்வேர்ட்ஸ், அஸ்ஸட் புடாடின், கிறிஸ் கெய்ல், சுனில் நரைன், வீரசம்மி பேர்மாள், கெரான் பவல், ரவி ராம்போல், கமர் ரோச், மார்லன் சாமுவேல்ஸ். (5)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
விசேட கட்டணக் கழிவு

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுகலான பயிற்சிகளுடன் நடாத்கப்படுகிறது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** (International English Language Testing System)
(We guarantee minimum band 5.0 Upwards)
Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 15.10.2012 | Batch II - 18.10.2012 | Batch III - 22.10.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com

(23606)(15-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

www.astron.lk
Dedicated to Quality Healthcare Solutions - Since 1956

# முக்கிய அறிவித்தல்

## கோரெக்ஸ் வியாபாரக் குறி அடங்கிய மருந்துப்பொருள்களின் தற்காலிக விற்பனை நிறுத்தம்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துப் பொருட்களின் விற்பனையை நிறுத்துவதற்கு மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு அறிவிக்குமாறு சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்பம் மற்றும் விநியோகப் பிரிவின் இயக்குநர் (D/MT&S) அஸ்ரோன் நிறுவனத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதனால் கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துப் பொருள்களை இருப்பில் வைத்துள்ள மற்றும் விற்பனை செய்கின்ற எல்லா மருந்தகங்களும் மறு அறிவித்தல்வரை விற்பனையை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கையினால் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள, பல ஆண்டுகளாக கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துகளை நோயாளிகளுக்கு சிபாரிசு செய்து வரும் வைத்திய நிபுணர்களுக்கும் அவற்றினை உபயோகப்படுத்தும் நோயாளிகளுக்கும் எமது ஆழ்ந்த வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

வைத்திய நிபுணர்களுக்கும் மருந்தாளர்களுக்கும் நாம் தெரிவிப்பது என்னவெனில்,

1. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D மருந்துப் பொருட்கள் **தடை செய்யப்படவில்லை.** சுகாதார அமைச்சினால் அவற்றின் விற்பனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.
2. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D என்பன **பாதுகாப்பான, நற்பயன் அளிக்கக் கூடிய** மற்றும் இலங்கை மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையினால், பதிவு செய்யப்பட்ட மருத்துவ நிபுணர்களினால் பரந்தளவில் சிபாரிசு செய்யப்படும் மருந்துப் பொருள்களாகும்.
3. கோரெக்ஸ் ஆனது **44 ஆண்டுகளாக** உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதுடன் கோரெக்ஸ்-D ஆனது **34 ஆண்டுகளாக** உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
4. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D என்பன **உலக சுகாதார நிறுவனத்தின் நிகழ்கால நல் உற்பத்தி நடைமுறைகளுக்கு (WHO cGMP)** அமைய உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.
5. சந்தைக்கு அறிமுகப்படுத்திய காலத்தில் இருந்து கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D என்பவற்றின் **தரத்தில் குறைபாடோ அல்லது உற்பத்தி சூத்திரத்தில் மாற்றமோ ஏற்படவில்லை.**
6. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D ஆகியன பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களால் வழங்கப்படும் **மருந்து சிட்டைகளை** பயன்படுத்தி, பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் மூலம் மருந்தகங்களில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.
7. இவை மருந்து அடங்கிய பெட்டிகளிலும் லேபல்களிலும் **குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில்** மட்டுமே உட்கொள்ளப்பட வேண்டும். இதற்காக இவ்விரண்டு மருந்து பொருள்களுடனும் அளவு கரண்டி வழங்கப்பட்டுள்ளது. **(கொடுக்கப்படக்கூடிய அதிகூடிய அளவு ஒரு முறைக்கு 5 மி.லீ. (ஒரு தேக்கரண்டி) வீதம் ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு முறை).**
8. கோரெக்ஸ் மற்றும் கோரெக்ஸ்-D இல் **எந்தவிதமான மதுசாரமும் சேர்க்கப்படவில்லை.**

அஸ்ரோன் நிறுவனமானது அவர்களுக்கெதிராக அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ள **எதிர் மறை பிரசாரத்தின்** போது தங்களுடன் ஆதரவாகவும், கரிசனையுடனும், புரிந்துணர்வுடனும் இருந்த பின்வருபவர்களுக்கு தமது நன்றிகளை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

1. வைத்திய நிபுணர்கள்
2. பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள்
3. ஸ்ரீ லங்கா மருந்துகள் உற்பத்தியாளர்கள் சங்கம் (SLPMA)
4. ஸ்ரீ லங்கா மருந்துகள் இறக்குமதியாளர்கள் சங்கம் (SLCPI)
5. பொது மக்கள்

அஸ்ரோன் நிறுவனம் முழுமையான இலங்கையர்களின் நிறுவனம் என்பதில் பெருமையடைகின்றது.

உள்ளூர் மருத்துவ சந்தையில் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்தும், **இலங்கையின் மிகப்பெரிய தனியார் மருந்து உற்பத்தி நிறுவனமாக** அஸ்ரோன் திகழ்கின்றது.

அஸ்ரோன் நிறுவனமானது பலதரப்பட்ட உயர்ரக தரம் வாய்ந்த **மருந்துப் பொருள்கள், போசனை உப உணவுகள் மற்றும் விலங்குநல உற்பத்திப் பொருள்கள்** என்பவற்றை ஆராய்ச்சி அபிவிருத்தி செய்வதுடன் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றையும் செய்து வருகின்றது.

அஸ்ரோன் நிறுவனமானது தரம் வாய்ந்த சுகாதார நல முடிவுகளை வழங்குவதன் மூலம் இலங்கை மக்களின் சுகத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதில் முழுமையாக தன்னை அர்ப்பணித்துள்ளது.

**Astron Limited,** 688, Galle Road, Ratmalana, Sri Lanka. Tel: +94 11 2636141 Fax: +94 11 2636173 E-mail : astron@astron.lk www.astron.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் அதிபர் பரீட்சை இன்று

வடமாகாணத்திலுள்ள அஞ்சல் ஊழியர்களுக்கான அஞ்சல் அதிபர் பொறுப்பு பரீட்சை நடைபெறவுள்ளது என வடமாகாண பிரதி தபால் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் தரம் அ1 , அ2 உத்தியோகத்தர்களுக்கான அஞ்சல் அதிபர் பொறுப்பு பரீட்சையானது இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அஞ்சல் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் வடமாகாணத்திலுள்ள 15 உத்தியோகத்தர்கள் தோற்றவுள்ளனர்.

இதுவரைகாலமும் இந்தப் பரீட்சையானது வெளி மாகாணங்களிலேயே நடைபெற்று வந்தது. இதனால் வடமாகாண பரீட்சார்த்திகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வந்தனர். இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் நடைபெறுகின்றது.

இந்தப் பரீட்சையில் சித்தியடையும் ஊழியர்களினால் அஞ்சல் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (3-13)

## போட்டிப் பரீட்சை

இலங்கை கணக்காளர் சேவையின் தரம்-III இற்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை எதிர்வரும் 27ஆம், 28 ஆம், திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (3-405)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
ந.புலேந்திரகுமார் அவர்களின்
அன்புத் தந்தை

**பஞ்சாட்சரம் நடராசா**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

மு/மல்லாவி மத்திய கல்லூரி. (21129) கல்லூரிச் சமூகத்தினர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்

**திரு.சு.பரமேஸ்வரன்** அவர்கள்

அதிபர் சேவை தரம் 2-II இற்கு நியமனம் பெற்றதையிட்டு மனமார வாழ்த்துகின்றோம்.

யாழ். பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. (24171) அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**பத்மநாதன் மகேந்திரராசா**

(பூநகரி தபாலக அஞ்சல் உத்தியோகத்தர்)

அவர்கள் 2012 உலக அஞ்சல் தினத்தையொட்டி 06.10.2012 கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது தபால்துறை அமைச்சினாலும் தபால் திணைக்களத்தினாலும் நடத்தப்பட்ட தபால் அஞ்சலர் தெரிவில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமையால் மனமகிழ்ந்து மேன்மேலும் சேவையில் சிறந்து விளங்க பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
உறவினர், செட்டியகுறிச்சி, பூநகரி.

(21130)




## கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை
## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



**ஞானசேகரம் ரவிக்குமார்**

(SLPS - 2 -II) [அதிபர்]

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் சிறந்த அதிபருக்கான "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ள எமது அதிபரை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன், அவர் அதிபர் சேவையில் SLPS - 2 - IIஇற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**செல்வி சின்னமணி சகுந்தலாதேவி**

[தரம்– 5 வகுப்பாசிரியர்]

கிளிநொச்சி கல்வி வலயத்தில் சிறந்த ஆசிரியருக்கான "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ள ஆசிரியரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### சாதனையாளர்கள்

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் (2012) 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி



**செல்வி சண்முகராசா டிந்துசா**

அவர்களையும்
100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட
செல்வி சந்திரகுமார் லோஜினி - 140
செல்வி பிரான்சிஸ் தர்சினி- 117 மாணவிகள்

இருவரையும் இவர்களுக்குக் கற்பித்த வகுப்பாசிரியர், அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

(24127)

## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும்

**திரு.இ.சந்திரகுமார்**

(B.A.(HONS), Dip in Edu.

அவர்கள் 02.10.2012 அன்று கொழும்பு அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் 2 - II இற்கு உரிய பதவி உயர்வு நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பெருமை மிகு நிகழ்வைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பதவி உயர்வுகளைப் பெற்றுச் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள்,**
மு/கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(24124)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org